அப்துஸ்ஸமது ஆலிம் புலவரின்

# மரணரெத்தின மாலையும் மற்றும் சில படைப்புகளும்

141

அப்துஸ்ஸமது ஆலிம் புலவர்

வெளியீடு
உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு - 2002
இலங்கை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துஸ்ஸமது ஆலிம் புலவரின்

# மரணரெத்தின மாலையும் மற்றும் சில படைப்புகளும்

THAJUL ATHEEB, KALABOOSHANAM
ISLAMIYA ILAKKIYAKKAVALER
S.A.R.M. SEYED HASSAN MOULANA, J.P.
MEMBER OF MEDIATION BOARD
NINTAVUR-12

துறைமுகங்கள் அபிவிருத்தி, கப்பற்றுறை அமைச்சு – கிழக்கு
அபிவிருத்தி, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சு,
இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தின் ஆதரவுடன்
2002. 10. 22, 23, 24 ஆகிய திகதிகளில் கொழும்பில் நடாத்திய
உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் வெளியிடப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | அப்துஸ்ஸமது ஆலிம் புலவரின் மரணரெத்தின மாலையும் மற்றும் சில படைப்புகளும் |
| ஆசிரியர் | : | அப்துஸ்ஸமது ஆலிம் புலவர் |
| விடயம் | : | கவிதை |
| வெளியீடு | : | உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு – 2002 கொழும்பு – இலங்கை. |
| வெளியீட்டுத் திகதி | : | 15. 10. 2002 |
| உரிமை | : | முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |
| கணனி வடிவமைப்பு | : | யோகாம்பிகை குமாரசாமி<br>ஜெலீலா காதர் மொஹிடீன் – மருதமுனை |
| அட்டை வடிவமைப்பு | : | ஜெலீலா காதர் மொஹிடீன் – மருதமுனை |
| அச்சிட்டோர் | : | ஏ. ஜே. பிரின்ட்ஸ்<br>44, புகையிரத வீதி,<br>தெஹிவளை. |
| ISBN. No. | : | 955-8806-11-0 |

| | | |
|---|---|---|
| Title | : | Abdussamadu Alim Pulavarin<br>Marana rethina Malayum<br>Matrum sila Padaippukalum |
| Auther | : | Abdussamadu Alim Pulavar |
| Subject | : | Poems |
| Publisher | : | World Islamic Tamil Literary Conference - 2002<br>Colombo - Sri Lanka. |
| Published On | : | 15.10.2002 |
| (C) | : | Department of Muslim Religios And Cultural Affairs |
| Computer Tpysetting | : | Yogambigai Kumarasami<br>Jaleela Cader Mohideen - Maruthamunai. |
| Cover Design | : | Jaleela Cader Mohideen - Maruthamunai. |
| Printers | : | A J Prints,<br>44, Station Road,<br>Dehiwala. |
| ISBN. No. | : | 955-8806-11-0 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அப்துஸ்ஸமது ஆலிம் புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

786

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்

# மரணரெத்தின மாலை

இயற்றியவர்:

மஹ்மூது அப்துஸ்ஸமது ஆலிம் சாஹிபு

நச்சிக்குடா-பெரிய கிண்ணியா

பார்வை இட்டவர்:

C. M. அகமது காசிம் புலவர்,

கொழும்பு.

அச்சிட பொருளுதவியவர்:

A. M. இஸ்மாயில் - மேசனர்,

வாழைச்சேனை. E. P.

விற்ப்பனையாளர்:

ம. மு. அ. ஆலிம் சாஹிபு,

சமதியா குர்ஆன் பாடசாலை,

ஒட்டமாவடி, வாழைச்சேனை P. O.

ஆசிரியரின் அனுமதியன்றி எவரும் அச்சிடக்கூடாது.

1966.

இதன் விலை சதம் 75



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

786

# அருமை நபியவதார அமிர்த ரஞ்சிதம்.

## முதற்பாகம்

இஃது இலங்கை திரிகோணமலை நாச்சி நகரில்
பிறந்து பெரிய கிண்ணியாவில் வாசஞ்செய்தடங்கிய
ஆரிப் - செய்யிது மஃமூது அவர்களின்
சிரேஸ்ட்ட புத்திராரியவர் தற்காலம்
மட்டுக்களப்பு ஒலுவிலூரில் வாசஞ் செய்பவருமாகிய
ஜனுப் செய்யிது அப்துல்ஸமது
ஆலிம் சாஹிபு அவர்களால் பாடி

மட்டுக்களப்பு
அர்ச். செபஸ்தியார் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை சதம் 50

(கிடைக்குமிடம்)

ம. மு. அ. ஆலிம்சாஹிபு
சமதியா புத்தகசாலை
ஒட்டமாவடி
வாழைச்சேனை
1953

தந்தி விலாசம்:
சமதியா புத்தகசாலை
ஒட்டமாவடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

786

ஈமான் விளக்கம்
இஸ்லாம்-முழக்கம்

இஃது இலங்கை திரிகோணமலை நாச்சிகதில்
பிறந்து பெரிய கிண்ணியாவில் வாசஞ்செய்த
ஸங்கிய - ஆரிப் - செய்யிது மஹ்மூது
அவர்களின் சிரேஸ்ட புத்திர
ராகியவர்களுக்கு காஸிம்-மீட்
டுக்களைப் புதுவிலில்
வாசஞ்செய்வரு
மாகியனுடைய
செய்யிது அப்துஸ்ஸமது. ஆலிம் சாஹிபு
அவர்களால் பாட்டு-மட்டுக்களைப்புதி
செபஸ்தியார் அச்சியந்திர சாலை
யில் பதிப்பிக்கப்பட்டது
கிடைக்குமிடம்
ம-மு-அ-ஆலிம் சாஹிபு
சமதியா புத்தகசாலை
ஓட்டமாவடி
வாழைச்சேனை-P.O

இரண்விழி 1953 சுதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

துறைமுகங்கள் அபிவிருத்தி, கப்பற்துறை அமைச்சு - கிழக்கு அபிவிருத்தி, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சு, இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தின் ஆதரவுடன் மாண்புமிகு அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்களின் பணிப்பின் பேரில் 2002 ஒக்டோபர் மாதம் 21, 22, 23ம் திகதிகளில் நடத்தும் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் வெளியிடப்படுகின்ற நூல்களில் இதுவும் ஒன்று.

பதிப்பிக்கப்படாமல் சிதைவுறு நிலையிலுள்ளவையும், பிரதிகள் பெறமுடியா நிலையிலுள்ளவையுமான நம்முன்னோரால் ஆக்கப்பெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கியங்களை மறுபதிப்புச் செய்வது என்ற மாநாட்டு நோக்கத்தின் அடிப்படையில் புலவர் பாடி அச்சில் வெளிவந்த ஆனால் பிரதிகள் கிடைக்கப்பெறாத 'மரணரெத்தினமாலை', 'அருமைநபியவதார அமிர்த ரஞ்சிதம்' மற்றும் ஏனைய புலவர்கள் பாடிய அப்துஸ்ஸமது ஆலிம் புலவர் சிறு பிரசுரங்களாக வெளியிட்ட 'ஜர்மன் வெள்ளிப் பாட்டு', 'ஞான ஒப்பாரி' மற்றும் புலவரின் கைப்பிரதியாகவிருந்த வெளியிடப்படாத அவரது பாடல்கள் சிலவும் அடங்கிய இத்தொகுப்பு 'அப்துஸ்ஸமது ஆலிம் புலவரின் மரணரெத்தினமாலையும் மற்றும் சில படைப்புக்களும்' என்ற பெயரில் வெளியிடப்படுகின்றது.

பிரதிகளைப் பத்திரப்படுத்தி வைத்திருந்து மாநாட்டின் நிமித்தம் அவற்றை வெளியிட உவந்தளித்த புலவரின் ஏக புதல்வியான திருமதி. பதுறுன்னிஸா சிஹாப்தீன் அவர்களுக்கும் மற்றும். புலவர் வெளியிட்ட 'ஜர்மன் வெள்ளிப் பாட்'டின் பிரதியைத் தேடித்தந்த பாவலர் சாந்தி முஹியித்தீனுக்கும் புலவரின் புகைப்படத்தை அனுப்பியிருந்த புலவரின் பேரப்பிள்ளைகளில் ஒருவரான நியூஸிலாந்தில் வசிக்கும் அருஸ் ஷரிபுத்தீனுக்கும் இப்பிரதிகளைப் பார்வையிட்டு நூல் வடிவாக்க உழைத்த கவித்தாரகை அல் அஸுமத், கவிமணி மௌலவி எம். எச். எம் புகாரி (பாலாஹி), பாவலர் சாந்தி முஹியத்தீன் ஆகியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**
(தலைவர் - மாநாட்டு அமைப்புக்குழு)

**அஷ்ர:.ப் சிஹாப்தீன்**
(மாநாட்டுப் பொதுச் செயலாளர்)

**தாஸிம் அஹமது**
(மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அறிஞர் அப்துஸ்ஸமது ஆலிம் புலவரின்

# மரணரெத்தின மாலையும் மற்றும் சில படைப்புகளும்

அறிஞர் அப்துஸ்ஸமது ஆலிம் புலவர் திருகோணமலை மாவட்டத்திலுள்ள நாச்சிக்குடாவில் பிறந்தவர். மஹ்மூது - சுலைகா தம்பதியரின் அருமைப் புதல்வர். இவரை ஊர் மக்கள் 'புலவர்' என்றே அழைத்தனர். 'சிலோன் தர்வேஸ்' என்ற ஒரு புனைப் பெயரும் புலவருக்கு உண்டு. இவர் திருகோணமலைப் பகுதியிலுள்ள ஜாகுவாப் பள்ளி அறபு மத்ரஸாவில் மார்க்கக் கல்வி பயின்றவர்.

தாம் பயின்ற மார்க்கக் கல்வியைக் கற்றுக் கொடுக்கும் பணியில் இவர் நீண்ட காலம் ஈடுபட்டுள்ளார். இதற்காக இலங்கையில் பல பகுதிகளிலுமுள்ள கிராமங்களுக்குச் சென்றுள்ள புலவர் இப்பணியுடன் புத்தக வியாபாரமும் செய்துள்ளார். கண்ணாடியில் 'பெயின்ற்' கொண்டு அரபு எழுத்தணி வரைவதிலும் வல்லவர். இவரது அரபு எழுத்தணிப் படங்கள் சட்டமிடப்பட்டு பல வீடுகளில் இன்னமும் உள்ளன.

கிண்ணியாவின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த ஜனாப் அபூபக்கர் அவர்களின் மூத்த சகோதரியைத் திருமணம் செய்த இவர், திருகோணமலையில் தங்கி மார்க்கக் கல்வி போதித்தார். பின்னர் மனைவியைப் பிரிந்து தனியாக வாழ்ந்து வருங் காலத்தில் மட்டக்களப்பு, அக்கரைப்பற்று போன்ற பிரதேசங்களில் மார்க்கப் பணியில் ஈடுபட்டார். இக்காலப் பிரிவில் ஒலுவில் பகுதியில் இரண்டாவது திருமணஞ் செய்து சில காலம் அங்கு வாழ்ந்து பின்னர் ஓட்டமாவடியில் வந்து வாழ்ந்து மறைந்தார்.

இவரைப்பற்றிய ஆரம்ப காலத் தகவல்களை கிண்ணியாவில் வாழ்ந்து அண்மையில் காலஞ் சென்ற புலவரின் சகோதரரான அப்பாஸ் அவர்களிடம் பெற்றுத் தந்தவர் புலவரின் இரத்த உறவினரான ஜனாப் ஏ.எஸ்.எம். முக்தார் அவர்கள், மாநாட்டின் பொதுச் செயலாளர் அஷ்ர.ஃப் சிஹாப்தீன் அவர்கள் புலவரின் பேரப் பிள்ளை என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமிய மார்க்க அறிவும் தமிழ்ப் புலமையுமுள்ள அப்துஸ்ஸமது புலவரின் இலக்கியப் படைப்புக்களில் ஒரு பகுதி 'அப்துஸ்ஸமது ஆலிம் புலவரின் அழகு தமிழ்க்காவியங்களும் சிந்தைக்கினிய சிந்துகளும்' என்ற தலைப்பில் மாநாட்டின் நிமித்தம் வெளியிடப்படும் வேறொரு நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளது. 'அறிஞர் அப்துஸ்ஸமது ஆலிம் புலவரின் மரணரெத்தின மாலையும், மற்றும் சில படைப்புக்களும் என்ற தலைப்பில் வெளியிடப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலில் பின்வருவன அடங்குகின்றன.

1. மரணரெத்தின மாலை
2. அருமை நபியவதார அமிர்த ரஞ்சிதம்
3. ஜர்மன் வெள்ளிப் பாட்டு
4. ஞான ஒப்பாரி
5. நபி பெருமானார் (ஸல்) அவர்களின் இறுதி வேளை
6. ஈமான் விளக்கம் இஸ்லாம் முழக்கம்
7. றமளான் மாசமே
8. றமளான் ஸலவாத்

இவற்றில் முதல் நான்கும் அச்சில் வெளியானவை. ஏனையவை கையெழுத்துப் பிரதிகளாக நமக்குக் கிடைத்தவை. மரணரெத்தினமாலை 1966 ல் மட்டக்களப்பு ராஜன் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இதன் விற்பனை விலை 75 சதம் என்று குறிக்கப்பட்டுள்ளது. இதனைப் பார்வையிட்டவர் கொழும்பு சீ. எம். அகமது காசீம் புலவர் என்றும் அச்சிடப் பொருளுதவியவர் வாழைச்சேனை இஸ்மாயில் மேசனார் என்றும் பிரசுரத்தின் அட்டையின் முன்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மரணரெத்தினமாலை, மரணவேளையின் பயங்கரம், கப்ரில் நிகழும் சம்பவங்கள், மறுமை நாளின் நிலைமை போன்றவற்றை விபரிக்கின்றது. மரணத்தையும் மறுமையையும் மறந்து பாவச் செயல்களில் மூழ்கியிருக்கும் மக்களைப் பார்த்து வேதனைப்படும் புலவர், மக்களுக்கு அறிவுரை நல்கும் பான்மையில் இம்மாலையில் பல பாடல்களைப் பாடியுள்ளார். இதிலுள்ள அழகு தமிழ்ப் பாடல்கள், புலவரின் மார்க்க அறிவின் ஆழத்தையும் தமிழ்ப் புலமையையும் நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றன.

'அருமை நபியவதார அமிர்த ரஞ்சிதம்' 1953 ல் மட்டக்களப்பு, அர்ச் செபஸ்தியன் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. விற்பனை விலை 50 சதம் குறிக்கப்பட்டுள்ள இவ்வெளியீடு முதற்பாகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாம் பாகம் வெளிவந்ததற்கான எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை. 'அருமை நபியவதார அமிர்த ரஞ்சிதம்' முகம்மது (ஸல்) அவர்களின் பிறப்புப் பற்றிப் புலவர் பாடிய பாடல்களைக் கொண்டிருக்கிறது.

'நபி பெருமானார் (ஸல்) அவர்களது இறுதிவேளை' என்னும் பாடல்கள் நபியவர்களின் 'வபாத்' குறித்து விபரிக்கின்றது. 'றமளான் மாசமே' என்னும் பாடல்கள் புனித றமளான் மாதத்தை வரவேற்கும் பான்மையில் அமைந்துள்ளது. றமளான் மாதத்தில் பள்ளிவாயல்களிலும் ஹதீஸ் மஜ்லிஸ்களிலும் இல்லங்களிலும் சாந்தி நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதும் வழக்கம் தொன்று தொட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து வருகிறது. அத்தகைய ஸலவாத் பாடல்கள் பல புலவர்களால் மிகச் சிறப்பாகப் பாடப்பட்டுள்ளன. அவ்வாறான ஸலவாத் பாடல்களை நமது அப்துஸ்ஸமது ஆலிம் புலவர் அவர்களும் பாடியுள்ளார்கள். அப்பாடல்கள் 'றமளான் ஸலவாத்' எனும் தலைப்பில் இந்நூலில் இடம்பெறுகின்றது. 'ஈமான் விளக்கம் , இஸ்லாம் முழக்கம்' இஸ்லாமிய மார்க்க சம்பந்தப்பட்ட விடயங்களைப் பாடலில் சொல்லுகிறது.

'ஜர்மன் வெள்ளிப் பாட்டு'ம் 'ஞான ஒப்பாரி'யும் அப்துஸ்ஸமது புலவரின் ஆக்கங்களல்ல. 'இஃது சாய்ந்தமருதூர் சேவகனார் என்றழைக்கப்படும் மதிப்புக்குரிய உ.இ.ப.கி. காஸிம்பாவா புலவர் அவர்களால் பாடி மறைந்திருந்ததை அன்னாரின் மக மகவாய் வந்த மீ. லெ. மு.. இப்றாலெப்பை (இளைப்பாறும் கிராமத்தலைவர்) அவர்களால் கண்டெடுக்கப்பட்டு ஓட்டமாவடி சமதியா புத்தகசாலை மனேஜர் ம. மு. அப்துஸ்ஸமது ஆலிம் சாஹிபு அவர்களால் அச்சிடப்பட்டது' என்ற குறிப்பு 'ஜர்மன் வெள்ளிப்பாட்டு' பிரசுரத்தில் காணப்படுகிறது. இதன் விற்பனை விலையாக 25 சதம் குறிக்கப்பட்டுள்ளது.

'ஞான ஒப்பாரி', அட்டாளைச்சேனை மு. மு. அப்துர் ரஹ்மான் புலவரால் 'அந்தாதி' வடிவில் பாடப்பட்டது. 'மட்டக்களப்பு அட்டாளைச் சேனையில் வாசஞ் செய்தடங்கிய மதிப்புக்குரிய மகான் மு. மு. அப்துர்ரஹ்மான் ஆலிம் புலவர் அவர்களால் பாடி மறைந்திருந்ததை ஜனாப் மு. இ. உதுமாலெப்பை (ஏ.பி.ஓ) அவர்கள் கண்டெடுத்தெழுதி அப்பெரியவரின் புதல்வரிருவரின் அனுமதி பெற்று தற்காலம் ஓட்டமாவடி மகுமூது அப்துஸ்ஸமது ஆலிம் ஸாஹிப் அவர்கள் முயற்சியால் அச்சிடப்பட்டது' என்ற குறிப்பு இப்பிரசுரத்தில் காணப்படுகிறது.

இவை தவிர 'ஜர்மன் வெள்ளிப்பாட்டு' பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ள படி புலவர் பாடிய 'தாங்கிக் காவியம்', 'இக்கினியாக்கலை இனிய புகழ் அலங்காரக் காவியம்', 'தெள்ளு மூட்டைக் காவியம்' ஆகியன நமக்குக் கிடைக்கவில்லை.

கிடைத்தவற்றைப் பரிசீலித்து பதிப்புக் கேற்றவாறு ஒழுங்குபடுத்துவதில் பங்குகொள்ளக் கிடைத்ததையிட்டு மிகுந்த மனத் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

**பாவலர் சாந்தி முஹியித்தீன்**
**கவித்தாரகை அல் அஸூமத்**
**கவிமணி எம். எச். எம். புஹாரி (பலாஹி)**
20. 07. 2002.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணரெத்தின மாலை

### விருத்தம்

பூரணப் பொருளாய் ஆதி புவிமுதல் வானம் மற்றும்
காரண மனுஜின் னோடு கடல்மலை கரைகள் யாவும்
ஆரணத் தரசு செய்யும் ஹக்கனே கிருபை தந்து
வாரண மரண மாலை வழுத்தவும் துணைசெய் வாயே.

### தொங்கல்

1. ஆதி முகம்மது நபியைப்போற்றி
அழகாம் அசுஹாபி மாரைப்போற்றி
நீத முறுநபி மலரைப்போற்றி
நிலத்தில் வாழொலீ மாரைப்போற்றி
சோதி தூதரின் பேரரான
துலங்கும் ஹஸன்ஹுஸைன் தம்மைப்போற்றி
வேத உலமாக்கள் தம்மைப்போற்றி
விளங்கும் பாடலைத் தொடங்கினேனே.

2. விளங்கும் பாடலைக் கோர்வை செய்தேன்
வீணாய்க் காலங் கழித்தபாவி
வழங்கும் மஹ்மூது அப்துஸ்ஸமது
வாழும் மனதிலே ஆலோசித்துத்
துலங்கும் மௌத்துட சங்கதியைத்
தொல்லுல கத்தார் அறியவேநானும்
இலங்க உரைத்தேனே கவியதாக
இறையோன் என்பிழை பொறுக்கவேண்டி

3. வரிசை யாகிய குர்ஆனிலும்
வழங்கு ஹதீஸிலுங் கண்டெடுத்து
பிரிச மாகிய இமாம்கள்சொன்ன
பெரியதித் தாபிலுந் தெரிந்தெடுத்து
பரிசு பெறுகிற மானிடர்க்கும்
படைத்த மௌத்தின் வல்லபத்தை
உருசை யாகிய சொல்லிற்கேட்டு
உறுதி பெறுவீர் மாந்தர்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இந்தப் பாடலில் பிழையுண்டானால்
ஏது மறியாச் சிறுவன்சொல்வேன்
கந்தங் கமழ்நபி உம்மத்தோரே
கருணை உலமாக்கள் ஊரவரே
வந்த பிழையெலாஞ் சீர்திருத்த
வளமாய்ப் படித்தமல் செய்யும் பேர்க்குச்
சிந்தை பொருந்தமா இறைபெரியோன்
சீமான் றகுமத்துச் சொரிய ஆமீன்.

## மௌத்தைப் படைத்த காரணம்
### சந்தத் தாழிசை

5. இறையெனும் பொருளே பதிதரும் ஆதியே
செவியேறக் கவியிதை நானும்
தரையவர் புகழ மரண ரெத்தின
மாலையென் றிதற்குறு பெயரில்
முறையென மௌத்தின் முடிவினிற் சிலதை
மொழிந்திடச் சிறியவன் நாவால்
குறையற மொழிகள் கூறவே உதவிக்
கோமானே எனக்கருள் செய்வாய்

### தொங்கல்

6. இறையாம் பெரியவன் மௌத்தைப்படைத்து
ஏதும் ஹல்க்கொன்றும் அறியாமலே
மறைத்துத் திரைபோட்டு எழுபதல்பு
வல்ல சங்கிலி யாலேகட்டி
பெரிய சங்கிலி தொலைதூரங்கள்
பேரா மொருவா யிரம்வருஷம்
அறிய உரைக்கிறேன் தோழர்களே
அழகாம் ஹதீதிலே வந்தபடி

7. இந்த மௌத்தின் பாரதூரம்
ஏழு வானமும் ஏழுபூமி
அந்த ரங்கத்தைக் காணவது
அதிகம் பெரிதாகும் என்று சொன்னார்
விந்தை யாயொரு மலக்காகிலும்
விளங்கு மௌத்துட தலத்தைக் காணார்
சொந்த மாயொரு சத்தங்கேட்பார்
துலங்கு மௌத்தென்று விளங்கமாட்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஈது படிநிற்க இறையவனும்
இலங்கும் ஆதத்தைப் படைத்தபோது
வேதர் ஆதத்தின் பேரிலேதான்
மேலோன் மௌத்தினைச் சாட்டலானான்
நீதர் ஆதமும் சொல்லுவாராம்
நிலத்தில் மௌத்தையான் அறியேனென்று
போதர் ஆதமும் மௌத்தைக்காண
புகழை உடையவன் வெளியாக்கினான்.

9. அல்லாஹ் பெரியவன் மௌத்தைச்சொன்னான்
அன்பாய் உன்றன் கண்களெல்லாம்
நல்லாய்த் திறந்துதான் சிறகெல்லாமும்
நலமாய் விரித்து நரர்க்குமலால்
சொல்லாற் பறந்துநீ போவென்றோதத்
துலங்கு மௌத்து அனுமானிக்க
எல்லா மலக்குக்கும் ஆதத்துக்கும்
இறைவன் சொன்னானே மௌத்தைப்பாரும்.

10. பார்த்தார் ஆலமும் மலக்குகளும்
படைத்த மௌத்தின் வல்லபத்தைத்
தேற்றார் மனதையும் நின்றுபார்த்துத்
தியங்கி மயங்கியே சுழன்றுவீழ்ந்து
ஆத்தால் சிலபல காலம்மட்டும்
அந்த மயக்கத்தில் கிடந்துபின்பு
கேட்டார் இறையவன் இடந்தனிலே
கிருபை உடையோனே யாறஹீமே

11. இதனைக் காணவும் பெரிதானதாய்
இன்னும் படைப்புண்டா வல்லவனே
புதின மாகிய படைப்பிருந்தால்
புகல்வாய் எங்களின் முன்பிலாக
சதமாய் இறைவன் சொல்லுவானாம்
சங்கை பொருந்திய எம்மலக்கே
இதனைப் படைத்தவன் நானாகுமே
நானோ இதைக்காணப் பெரிதானவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. என்று பெரியவன் தானுமோதி
இலங்கு மௌத்தினைத் தான்பிடித்து
அன்று இஸ்ராயீல் இடத்திலேதான்
அழகாய் மௌத்தினை ஒப்படைக்கக்
கண்டு மௌத்துட வல்லபத்தைக்
கவல்வார் இஸ்ராயீல் இறையிடத்தில்
என்றும் பெரியவர் யாஹுதாவே
எப்படி இதைப்பிடிப் பேனென்றார்

13. அந்த மொழிகேட் டாண்டவனும்
அதற்குத் தகுமான குவ்வத்தையும்
விந்தை யாகவே பிடித்துக்கொள்ள
விளங்கும் இஸ்ராயீல் தனக்குமீந்தான்
சொந்தக் குவ்வத்து வந்துசேரத்
துலங்கு மௌத்தினை யவர்பிடிக்க
அந்த மௌத்துத்தான் இறையிடத்தில்
அன்பாய்க் கேட்டதே ஒருவாசகம்.

14. என்னைப் படைத்துத்தான் இம்மட்டிலும்
யாரும் அறியாமல் மறைத்துவைத்தாய்
வண்ண இஸ்ராயீல் கரத்திலீந்தாய்
வானம் பூமிக் கிடையில்நானும்
தன்னால் ஒருசத்தம் போடப்போறேன்
தக்க பெரியோனே விடைகொடென்ன
முன்னான் உத்தாரம் கொடுத்ததாலே
மூறி மௌத்தொரு சத்தம்போடும்

15. அந்தச் சத்தத்தின் பொருளாவது
ஆதத்துட மக்காள் நீங்களுந்தான்
எந்த ராஜாங்கம் ஆண்டாலுமாம்
ஏது வாழ்வினில் இருந்தாலுமாம்
உந்தம் வாழ்வெல்லாம் பனாவாக்குவேன்
உன்னை இதைவிட்டும் வெளியாக்குவேன்
கந்தங் கமழ்நபி சுன்னத்தையும்
ஹக்கு சொன்னதையும் மறந்திடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. ஆதத்தின் மக்களே நீங்களுந்தான்
அன்பாய் இருந்தாலும் உகந்தாலுமாம்
நீதி நெறிகளை உகந்தாலும்
நிலத்தில் காலியாய் இருந்தாலுமாம்
காத மெழுவானில் இருந்துவாழ்வு
கடைசிப் படுவானை ஆண்டாலுமாம்
போதம் வருத்தியே உங்களைநான்
பிடித்துப் போகுற மௌத்துநானே.

17. விட்டுப் பிரிப்பேனே பெண்டுபிள்ளை
விரும்பும் தாய்தந்தை உடன்பிறப்பைக்
கட்டி யறுப்பேனே பாவிகளைக்
கறக்கும் செக்கினில் எண்ணெய்போலே
துட்டுச் சீமானாய் இருந்தாலுமாம்
சுல்தான் ஹாக்கிமாய் இருந்தாலுமாம்
மட்டிப் பயலாக இருந்தாலுமாம்
மௌத்து உங்களை விடமாட்டேனே.

18. எந்தப் படைப்பாலும் என்னைவிட்டு
இருக்க முடியுமென நினைக்கவேண்டாம்
கந்த வடிவான மடங்கட்டிக்
காற்றுப் படாமலே இருந்தாலுமாம்
சந்த ராகங்கள் பாடினாலும்
சன்ன தாரைபோட் டிருந்தாலுமாம்
அந்த ராகங்கள் முழுவதையும்
அடித்து விழுத்திடும் மௌத்துநானே.

19. பிறந்த ஹல்க்குகள் யாபேரிலும்
புகழும் மௌத்தது விசயமானார்
சிறந்த சூரத்தைக் கண்டுகொள்வான்
சீறும் மௌத்துட வல்லபத்தை
இறந்து போபவன் கண்டுகொண்டு
யார்நீ எங்கே போவதென்பான்
துறந்து மௌத்தென்று சொல்லியுன்னை
துன்யா தனைவிட்டு எடுக்கவந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. இன்றுஉன் மக்கள் எத்தீமாகும்
உந்தன் பெண்சாதி அறுதாலியும்
பண்டுக் காலத்தில் நீதேடிய
பாரோர் முதலெல்லாம் வேறோர்கையில்
நன்றி ஏதாலும் செய்திருந்தால்
நாளும் ஹைருண்டாம் கபுறுக்குள்ளே
குன்றாமல் செய்தி கெடுதிவந்தால்
கூறு கேடாகி நரகில்வீழ்வாய்

21. இந்தவிதம் மௌத்து சொல்லக்கேட்டு
ஏதும் அறியாத பாலகர்கள்
அந்தப் புறத்திலே திரும்பிக்கொள்வான்
மௌத்து அவன்முன்னே வந்துநிற்கும்
வந்த செய்தியை அறிந்துமவன்
மறுபக்கம் மாறிப் படுத்துக்கொள்வான்
எந்தப் பக்கமாய்த் திரும்பினாலும்
மௌத்து அவன்முன்னே வந்துசொல்லும்.

22. என்ன அறியாயோ மானிடனே
நான்தான் உன்தாய் தந்தை றூஹை
முன்னால் வாங்கிய மௌத்தாமென்று
முழுதும் வரலாற்றை வடிவாய்ச் சொல்லி
அந்நேரம் என்னைத் தட்டஉன்னால்
ஆணவம் இல்லா மற்போனாய்
இந்நாள் நீபார்க்க உன்றூஹத்தான்
எடுத்துப் போகிறேன் என்றுசொல்லி

23. துனியா தனிலுள்ள சுத்தவீரராய்
இருந்த முன்னுள் ளோரைத்
தனியே எடுத்துப் போனவன்நான்
தக்கோன் அருட்டி இப்பவந்தேன்
துன்யா தனைப்பார் நீயென்று
துலங்கும் மௌத்தது கேட்டபோது
புண்ணியம் இல்லாத கிழவியாகப்
பொருந்தக் கண்டேனென் றவனும்சொன்னான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. அந்தப் பெண்பிள்ளை சொல்லுவாளாம்
அடடா நீமாறு பாட்டுக்காரா
இந்த உலகத்தை நம்பிநீயும்
இறையை வணங்காமற் பாவியானாய்
அந்த நேரம்நான் உன்னைத்தேடேன்
அழகாய் நீயென்னைத் தேடிக்கொண்டாய்
இந்த நேரமே உன்னைவிட்டும்
உன்னமலை விட்டும்நான் நீங்கிப்போறேன்

25. அன்ன காலையில் உன்முதலை
அந்நியர் கையில் இருக்கக்காண்பாய்
முன்னு முதலேகி எதிராய்ச்சொல்லும்
மோசப் பாவியே என்னைத்தேடி
வண்ணமிஸ் கீனுக்கும் ஆலிமுக்கும்
வழுத்தும் பக்கீர்க்கும் கொடுத்தாயில்லை
இந்நிலந் தன்னில் என்ஜீவன்தான்
இருக்கிறேன் என்றது ஒப்புக்காட்டும்

26. மரணம் அடைகிற மனிதன்சொல்வான்
வல்ல நாயனே யாஹுதாவே
தருணம் இதுவந்து சேர்ந்துபோச்சு
தாலந் தனிலென்றன் வாழ்வும்போச்சு
கரணம் அடித்தாலும் முடிவதில்லை
ஹக்குப் பெரியோனே என்சீவனை
வரண மாகவே கொஞ்சநாளில்
வாழும் துன்யாவில் மீளவைய்யே.

27. என்ன அமல்விட் டிருந்தாலுமாம்
ஏதும் தவறாமல் செய்துவாறேன்
முன்னு முதல்எல்லா சதக்காவீந்து
முழுதும் ஹைராகச் செய்துவாறேன்
அன்னை தந்தையர் மனதையெல்லாம்
அன்பாய்ப் பொருத்தம தாக்கிவாறேன்
இந்நிலம் தன்னில் என்சீவன்தான்
இருக்கும் மட்டிலும் மாறுசெய்யேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. ஆசை யாகிய வசனங்கேட்டு
அல்லாஹ் பெரியன் உரைசெய்குவான்
தோஷம் மிகச்செய்த பாவியேகேள்
தொல்லுல கத்திலே களாவும்அஜல்
வீச மாகவே வந்துதானால்
வீணாய் நேரத்தைச் சுணக்கொணாது
நேச இஸ்ராயீல் றூஹைவாங்க
நிலத்தில் எதிராகவே வந்து நிற்பாய்

## மௌத்தாகிறவன் சொல்வது

29. அன்னை தந்தை அருமை மனைவி வாருங்கோ - நான்
ஆளும் துன்யா விட்டுப் போகிறேன் பாருங்கோ

கூட்டம் குடும்பத் தோரே இங்கே வாருங்கோ - நான்
கூடி இருந்த நேசமே என்னைப் பாருங்கோ

அக்கம் பக்கத் தாரே இங்கே வாருங்கோ - என்
அருமை உள்ள நேச ரென்னைப் பாருங்கோ

பெண்டில் பிள்ளை புறத்தி யாரும் வாருங்கோ - என்னைக்
கொண்டு போற மலக்கு வருகிறார் பாருங்கோ

அண்ணன் தம்பி அக்கை தங்கை வாருங்கோ - என்னை
அதட்டி வலுக்கப் படுத்துகிறாரே பாருங்கோ

உலக ஆசை தன்னை நம்பி வாண்டனே - இப்போ
கலகம் வருத்திக் கபுறில் போக மாண்டனே

என்ன செய்வேன் எங்கே போவேன் ஆண்டோனே - நான்
ஏதும் அமல்கள் செய்தி டாமல் மாண்டேனே

பிள்ளை பொருளும் பிழைக்கக் காணியைத் தாண்டேனே -
இப்போ
போறவேளை ஒன்றும் உதவா மாண்டேனே

பட்டி மாடும் பெட்டிப் பணமும் ஆண்டேனே - நான்
போகிற வேளை ஒன்றும் உதவாது மாண்டேனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹக்கன் ஆனவன் சொன்ன தெல்லாம் மறந்தேனே - நம்
கருணை நபியின் சுன்னத் தெல்லாம் இழந்தேனே

அன்னை தந்த ஆலிம் மனத்தை வெறுத்தேனே - கெட்ட
அறியா யத்தில் காலம் கழித்து மரித்தேனே

ஈமான் இஸ்லாம் கலிமாப் பறுளை அறியேனே - இப்போ
என்னா செய் ஆண்டவனும் தெரியேனே

பெண்ணுக் காக அடிமைப் பட்டே இருந்தேனே - அவள்
பொருளைக் கொண்டு காலம் 'கழித்து மரித்தேனே

இந்த வேளை பாரும் என்றன் சூரத்தை - நானும்
இனித் திரும்பி வாராப் பயணம் போறத்தை

இந்த விதமாய்ப் புலம்பும் போது இறைவன் - தான்
இனிமை யாகச் சொல்லு வானாம் மௌத்துக்கு

அந்த வேளை மலக்கல் மௌத்து எதிரிலே - வந்து
சொந்த மாகச் சொல்லு வாராம் நேரிலே

ஆண்ட பெரிய நாய கந்தான் என்னிடம் - இப்போ
அருளும் படியே செய்கு வேனே உன்னிடம்

தொங்கல்

30. பின்னால் மூமீ னாயிருந்தால்
பெரிய சீதேவி என்றுறூஹும்
தன்னால் முனாபிக் காயிருந்தால்
தன்மை கெட்டவன் என்று றூஹும்
முன்னால் வாங்கும் படியாகவும்
முழுதும் உத்தர வாகிவிடும்
செந்நாய் குரங்கைக் கொல்லுமாப்போல்
சினந்து வாங்குவார் பாவிறூஹை

31. வாங்கிப் போவாரே பாவிறூஹை
வழுத்தும் இஸ்ராயீல் கடுகாகவே
தாங்கிப் போவாரே நல்லோர்றூஹை.
தாலந் தனில்மிக எளிதாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏங்கித் தியங்கிய தாய்தந்தையர்
இருக்கும் இனபந்து பெண்டில்பிள்ளை
தூங்கி அழுதாலும் விடுவதில்லை
தொல்லுல கத்தார் வாழ்வைப்பாரும்

32. ஆகையால் இந்த வாழ்வைநம்பி
அவனி தனில்வாழும் மாந்தர்களே
யூக மாகியசொல் லைப்பாரும்
உறுதியா கியஹதீ தைக்கேளும்
ஏக மாகிய இறையவனும்
எதற்கு நம்மைப் படைத்தானென்று
தாக மாகவே அமல்கள் செய்து
தரையில் வாழ்கவே ஆமீன் ஆமீன்

## மூமீன்கள் மௌத்தாகிற அழகு

33. மூமீன் மௌத்தாகும் அழகுதன்னை
முறுசர்க் கரசராம் இரசூலுல்லாஹ்
ஹாமீ முகம்மது நபிநாயகம்
கமழும் ஹதீதினில் வந்ததனை
நேமித முள்ள சொல்லைக்கொண்டு
நெறிசேர் கித்தாபையும் கோர்வைசெய்து
பூமி தனிலுள்ள நேசருக்குப்
புகழும் செய்தியை வெளியாக்கினேன்

34. ஹக்கை யுவந்தவன் மௌத்தாகிற
காலம் வந்துமே சேர்ந்ததனால்
திக்க டங்கலும் வெளியாகிய
சூரிய னின்பிர காசம்போலே
சக்கொன் றணுகாத றஹ்மத்துட
சங்கை யாகிய மலக்குகளும்
மிக்க சுவர்க்கத்துத் துணியுடனெ
விரும்பி வந்தவன் முன்னேநிற்பார்

35. பஞ்சு மனையாடை கொண்டுவந்து
பகரும் சுவர்க்கத்து வாசனையும்
மஞ்சு குடையானை நபியிரசூல்
வரிசை உம்மத்தின் றூஹைவாங்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்ச மாகிய இஸ்ராயீலும்
தரணி தனிலவன் முன்பில்வந்து
அஞ்ச விடாமலே அவன்தனக்கு
அழகாய்ச் சொல்லுவார் இயமதூதர்

36. மேலோன் பேரிலே சபுறுசெய்து
விரும்பி அமல்செய்த நபுசேநீதான்
தாலந் தனிலுன்றன் முடிவுமாச்சு
தரணி தனிலுனற்ன் வாழ்வும்போச்சு
கோலம் மிகவுள்ள துன்யாவிட்டுக்
கோமா னிடத்திலே போவோமென்று
ஆலந் தனிலுள்ள அடியான்றூஹை
அன்பாய் அழைப்பாரே இஸ்ராயீலும்

37. உடனே நல்ல மனிதன்றூஹு
உறுதி யாகிய சொல்லைக்கேட்டுச்
தடைவொன்று மில்லா யிறையிடத்தில்
ஜல்தி போகவே மனமகிழந்து
மடமட வென்றொரு கலிமாச்சத்தம்
வழங்கும் குரலோசை திக்குறுமாக
நடனம் புரிகிற அடியான்றூஹை
நாயன் மலக்குகள் கரத்திரலாக்க

38. வந்து இருந்த மலாயிக்காமார்
வரிசை அடியான் றூஹெடுத்துச்
சந்திரன் ஒளியாய் இலங்குமான
சங்கை நவமணிப் பட்டில்வைத்துக்
கந்தங் கமழ்கஸ் தூரிவாசம்
கமகம வெனவே எங்கும் வீசச்
சுந்தர மாகிய மலக்குமார்கள்
தூக்கிக் ககனிலே யாக்கும்போது

39. அந்த வானத்தில் இருக்குமான
அமரரோ டடங்கலும் ஒன்றாய்வந்து
இந்த விதமான வாடைமணம்
எந்த அடியானின் றூஹுவென்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த மலக்குகள் சொல்லுவாராம்
துனியா தனிலிவன் இன்னான்மகன்
விந்தை இறைவன் சொல்லுடனே
விளங்கு நபிசொல்லைத் தவிராதவன்

40. என்று சொன்ன சொல்லுடனெ
இறையின் மலக்குகள் சகலோர்களும்
அன்றுமுன் வானம் தொடுத்ததுமுதல்
அழகாய் ஏழு வானம்மட்டும்
கண்டு பெருவெளி யாகிக்கொள்ளக்
கனத்த கதவெல்லாம் திறந்துநிற்பார்
தொண்டு செய்கிற மலக்குஎல்லாம்
தொடர்ந்து றூஹுடன் போகுவாரே

41. ஏழாம் வானத்தே சென்றபின்பு
இந்த அடியானின் கணக்கெடுத்து
வாழும் ஜென்னத்துல் பிர்தெளஸெனும்
வரிசை சுவர்க்கத்தை உடையானென்றும்
கோளும் களவற்ற அடியானுக்குக்
கொடுப்பேன் இல்லிய்யூன் சுவர்க்கமென்றும்
நாளும் இறையவன் சொன்னசொல்லை
நாடிக் கொள்ளுவீர் மானுடரே

42. ஈதுபடி நிற்க அடியானுடன்
இலங்கும் சடலத்தை அடக்கியபின்
சீதம் பொருந்திய றூஹானதைச்
செலுத்திச் சடலத்தில் விடப்படுமாம்
நாதர் இருவரும் கபுறில் வந்து
நளின மொழிகளைச் சுவாலுஞ்செய்ய
ஆதர வாக ஜவாபுசொல்ல
அப்போ திறைவன் செப்புவானாம்

43. என்ற னடியானும் உண்மைசொன்னான்
இலங்கும் சுவர்க்கத்தைத் தான்திறந்து
நன்றாய் ஜென்னத்து விரிப்பையெல்லாம்
நலமாய் விரித்துத்தான் அவர்தனக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றல் மணம்நன்றாய் வீசுமான
சுவர்க்க லோகத் துடையுடுத்து
அண்டர் போற்றிய அடியான்தன்னை
அன்பாய் பாது காக்கச்சொல்வான்

44. சுவர்க்க லோகத்து வாடைமணம்
சூழ அவருக்கு வீசிநிற்கும்
எவர்க்கும் கண்ணெட்டாத் தொலைதூரமாம்
ஏகன் கபுறையும் வீதியாக்கி
அவர்க்கு நடக்கிற பவனிகளை
அல்லாஹ் பெரியவன் அறியவேணு
துவர்க்க மாகிய நபியிரசூல்
சொன்னார் இதுகளை ஹதீதுகளில்

45. அல்லாஹ் படைத்த அடியார்களே
ஆல நபியும்மத் தானோர்களே
எல்லாப் படைப்புக்கும் மௌத்தொன்றுண்டு
ஏதும் ஹல்க்கொன்றும் தப்பமாட்டா
கல்லாத புல்லன் ஆகிலுமாம்
கருத்தாய்க் கேட்டுப் படித்துக்கொண்டு
உல்லாச மாக வணங்கியமல்
ஒருபோதுதம் தவறாமல் செய்வீர்களே

## முனாபிக்குகள் மௌத்தாகிற கெடுதி

46. எல்லாம் படைத்தவன் சொல்லைக்கேட்டும்
இரசூல் முகம்மது சொல்லைக்கேட்டும்
தள்ளி உலகத்தில் நடந்தபோக்குத்
தாலந்தனில் மௌத்து வந்ததானால்
பொல்லா நரகுக்கு அதிபதியாய்ப்
பொருந்தி இருக்கிற மலக்குகளாம்
தள்ளத் தேடுற நரகத்திடை
தானே கொண்டுமே இறங்குவார்கள்.

47. இறங்கிச் சிலதூரம் நின்றுகொள்வார்
இயமன் அவன்றூஹை எடுக்குமட்டும்
வரங்கள் பொருந்திய இஸ்ராயீலும்
வந்து அவன்தலை மாட்டில்நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறங்கள் செய்யாத பாவி றூஹைஹ
அதட்டி வலுக்கமாய்ப் பிடித்திழுத்து
நரம்பு எலும்பெல்லாம் நெருநெருத்து
நடுங்க அவன்றூஹை வாங்குவாரே.

48. உலகு தனிலிவன் இருக்குமட்டும்
ஒருபோதும் இறையை வணங்காததால்
கலகம் வருத்தியே அவன்றூஹைத்தான்
கஷ்டப் படுத்தியே எடுத்தபின்பு
சிலநேர மாகக் காத்திருந்த
சீமான் மலக்குகள் நெருங்கிவந்து
பலனொன் றில்லாத அடியான்றூஹைப்
பிடித்து நரகத்துத் துணியில் வைத்து

49. எடுக்கும் போதிலே வானம்பூமி
இதுகளில் உள்ள வஸ்துகளும்
முடுக்க நரகத்துப் பாவிபோரில்
முனிந்து லஃனத்துச் செய்துநிற்கும்
கடுக்க மனுஜின் தவிரமற்ற
ஹல்க்கு அடங்கலும் காதில்கேட்கும்
தொடுக்க நரகத்துப் பாவிறூஹைத்
தூக்கிக் கபனிலே யாக்கும்போது

50. வானத் திடைவாசல் கதவுஎல்லாம்
வளமாய் அடைத்துப் பூட்டப்படும்
தானத் திடையொன்றும் செய்திராத
தன்மை கெட்டஅடி யான்றூஹைப்
பூனத் திடைகொண்டு விடுங்களென்று
புகழை யுடையவன் சத்தமாகும்
மானக் கெதியொன்றுஞ் செய்திராத
மடையன் றூஹைத்தான் கொண்டருவார்.

51. கொண்டு கபுறிலே விடப்படுமாம்
கூறு கெட்டவன் பாவிறூஹை
அன்று கபுறிலே முங்கரநக்கீர்
ஆரம் பாரத்தோ டேகிவந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்ட மாருதம் போலாகவும்
சத்தங் காரிடி போலாகவும்
வண்டத் தனமுள்ள அடியானிடம்
வந்து இறங்குவார் மலக்கிருவர்

52. வந்து அவனைத்தான் நிறுத்தித்தட்டி
வழிகே டாகிய பாதகனே
எந்த நாயனை வணங்கினாடா
ஏது வாழ்வினில் இருந்தாய்பாவி
சொந்த தீன்வழி மார்க்கம்விட்டு
தொழுது நீவந்த கிபுலாஏது
அந்த முடனும்தன் இமாமுமெது
அழகாம் இக்வானைச் சொல்லுமென்பார்

53. பாவி மறுமொழி சொல்லொணாது
பதறி மயங்கியே புவியில்வீழ்ந்து
கூவிக் கூவியே சத்தம்போட்டுக்
கூக்குர லாக அழுதுசொல்வான்
நாவில் உயர்மொழி வருகுதில்லை
நானு மறியேனும் சுவாலையென்பான்
தாவி இழுத்துத்தான் பாவிதன்னைத்
தனிமைப் படுத்துவார் மலக்கிருவர்

54. அன்ன காலையில் இறையிடத்தில்
அன்பாய்ச் சத்தம் ஒன்றுகேட்கும்
இந்த அடியானைத் தானிருத்தி
இரும்புச் சுக்குமாறு தடிகள்கொண்டு
வந்த படியெல்லாம் அடிங்கோஎன்று
வல்ல பெரியவன் சத்தம்வரச்
சொந்த மாகிய மலக்கிருவர்
சொல்ல முடியாத அடிஅடிப்பர்

55. அடிக்கும் தடியுடை பெருப்பங்களை
அல்லாஹ் பெரியவன் அறியவேணும்
படிக்கும் துனியாவில் ஹல்க்கு எல்லாம்
பார சுக்குமாறைத் தூக்கினாலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்க முடியாத சுக்குமார்த்தடி
ஏகன் அறிவானே அதன்பெருப்பம்
படிக்கும் படிநடவா அந்தப்
பாவி தனைத்தான் அடிப்பார்களே

56. ஓங்கி ஓரடி அடித்தாரென்றால்
உடையொன் ல·.னத்துப் பெற்றவனைத்
தாங்கி இருக்கிற கபுறானது
தன்மை கெட்டவன் நரம்பெலும்பும்
பாங்கு பரிசத்து நொருங்குமட்டும்
அந்தக் கபுறவனை நெருக்கும்நேரம்
தூங்கு முகமுள்ள நாற்றமுள்ள
துர்க்குணம் உள்ள ஒருமனிதன்

57. வந்து தோன்றுவான் அவனிடத்தில்
வந்த செய்தியை இவனறிந்து
எந்த இடத்திலே இருந்துவந்தாய்
யார்நீ எங்கே போறாயென்பான்
அந்தச் செய்தி அவனறிந்து
அந்தப் பாவிக் குரைசெய்குவான்
சொந்தப் பெரியவன் என்னைத்தொட்டும்
சர்றைக் கூலியாய் உனக்குத்தந்தான்

58. அல்லாஹ் பேரிலே சத்தியமாய்
சர்றை ஒழியநீ செய்யவில்லை
அல்லாஹ் பேரிலே ஆணையாக
அவனின் வழிபாட்டைப் பேணவில்லை
அல்லாஹ் பேரிலே மாறுசெய்து
அன்பாய் உலகத்தை ஆண்டிருந்தாய்
பொல்லா அதாவுக்குப் பாத்திரமாய்ப்
பொருந்தா வேலைகள் செய்துகொண்டாய்

59. காசம் பிடித்தவ னாகவந்தாய்
கண்டதில் லையுன்னைப் புவிமீதிலே
நேச மாகவே பழக்கம்பேச
நீயார் காணும் என்றுகேட்பான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோச மாகவே நீயும்செய்த
துட்ட அமலென்று வானும்சொல்வான்
பாசிக் குணமுள்ள தோசிக்கித்தான்
பத்து நரகத்துக் கதவிலொன்றை

60. திறந்து விடுவார்கள் கியாமம்மட்டும்
அந்த நரகத்தில் சொந்தமாகப்
புரண்டு கிடந்துதான் அழுத்துவானாம்
புல்லத் தனமான கள்ளனாக
இறந்து போவது போலேயவன்
ஈரக் குலையெலாம் தானேதீய்க்கும்
சிறந்த முகம்மது நபியும்மத்தின்
சீராம் உலமாக்கள் எடுத்தோதினார்

61. காசு பணந்தேடிக் காணிதேடிக்
கறக்கும் பசுமாடு எருமைதேடித்
தாசி வேசியை மனதில்நாடித்
தரையில் மூடரின் உறவைத்தேடித்
தோசித் தனமான வட்டிமுதல்
துய்யோன் விலக்கிய பொருளைத்தேடி
மோசம் போகாமல் தீனோர்களே
முன்னோன் தனைநாடித் தொழுவீர்களே.

62. கனவுதான் கண்டு விடிவதுபோல்
கஷ்ட துனியாவில் இஷ்டமெல்லாம்
நினைவு தனில்பலன் கொடுப்பதில்லை
நீணி லத்திலே தரிப்பதில்லை
பனாவு துணியாவின் வாழ்க்கையெல்லாம்
பசாது மிகுதிமாய் இருப்பதாலே
வினவி உலமாக்கள் இடத்திற்கேட்டு
மேலோன் தனக்கஞ்சித் தொழுவீர்களே.

63. இஸ்லாம் போலேநீ முடியிறக்கி
இணங்கி சுன்னத்துத் தோலறுத்து
அஸலாம் பிறப்பென்று தொப்பிபோட்டு
அதனின் பின்னாலே பெண்முடித்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுலாம் பிள்ளை குட்டியாகிப்
பாரில் கிழவனும் கிழவியாகிக்
குஸ்லாம் முழுக்கையும் அறியாமலே
வேறு சாதியாய்க் கெடுவார்களே

64. தாயார் தந்தையை வெறுத்தபேரும்
தகுமாம் இனபந்தை மறுத்தபேரும்
மாயப் புவியாசை மனத்தில்வைத்து
மணமாம் ஒஸ்தாதை வெறுத்தபேரும்
பேய்போல் முதலெல்லாந் தேடித்தேடிப்
பெருத்த சக்கர்த்தை மறுத்தபேரும்
நாய்போல் நரகத்தில் கத்திக்கத்தி
நன்றிகெட்டவர் திரிகுவாரே

65. வட்டி பொய்புறம் கோள்ஹஸது
வாழும் குடிகளைக் கலைத்தபேரும்
தட்டிய மத்தித்தர் பெரியவரைத்
தானே யவர்மேலாய்ப் பேசும்பேரும்
முட்டி முட்டியாய்க் குடிக்கும்பேரும்
மோசக் கொலைசனா செய்யும்பேரும்
கட்டிய பெண்ணைஅலைக் கழித்தபேரும்
கதறி நரகத்திற் புகுவார்தாமே

66. கட்டுக் கடங்காமல் இருக்காமலே
ஹக்குப் பெரியவன் சொன்னசொல்லை
இட்டப் படியேதான் உங்களுக்கு
எடுத்துக் காட்டினேன் அப்துஸ்ஸமது
துட்டுப் பெருமையால் எண்ணும்நீங்கள்
தொல்லை துனியாவில் கள்ளனாக
மட்டிப் பயலாக இருந்திடாமல்
வல்லோன் தனைநாடித் தொழுவீர்களே

## நரகத்து வர்ணிப்பு

67. ஆசைபெரும் அபூஹு"ரை ராசொன்னார்
அண்ணல் நபியுல்லா சொன்னதாக
மோச நரகத்தை நீண்ட நாளாய்
முகர்ற பான மலக்குமற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேச மலக்குகள் சகலபேரும்
நினைவு திடுக்கத்தில் இருக்கிறார்கள்
ஆசை யாகிய அடியார்களே
அமலைச் செய்துநீர் விலகிக்கொள்ளும்

68. முன்னும் ஆயிரம் வருசங்காச்ச
முனியும் நரகமே வெளுப்பாச்சுது
இன்னும் ஆயிரம் வருசங்காச்ச
அந்த நரகமே சிவப்பாச்சுது
பண்ணும் ஆயிரம் வருசங்காச்சப்
பார நரகமே கறுப்பாச்சுது
எண்ணும் நரகமே கறுப்பாகவே
இருக்கிற தென்றபூ ஹுரைராசொன்னார்.

69. கால முகம்மது நபியுஞ்சொன்னார்
கருத்தாய் இமாம்கள் சிலருஞ்சொன்னார்
ஆலம் தனிலுள்ள அடியார்கள்
அறிய வேணும் இதையுமென்று
சீலர் முகம்மது சொன்னசொல்லைச்
சொன்னேன் மகுமூது அப்துஸ்ஸமது
தாலம் தனிலுள்ள மனிதர்களே
தனியோன் தனக்கஞ்சித் தொழுவீர்களே

70. தூதர் ஜிபுறியீல் சொல்லுவாராம்
தோழர் நபியுல்லாஹ் தங்களுக்கு
நீத ரேநபி நாயகமே
நெறிசேர் ஹைறுல் அன்பியாவே
வாது செய்கிற நரகத்தின்
வரலாறு முற்றாய்ச் சொல்லுகிறேன்
ஆதர வாகச் சொல்லுமென்று
அப்போ ஜிபுறியீல் செப்புவாராம்

71. ஊக்க நரகத்தில் இருந்துமோர்
ஊசித் துவார மட்டாகிலும்
தாக்க துனியாவில் காண்பித்தாலோ
தலமிது முழுவதும் வெந்துபோகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீக்க நரகத்துப் புடைவையொன்றை
விரித்து துனியாவில் வெளியாக்கினால்
காக்க முடியாத நாற்றமாகும்
கஷ்ட துனியாதீன் கசந்துபோகும்

72. இன்னும் நரகத்துச் சங்கிலியில்
இணங்கி ஒருதுண்டுச் சங்கிலியைப்
பண்ணும் பெரியொரு மலையில்வைத்தால்
பால மலையெல்லா முருகிப்போகும்
முன்னும் மஸ்ரிக்கில் இருப்பவனை
மோச அதாபுகள் செய்தாரென்றால்
பின்னும் ம.்.ரிபில் இருப்பவனும்
வெந்து சாம்பலாய்ப் போவானென்பார்

73. நரகச் சூடது மெத்தச்சூடு
நாற்றம் அதனிலும் அதிகமாகும்
நரகத் துடபுல்லு மனுஜின்னாகும்
நரகத் துடதீன் சக்குமாகும்
நரக ஆழமும் மெத்த ஆழம்
நரக விறகது கல்லதாகும்
நரகத்தில் குடிப்பது சுடுநீராகும்
முடிவறக் காய்ந்த நீரதாகும்

74. நரகப் புடைவையோ கறுப்பாகும்
நானிலத்திலே அறியச் சொல்லுவேன்
நரகம் அதற்குத்தான் வாசல்ஏழு
நவில்வேன் அதன் விபரங்களை
நரகத்தின் ஒருவாசல் இருந்துமற்ற
வாசல் போகும் வரையிலுந்தான்
பரவும் வருசம் எழுவதல்பு
ஆன ஜிபுறீல் விபரஞ்சொன்னார்

75. எரியுஞ் சூடது ஒன்றுக்கொன்று
எழுபது பங்கு அதிகமாகும்
அரிய வன்பெரும் பகைவர்களை
அந்த நரகுக்குக் கொண்டுபோவோர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய நாவையும் வெளியாக்கியே
பிடரிப் பக்கத்தால் இழுத்துக்கட்டிக்
கரிய முகப்பாவி தங்களைத்தான்
காலில் விலங்கிட்டுக் கொண்டுபோவார்

76. கையைப் பிடரியால் இழுத்துக்கட்டிக்
கடிய நரகத்துச் சங்கிலியை
வையகம் தன்னில் நீயிருந்து
வாழும் வரையிலும் மாறுசெய்தால்
துய்ய பெரியவன் சொன்னசொல்லைக்
கொஞ்ச மாகிலும் நம்பவில்லை
பொய்யே இதுவென்று எண்ணியிருந்தால்
புல்லத் தனமான பாவியேநீ

77. எங்கள் நபியுல்லாஹ் இதனைக்கேட்டு
ஏங்கி முகம்வாடி அழுதுசொல்வார்
கங்கை யாகிய ஜிபுறியீலே
சாற்றும் நரகத்து வரலாறெல்லாம்
துங்க ஜிபுறியீல் சொல்லுவாராம்
துய்ய பெரியோனின் தோழாகேளும்
பங்கம் இன்றியே நரகமதன்
பாங்கு பரிசொல்லாஞ் சொல்லிவாறேன்

78. ஆக நரகத்தின் வாசலேழு
அதனுடை விபரத்தைச் சொல்லக்கேளும்
யூக மாகிய முதல்தட்டிலே
முனாபிக் கீன்களும் காபிர்களும்
ஏக மாகவே இருப்பார்களாம்
இதனுட பேரும் ஹாவியாவாம்
மோக மாகவே இரண்டாம் தட்டில்
முசிரிக் கானவர் இருப்பார்களாம்

79. அதற்குப் பெயர்ஹுத்த மாவென்பர்
அடுத்த நரகமாம் மூன்றாந்தட்டில்
வகுத்து மஜூஸியார் இருப்பார்களாம்
வழுத்தினேன் பேரும் சக்கறாவாகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுக்கும் நாலாம் தட்டிலேதான்
இபுலீசும் அவனுட கௌமுகளும்
அதுக்குப் பேரும் ஸலாவாகும்
அருளுவேன் இன்னும் அழகாய்க்கேளும்

80. அஞ்சாம் தட்டிலே யகூதிகளாம்
அதற்குப் பெயரதோ ஜஹீமென்னுவார்
மிஞ்சும் படியாறாந் தட்டிலேதான
விளங்கும் நஸ்ராக்கள் இருப்பார்களாம்
தஞ்ச மாகவே இதற்குப்பெயர்
சாற்றி னேனது சயீராகுமே
வஞ்சம் நீங்கிய ஜிபுறியீலும்
வரலாறு ஆறையும் சொல்லிநின்றார்

81. நின்றபின் சும்மா நபியுங்கேட்டார்
நெறிசேர் தோழரே ஜிபுறியீலே
நன்றிசேர் ஆறு நரகங்களின்
நலமாம் வரலாறு சொல்லிவந்தீர்
வென்றியுடன் ஏழாம் நரகமதன்
விஷயம் முற்றாகச் சொல்லுமென
அண்டர் போற்றிய ஜிபுறியீலும்
அருளினார் அப்போது நபிதம்பாலே

82. ஏழாம் நரகத்து விபரங்களை
என்ற னிடத்திலே கேட்கவேண்டாம்
நாளும் நானதைச் சொல்லமாட்டேன்
நாயக மேசும்மா இருங்களென்றார்
வாழும் மனதுதான் தரிப்பதற்கு
வரிசை ஜிபுறியீலே சொல்லுமென்றார்
ஏழாம் தட்டிலே உங்களது
பாவி உம்மத்து இருப்பாரென்றார்

83. இந்த விதமாக ஜிபுறீல்சொல்ல
எங்கள் முகம்மது மனதுபொங்கித்
தந்தை தாரையாய் அழுதழுது
தாங்க முடியாமல் வெப்பமாகிச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர வடிவான எங்களது
துலங்கு நபியுல்லாஹ் முகமும்வாடிச்
சந்திரன் அழகான நபிளாரோ
தன்னை மறந்துமே போனார்களாம்

84. ஆசை யாகிய ஜிபுறியீலும்
அன்பாய் நபியின் சிரசைத்தூக்கி
நேச மாகவே மடியில்வைத்து
நின்று வெகுநேரம் சென்றபின்பு
தேசம் புகழ்நபி மயக்கம்தீர
தெளிந்து நிமிர்ந்துமே எழுந்திருந்து
வாசம் பொருந்திய ஜிபுறியீலே
வாழும் மனதிலே துயரம்தந்தீர்

85. அல்லாஹ் சொல்லையே மாறினாரும்
அவனின் ஆலத்தில் இருக்கவேண்டாம்
அல்லாஹ் அல்லாது வெறு நாயன்
அவனி தனில்பார்த்துத் தேடிக்கொள்ளும்
பொல்லாப் பாவத்தைச் செய்தபாவி
புறுக்கான் தனக்கும் மாறுசெய்தோன்
கல்லு மரம்போலே இருந்தபேரைக்
கண்டோம் அனந்தம் கோடாகோடி

## மொக்காட்டுப்படலம்

86. ஊரில் உறவோரே தாய்மார்களே
உரித்தாய் இருக்குமென் நேசர்களே
ஏரி தனிலுள்ள மச்சம்போலே
எங்கும் திரிகின்ற மங்கையரே
பாரிய குற்றம் உங்களுக்குப்
படைத்தோன் நியமிப்பான் என்றறிந்து
கூறிய வார்த்தை தனைக்கேட்டுக்
கொடிய னரகை விலகிக்கொள்ளும்

87. வாலைப் பெண்களும் வாலிபரும்
வழியில் போகிற வேளையிலே
காலக் கொடுமையால் அவளுடனே
கதைத்துச் சரசங்கள் பண்ணும்நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலம் படைத்தவன் தனைமறந்தும்
அவள்மேல் ஆசை மிகுதிகொண்டும்
கால காலமும் அவள்மேலாசை
ஹயாத்து மட்டிலும் தீராதென்றார்

88. மார்க்கம் அறியாத மங்கையர்க்கு
வந்த புருஷனும் அப்படியே
பார்க்கப் பல்லுடை நகைகள் பூண்டு
பல்லுக்குக் காவிக் கைக்கிடயம்
கார்க்குங் கால்காப்பு பாதசுரம்
கண்ணுக்கு மையும் கொண்டைப்பூவும்
மூர்க்க மோகன மாலைசூட்டி
மங்கை நல்லாளைச் சிங்காரித்து

89. மஞ்சள் பூசி முகம் மினுக்கி
மையும் சாந்தும் பொட்டுமிட்டுக்
கொஞ்சும் கிளிமொழி வஞ்சியரைக்
கோலங்கள் செய்து வீதியிலே
பஞ்ச பாதகி வருவதனைப்
பாரில் ஆடவர் கண்டாரென்றால்
இன்சொல் மொழியுடை வஞ்சியரை
யாராய் இருக்கும் என்றுகேட்பார்

90. இந்தப் பெண்மணி எந்தவூரோ
எந்த அடியானில் மனைவியென்பார்
இந்த வேளையில் எங்கேபோறாள்
யாரு டையமக ளென்று கேட்பார்
வந்த மடவாளின் சங்கதியை
மற்றைய ஆடவர் பேசும்போது
சொந்த மாகவே இருபேர்களும்
சந்திப் பார்களே நரகத்திலே

91. என்று சொல்லிய நபிநாயகம்
இருந்த இடம்விட்டு எழுந்துசென்று
கொண்டல் குடையிடும் இரசூலுல்லாஹ்
கூடாரத் தின்பால் ஏகிச்சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றல் மணம்நன்றாய் வீசுமான
சீமான் முகம்மது மூன்றுநாளாய்த்
தொண்டர் யாருடனும் பேசாமலே
சுஜூது செய்து அழுதிருந்தார்

92. இந்தச் செய்தியைத் தானறிந்து
பெண்கட் கரசியாம் பாத்திமாதான்
எந்தன் பாவாவே தந்தையரே
என்ன சலிப்புத்தான் வந்ததென்றார்
எந்தன் மகளாரே பாத்திமாவே
எந்த னிடத்திலே ஜிபுறீல்வந்து
விந்தை யாமேழு நரகமதன்
விஷயம் முற்றாகச் சொல்லிவந்தார்

93. ஏழாம் நரகத்தில் என்னுடைய
உம்மத் தானபேர் பாவிகளும்
நாளும் கூடி இருப்பாரென்று
நவின்றார் எந்த னிடந்தனிலே
வாழும் மனத்திலே விசாரம்கொண்டு
வாடி மெலிகிறேன் கண்மகளே
பாழும் நரகிலென் உம்மத்தென்ன
பாடு படுவாரோ நானறியேன்

94. அப்போது பாத்திமா நாச்சியாரும்
அழுது மிகவாடி மனம்கலங்கி
எப்போது ஜிபுறியீல் வந்தாரென்று
எனக்குச் சொல்லுங்கள் பாவாவென்றார்
அப்போது ஜிபுறியீல் இறங்கிவந்து
அருமை பொருந்திய நபிதன்பாலில்
இப்போது உங்களின் உம்மத்துக்கு
இறையோன் உதவியும் செய்தானென்றார்

95. ஆணை மீசை மயிரினிலும்
அழகாம் பெண்ணை முடியினிலும்
தானே பிடித்துப் போவாரென்று
தக்க பெரியவன் சொன்னானென்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாணாள் முழுவதும் அமலும்செய்து
வரிசையாம் தாய்தந்தை உகந்தபேரைக்
கோனும் பிரியமாய் உகந்திருந்து
கொடுப்பான் சுவர்க்கப் பதவியென்றார்

96. இன்னும் சரித்திரம் மிகுதியுண்டு
இந்தப் பிரதியும் சிறிதானதால்
மின்னும் பாடலை முடிவுசெய்தேன்
மற்றப் பாகத்தில் முற்றாய்ச்சொல்வோம்
வண்ண நேசரே தோழர்களே
வழுத்தும் ஆண்பெண் கூட்டங்களே
வன்னி நகரத்துக் கேகிடாமல்
வல்லோன் தனைநாடித் தொழுவீர்களே

97. காசு பணம்மேலே ஆசைவைத்துக்
கருதி இராப்பகல் பேய்போலவே
வேசி மாதரை ஆசைவைத்து
விலகல் ஏவலை அறியாமலே
ஆசை யாகவே இரவுபகல்
அல்லாஹ் தனைமறந் திருந்திடாமல்
நேக மாகவே வணங்கியமல்
நேயமாய்ச் செய்து வாழ்வீர்களே

98. வண்ண முலையார்க்கும் ஆடவர்க்கும்
வழுத்தும் உபதேசம் கொஞ்சம்கேளும்
மின்னும் படியான பெண்பிறப்பை
மேனி தெரியாமல் அயலோர்காணத்
தன்னின் ஆசைக்காய் மங்கையரைத்
தலைகள் தெரியாமல் மறைக்கவேணும்
வண்ணான் நாவிதன் கவரச்செட்டி
வழுத்தம் பேர்களும் கண்காணாதே

99. தட்டா னிடஞ்சென்று தாலியொன்று
தாவடம் செய்து தரும்படிக்குக்
கட்டாயம் என்று வழிநடக்கும்
கள்ளத் தனமான காரிகையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டித் தனமாக உன்புருஷன்
வழமை போலுந்தன் மொக்காட்டுக்குத்
துப்பட்டி வாங்கித் தாறவனும்
சோதா அல்லவோ பெண்மயிலே

100. தைக்கா கந்தூரிப் பள்ளிவாசல்
தருமாம் கலியாணக் கூட்டத்துக்கும்
மிக்க அவுலியாத் தலங்களுக்கும்
விரும்பிக் கொடியேற்றம் இறக்கத்துக்கும்
தக்க படியாடை நகைகள் பூட்டித்
தையல் நல்லாளை மாதரசை
ஒக்கவே கூட்டிப் போகுமந்த
உலுத்தப் பயலுக்கும் என்னேசொல்வேன்

101. பெண்ணாய்ப் பிறந்திட்ட பூவையர்க்குப்
புருஷன் பொருத்தத்தில் சுவர்க்கமுண்டு
முன்னால் சிலபல கித்தாபிலையும்
முழுதும் உலமாக்கள் சொல்லியிருந்தும்
கண்ணால் கண்ட படியாகவே
கருத்தில் இதையானும் பொருத்திவைத்தேன்
மன்னன் தனக்கஞ்சி நடப்பதோடு
மருவும் புருஷன்சொல் மறவாதீர்கள்

102. எந்த நேரமும் இரவுபகல்
ஏகன் சொல்லிய ஏவலுடன்
கந்தங் கமழ்நபி சுன்னத்தையும்
ஹக்குப் பெரியவன் சொன்னதையும்
உந்தன் புருஷனார் ஏவலுக்கு
ஒழுகி நடந்துநீ அடிபணிந்து
விந்தை யாகிய அமல்கள்செய்து
விரும்பும் கூட்டத்தில் சேர்க ஆமீன்

## ஆயிஷா நாயகி சொல்லிய ஹதீது

103. வரிசை ஆயிஷா சொன்னதாக
வரைந்திருந் தார்கள்சில கித்தாபிகள்
பிரிச மாயொரு நாளைத்தினம்
பேணும் எனதுட இல்லத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிசை யாகநான் இருக்கும்போது
உண்மை முகம்மது நபியுவேந்தார்
வரிசை யாகவே எழுந்திருந்தேன்
மங்கை முகம்பார்த்து நவில்வதானார்

104. உங்கள் இருப்பிடம் இருங்களென்றார்
உடனே முன்போலே யானிருந்தேன்
சங்கை யாகிய நபியிறசூல்
தங்கள் சிரசையென் மடியில்வைத்து
திங்கள் வதனத்தார் படுத்திருந்தார்
சிறந்த வதனத்தை யானும்பார்த்தேன்
பங்க மின்றியே அவர்தாடியில்
பத்தொன் பதுமுடி நரைக்கக்கண்டேன்.

105. தன்னில் தானேயான் யோசித்ததில்
தனியோன் முகம்மது துனியாவிட்டு
மண்ணில் மறைவார்கள் என்றுஎண்ணி
வரிசை உம்மத்து நபியில்லாமல்
எண்ணி இருப்பார்கள் என்றுயாதும்
ஏங்கி மனதிலே விசாரமாகி
உன்னி அழுதேனென் கண்ணீர்த்துளி
உண்மை முகம்மதின் முகத்தில்விழ

106. காரிருள் தன்னில் மதியழைத்த
கருணை முகம்மது விழித்தெழுந்து
சீரித் தழுமெந்தன் ஆயிஷாவே
சொல்லும் சலிப்பெது வந்ததென்றார்
நேரில் கண்டதோர் அடையாளத்தை
நிகழ்த்தினேன் அப்போது நபிதன்பாலில்
சோரி அழவேண்டாம் மெய்யித்துட
சொல்லும் சுடுசான ஹாலதென்றார்

107. ஆலம் படைத்தாளும் ஆண்டவனும்
அண்ணல் முகம்மதும் அறிவாரெந்தன்
காலம் தனிலது மெய்தான் நீங்கள்
கவல்வீர் என்றார்கள் நபிநாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளை மையித்தின் மக்களெல்லாம்
வேண்டும் உம்மாவே வாப்பாவென்றும்
நாளும் தாயோடு தந்தையெந்தன்
நன்மை மகனாரே மகளேஎன்றும்

108. போற ஹாலது கடுசாகுமாம்
புகழும் மையித்தின் உடற்பிறப்பு
தாரை தாரையாய் அழுதழுது
தாங்க முடியாமல் வெப்பமாகிப்
போறியா எந்தன் அண்ணாவென்றும்
புகழும் தம்பி தங்கையென்றும்
வாற தொருநாளும் இல்லையென்று
வாசல் புறப்படும் நாள்கடுசாம்

109. இன்னும் எந்நஹால் கடுசானது
என்றே என்னிடம் கேட்டபோது
உன்னும் படைப்பெல்லாம் படைத்தளிக்கும்
உடையோனும் அவன்தான் ரசூலுமாகத்
தன்னால் அறிவார்கள் என்றுசொன்னேன்
தாஹா முஹம்மது என்னிடத்தில்
இன்னும் ஆயிஷாவே கேளுமென்று
உறுதி யாகவே எனக்குச்சொன்னார்

110. மரணம் அடைந்ததன் பினாலந்த
மையித் தானதைக் குளிப்பாட்டவும்
தருணம் இதுவென்று அதன்தலையில்
தரித்த தலைப்பாவும் விரலணியும்
பருத்த சட்டையும் சாமானையும்
போதும் போதுதென் றெடுக்கும்போது
உரித்த மையித்துச் சடலந்தன்னை
உரியா னாய்க்கண்டு சத்தம்போடும்

111. றூஹு தனைவாங்கிக் கொண்டதாலே
நொம்பல மானே னெஞ்சடலம்
ஆகா எனைத்தட்டித் தேய்ப்பவனே
அதிகக் குளிரையும் சுடுநீரையும்
வாகாய் ஊற்றியே கழுவவேண்டாம்
வரிசை சடலமும் புண்ணாகுது
ஏகன் பெரியவன் அருட்படியே
எந்தன் விதியிது என்னசெய்வேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. என்று சொல்லுமாம் மையித்தது
எடுத்துக் கபனிலே வைக்கும்போது
நன்றி சேரென்றன் தாய்தந்தையும்
நலமாம் இனபந்து பெண்டில்பிள்ளை
கண்டு கொள்கிற மட்டிலெந்தன்
கபனை இறுக்கியே கட்டவேண்டாம்
கொண்டு புறப்படும் போதில்என்னைக்
கொள்ளை கெதியாக நடக்க வேண்டாம்

113. எந்தன் தாய்தந்தை உடன்பிறப்பு
எனக்கு உகந்ததோர் பெண்டுபிள்ளை
சொந்தக் கூட்டத்தார் குடும்பத்தாரும்
தொடர்ந்து வந்தென்னை அனுப்புமட்டும்
வந்த பேர்களே நீங்களுந்தான்
வைத்த சந்தூக்கை எடுத்துத் தாங்கி
சந்தோஷ மாகப் போறீர்களோ
தனியே மையித்துச் சத்தம்போகும்.

114. போட்டுப் போறேனே பெண்டுபிள்ளை
புகழும் மக்களைத் தனிமையாக
நாட்டு முதலெல்லாம் தேடித்தேடி
நலமாய் அவர்களுக் காகவைத்தேன்
பூட்டும் கதவோடு வீடுவாசல்
பிரியாச் சிநேகிதம் அடங்கலையும்
வாட்ட மாகவே இழந்துபோறேன்
வரிசை மக்களே நோகாதீர்கள்

115. தூக்கும் சந்தூக்கைத் தூக்கிவைத்துத்
தொழுகும் இடத்துக்குப் போகும்போது
காக்கும் மையித்துச் சத்தம்போடும்
கருதி மனுஜின் தவிரமற்ற
பார்க்கும் ஹல்க்கெல்லாம் காதால்கேட்கும்
பரவும் மையித்தின் சத்தங்களை
நோக்கும் மக்களே மனையார்களே
நுவலும் எனதுட குடும்பத்தோரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

116. போறேன் நான்நெடுந் தூரமாக
போனால் ஒருபோதும் மீளமாட்டேன்
தாரை தாரையாய் அழுகுமென்றன்
தன்மை மக்களே மனைவியாரே
சீராய் எனக்காக நீங்களுந்தான்
சீமான் இடத்திலே துஆக்கேளுங்கோ
பேராய்ச் சொல்லுமாம் மையித்தது
பிரியா நேசத்தோர் தங்களுக்கு

117. ஈது படிநிற்க மையித்தைநாம்
எடுத்துத் தொழுவித்துக் கபுறறையில்
வாது இல்லாமல் இறக்கிவைத்து
வந்த பேரெல்லாம் மண்ணைத்தள்ளிச்
சீத மாகிய அவன்குடும்பம்
சேர்ந்த சிநேகிதர் மற்றுள்ளோரும்
போதும் போதுமென் றவர்ளெல்லாம்
பூமி தனில்நின்று திரும்பும்போது

118. இந்த விதமாக என்னமலும்
நானும் கபுறிலே தனியாகினேன்
சொந்த துனியாவில் நீங்களெல்லாம்
துய்ய முயற்சியில் வேறாகுறீர்
எந்தன் விதியிது என்னசெய்வேன்
இன்று யானுமே சபூறுசெய்தேன்
வந்த நேசரே தோழர்களே
வரிசை அஸ்ஸலா முஅலைக்கும்

119. பாரும் இச்சிறு பாடலிலே
பகரும் விஷயத்தைச் சுருக்கமாக
நீரும் ஆலோ சித்துப்பாரும்
நெடிய மௌத்தெம்மை விடுகாதென்று
யாரும் அமல்செய்து ஆண்டவனின்
அழகாம் ரஹ்மத்தை ஹாஜத்தாக்கி
ஊரு தனைவிட்டு இறக்கும்போது
உடையான் ஏவலை மறவாமலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

120. சீராய் அமல்செய்து கொள்ளளங்கள்
சீமான் நமக்கருள் செய்யவேண்டும்
பேராய் உலகத்தை நம்பவேண்டாம்
பிரிந்து போவது உண்மைதானே
ஊராம் திரிகோண மலையிலேயும்
ஒலுவில் நகரிலும் வாழுமிந்த
ஏழை மகுமூது அப்துஸ்ஸமது
இருபதி தன்னிலும் வாழ்க ஆமீன்

## ஹௌபுல்கியாமா (மறுமையச்சம்)

121. சொன்னார் முகம்மது நபியுல்லாவும்
துய்ய உம்மத்து மார்களுக்கு
இன்னாள் கியாமத்து நாளையிலே
இருக்கும் பேரெல்லாம் கேட்கப்படும்
முன்னால் தடவையில் ஈமானையும்
முழுதும் தொழுகையும் கேட்கப்படும்
தன்னால் சக்காத்து நோன்பினையும்
தகுமாம் ஹஜ்ஜதும் கேட்கப்படும்

122. மாதருடன் கூடி ஜிமாஉசெய்த
வரிசை முழுக்கினை இறுத்ததையும்
நீத மாகிய தாய்தந்தையின்
நிறைந்த ஹக்கினை இறுத்ததையும்
சீதம் பொருந்திய இவ்வேழுக்கும்
சரியாய் ஜவாபுகள் சொல்லிவிட்டால்
நாதன் சுவர்க்கத்தில் போவாரென்று
நன்மை முகம்மது நபிமொழிந்தார்

123. மலக்கு இஸ்ராயீல் சூருதவும்
மற்ற ஹல்க்கெல்லாம் கபுறில்நின்றும்
கலக்க மாகவும் பசியாகவும்
காணும் நிர்வாண மாகவுந்தான்
பிளக்க முடியாத மனமாகவும்
பெரிய அழுகையாய் அழுதிருக்க
பொழுது தன்னையும் ஒருவல்லயப்
பிராமணத் திற்கொண்டு நிறுத்துவானாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

124. பொழுதி னுடைய சூட்டினாலும்
பூமி காந்தியில் ஹல்க்கெல்லாம்
அழுது கிடப்பார்கள் ஊனமெல்லாம்
ஆறாய் ஓடுமே அந்தவேளை
தொழுது நல்லமல் செய்திராத
துரோகி அவரவர் அமல்படிக்கு
நழுகி நழுகியே கிடப்பார்களாம்
நன்றி கெட்டவர் அந்தவேளை

125. ஆடை இழந்தவர் மனுஜின்னெல்லாம்
ஏகக் கூட்டமாய் இருக்கும்போது
கோடை இடிலாலோர் சத்தம்கேட்கும்
குமுறியெல் லார்க்கும் பயமுண்டாகி
நாடோர் எல்லோரும் தமைமறந்து
நன்மை இழந்தவர் ஹைறானாவார்
போடமுன் வானம் பிளந்துஅதில்
உள் பேரெல்லாம் உடன்வளைவார்

126. இந்தப் படியேழு வானங்களும்
ஏகப் பிளப்பாகப் பிளந்தெல்லோரும்
வந்து வளைவார்கள் இவர்களைத்தான்
வழுத்து வார்நிறை நரகத்துக்குத்
தொந்தர வுள்ள உன்நாவைத்தான்
தொடர வெளியாக்கு இப்போதென்பான்
அந்த நேரமே நரகமது
ஆர வாரத்தோ டேகிவந்து

127. நிற்கும் செய்தியை மஹ்சருள்ளோர்
மிக்க பயத்துடன் கேள்விப்பட்டுத்
தக்க பெரியோனே இந்நரகம்
தன்னை விட்டுநீ காப்பாற்றென்பார்
எக்க வயமே உள்ளவரும்
இலங்கு நபிமாரும் அவுலியாவும்
ஹக்கே இதைவிட்டு எங்களைநீ
காப்பாற்று என்றெல்லாம் அழுகுவாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

128. ஆண்டவ னுடைய உத்தரவால்
அந்த நரகத்தில் நின்றுமொரு
நீண்ட தோளொன்று புறப்பட்டுப்பின்
நெடியோ னிடத்திலே கேட்குமது
மாண்ட பேரிலே ஐந்துகூட்டம்
வழமை யாகவே எனக்குக்கொடு
என்று நரகமும் கேட்கிறதை
இன்ன தென்றிறை விளங்குவானாம்

129. முதலாங் கூட்டத்தார் தொழாதவரும்
உகந்த ரெண்டது சக்காத்தீயார்
மூன்றாம் கூட்டத்தார் வட்டிதின்பார்
முழுதும் நலது கள்ளரக்கு
வேண்டா விஸ்கியும் பிறண்டிகஞ்சா
விளங்கு மஸ்தினை அருந்துவோரும்
நீண்ட துனியாவின் பேச்சுக்களை
நெடியோன் பள்ளியில் பேசுவோரும்

130. மறுத்து மொழியொன்றும் பேசாமலே
வல்லோன் ஈமானார் இவர்களெல்லாம்
பெருத்த இன்னொரு மிருகமொன்று
பிந்தி வருகுமாம் மஹ்சருக்கு
உருக்க மாகிய இறைவனது
உரிய கோபத்தால் படைத்திருக்காம்
பருப்ப மாகிய வாய்களிலே
பத்துலட்சம்பல் உண்டுமென்றார்

131. வந்த மிருகமும் இறையிடத்தில்
பத்துக் கூட்டத் தாரைக்கேட்கும்
அந்த மஹ்சரில் உள்ளவர்கள்
ஆண்ட பெரியோனே இதனைவிட்டு
இந்த மஹ்சரில் உள்ளஇந்த
ஏழை அடியார்கள் தங்களைத்தான்
சொந்த மாகவே காத்துக்கொள்ளும்
துய்யோனே என்று துஆஇறப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

132. பத்துக் கூட்டத்தின் விபரங்களைப்
பகரக் கேளுங்கள் இஹ்வான்களே
முற்றும் தொழுகாத பாசிக்கையும்
முழுதும் நோன்பில்லா மனிதரையும்
புத்தை வணங்குகிற பேர்களையும்
பொய்ச்சாட்சி சொல்லும் கூட்டத்தையும்
நத்துதல் ஆகக் குறையக்கட்டி
விற்கும் பேரையும் இன்னும்கேட்கும்

133. வட்டி எடுப்பாரும் கொடுப்பாரையும்
வரிசைதாய் தந்தை சொந்தத்தாரை
கெட்ட சனாசெய்த பேர்களையும்
கிளறிக் கள்வாண்ட மனிதரையும்
கட்டுக் கடங்காமல் கள்ளர்க்கு
கஞ்சா மதுவுண்ணும் பேர்களையும்
திட்ட மாயிந்தப் பத்துக்கூட்டத்
தாரையும் நன்றாய்க் கேட்குமாமே

134. பெண்ணாய் இருந்தாலும் ஆணாகிலும்
பெருத்த முழுக்குட வேளையிலே
தன்னா லொருநக முடிகளையும்
தானே கழற்றி எறிவாராகில்
மன்னா னிடத்திலே அந்தநகம்
வளரும் உரோமமும் வழக்காடுமாம்
என்றன் நாயனே இந்தப்பாவி
எறிந்தார் முழுக்குடன் பிரிந்தாரென்று

135. உடையோன் கியாமத்தில் ஹல்க்குகளை
ஒன்றாய்க் கூட்டியே பங்கைத்தாக்கித்
தடையில் லாமலே ஒருகூட்டத்தைத்
தானே சுவர்க்கத்தில் மலக்குகளாம்
நடைதான் கொண்டொரு கட்டமது
நரகம் புகுவார்கள் ஷெய்த்தான்களாம்
மடமட வென்றொரு கூட்டமது
மண்ணாய்ப் போகுமாம் மிருகங்களாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

136. மிச்சம் இருக்கிற இரண்டுகூட்டம்
மிகுதி நன்மையும் தின்மைகொள்வார்
பட்ச மாகிய மனிதர்களாம்
படைத்தோன் உரைத்தானே அறிந்துகொள்ளும்
மிச்சம் அலங்காரம் செய்யவிதில்
விரிவு காணாது முடிவுசெய்தேன்
உச்சித மான சொல்லைக்கொண்டு
உறுதி பெறுவீகள் மாந்தர்களே.

137. ஈது படிநிற்கத் தராசிடத்தில்
இணங்கி ஒருவனைக் கொண்டுவந்து
வாது இல்லாமல் நன்மைதீமை
வரிசை யாகவே நிறுக்கும்போது
நீத மாகிய நன்மைகொஞ்சம்
நிறுக்கும் மீசானில் குறையக்கண்டு
ஓதும் இறையவன் இடத்திலேதான்
உள்ள படியொரு செய்திகேட்பான்

138. என்னை ஈன்றதோர் தாய்தந்தையும்
இருக்கும் என்னுடன் பிறப்புகளும்
மண்ணில் இருக்கையில் எனக்குகந்த
வரிசைப் பெண்சாதி மாரிடத்தில்
நன்மை கொஞ்சம்நான் வாங்கிவாறேன்
நாயனே நீயும் விடைகொடென்பான்
உன்னும் பெரியான் உரைப்படியே
உடனே ஏகுவான் மஹ்சருக்கு

139. தந்தை யிட அருகிருந்து
தயவு பொருந்திய தகப்பனாரே
வந்தேன் உனதிடம் நன்மைகேட்டு
வரிசை பாகவே தருவீரென்பான்
எந்தன் யாடொன்றும் தொலையாமலே
யானும் இருக்கிற வேளையிலே
உந்தன் வேலைகள் பார்க்கவொண்ணா
உடனே ஏகுமென் மகனேயென்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

140. தாயார் இருப்பிடம் சென்றுமவன்
தன்மை யாயடி பணிந்துநின்று
மாயப் புவியிலே என்னையீன்று
மரியாதை யாக வளர்த்ததாயே
நாயன் எனக்கொரு நன்மையுண்டேல்
நன்மை சுவர்க்கத்தில் சேர்ப்பேனென்று
ஓயா வாசகம் சொன்னதாலே
உந்தன் இடத்திலே வந்ததென்பான்.

141. மாதா மறுமொழி சொல்லுவாளாம்
வரிசை மககனாரே என்பாடெல்லாம்
நீத மாகவே தொலையவில்லை
நீயும் என்னுடன் பிறப்பிடத்தில்
ஆதர வாகப் போவாயானால்
அவர்கள் ஒருவேளை தரவுங்கூடும்
காத லாகவே அவதுமோடிக்
காக்கா தம்பியைக் கண்டுகொல்வான்

142. அண்ணன் தம்பியும் அதுபோல்சொல்வார்
அடுத்துப் பெண்சாதி இடத்திற்சென்று
கண்ணில் உவப்பான பெண்சாதியே
கல்புக் கனியான கண்மணியே
எண்ணும் உன்னுடைய மேலெண்ணத்தை
இணங்கி நிறைவேற்றித் தந்தேன்நானும்
முன்னும் சுவர்க்கம்நான் போவதற்கு
முருகும் நன்மைதா கொஞ்சமென்பான்

143. தன்னின் பெண்சாதி இதனைக்கேட்டுத்
தானே அவர்க்கு உரைசெய்குவாள்
மண்ணில் நடந்தது மண்ணில்போச்சு
மருவும் நாளிலே என்பாடொன்றும்
எண்ணித் தொலைக்கவே இல்லையானும்
யார்காணும் இப்போ தென்னிடத்தே
நன்மை தனைக்கேட்டு வந்தநீரும்
நாடும் வழிபார்த்து ஓடுமென்பாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

144. தேடி நன்மைகள் வாங்கப்போன
தீரன் திரும்பியே கவலையாகி
ஓடி வந்துமே தராஇடத்தில்
ஒடுங்கி நிற்பானே வெட்கமாக
நாடி இறையவன் அவனிடத்தில்
நன்மை கொணர்ந்தாயா என்றுகேட்பான்
கூடி இருந்தந்தக் குடும்பத்தார்கள்
குறைந்த நன்மையும் தரவுமில்லை.

145. அல்லாஹ் பெரியவன் உரைசெய்வானாம்
ஆளும் துனியாவின் நாட்களிலே
பொல்லாப் பாவங்கள் செய்திருந்தாய்
புகலும் அவர்க்காக எனைமறந்தாய்
வெல்லும் சுவர்க்கத்துப் பதவிசேர
விரைந்து ஒருவரும் நன்மைதர
வில்லை என்றவன் கிருபையாலே
விளங்கும் சுவர்க்கத்தில் போவென்பானே

146. வீடு வாசலும் பெண்பிள்ளையும்
விரும்பும் உங்களின் கூட்டங்களும்
தேடும் பொருளொன்றும் கூடவரா
திராப் பதவிக்கு அமலொழிய
மாடு கன்றுகள் காணிதோட்டம்
மிகவும் பொருளொன்றும் கூடவரா
நீடும் புவியான ஆஹிரத்தை
நேசரே நீவிர் மறந்திடாதீர்

## சுவர்க்கத்து வர்ணிப்பு

147. எங்கள் நபியுல்லா சொன்னதாக
எடுத்து ஓதினார் அபூஹுரைரா
சங்கை யாகிய சுவர்க்கமெட்டு
சாற்று தேயதன் வரலாறெல்லாம்
மங்கை ஆமினா ஈன்றபாலார்
வள்ளல் முகம்மது நபிநாயகம்
திங்கள் வதனத்தார் இரசூலுல்லாஹ்
செப்பும் மொழியைக்கேள் தோழர்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

148. சுவர்க்க வாசலும் எட்டாகுமே
சொல்லி வருகிறேன் மானிடரே
சுவர்க்க முதலாம் வாசலது
சேரும் தாருல் ஜினானேயென்பார்
தவறாமல் இரண்டாம் தாருஸ்ஸலாம்
மூன்றாம் ஜன்னதுல் ம.ஃ.வாவென்றும்
பவறாய்க் கேளுங்கள் நாலாம்வாசல்
பாரில் தாருல் கறாறாமென்றார்

149. நாலு முடிந்தபின் ஐந்தாம்வாசல்
நலமாம் ஜன்னதுல் ஹுல்தியாகும்
ஆளும் மாறுதான் ஃபிர்தௌஸாம்
ஏழாம் வாசல் ஜன்னதுலதுன்
ஏழு முடிந்தபின் எட்டாம்வாசல்
இலங்கும் ஜன்னதுன் நயீமென்பார்
வாழும் மாந்தரே கேட்டுக்கொள்ளும்
வரிசைச் சுவர்க்கத்தின் அடியானது

150. வெள்ளி பொன்னிலும் அமைந்திருக்கும்
விளங்கும் புற்பூண்டு குங்குமமாம்
உள்ளில் சாந்து கஸ்த்தூரியாம்
உதிரும் கல்லுகள் மாணிக்கமாம்
கொள்ளைச் சுவர்க்கத்து மரம்வெள்ளியாம்
கொப்பு மரகத மாணிக்கமாம்
அள்ளி எடுக்கிற பழவகைகள்
அவற்றின் ருசிபற்றி என்னசொல்வேன்

151. அழகாம் ஹுறுலீன் இலட்சணங்கள்
அருமை முத்தைப்போல் மாணிக்கம்போல்
பவள மணிக்கொங்கை பருத்துஇடை
பாங்காய்ச் சிறந்த வடிவுடையாள்
வளரும் முகத்திலே ஒளிவிளங்கும்
அந்த ஹுறுலீன் அணியும்நகை
புழக்கம் உளமாணிக் கம்பச்சை
மரகதம் மின்னும் வைடூரியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

152. அந்தப் பெண்களின் விரல்களிலே
அணியும் மோதிரம் ஒன்றெடுத்து
விந்தை யாகவே காண்பித்தாலோ
வெளிச்ச மாகிடும் உலகமெல்லாம்
பந்து முலைப்பெண்ணைப் பார்த்தவர்கள்
பகரும் மோகத்தால் மயங்கிவீழ்வார்
எந்த நாளிலும் சுவர்க்கத்தாசை
இருக்க வேணுமே நல்லோருக்கு

153. இன்னும் பற்பல நி்.மத்துக்கள்
அமைத்தே இருக்கிறான் இறையவனும்
கண்ணால் ஒருவரும் கண்டிரார்கள்
கருதி ஒருவரும் கேட்டிரார்கள்
எண்ணி ஒருகல்பும் இணங்கியிராது
ஏகன் பெரியவன் குதறத்தையே
வண்ண சுவர்க்கத்து மாந்தருக்கு
மலமும் சலமுமே இல்லையென்றார்

154. ஏதும் ஒருவஸ்தைத் தின்றாரென்றால்
அந்த வஸ்தெல்லாம் வியர்வையாகும்
வாது இல்லாத சரீரவியர்வை
வாசம் பரிமளம் வீசிப்போகும்
நீத மாகிய வாலிபராய்
நெறியாய்ச் சுவர்க்கத்தில் இருப்பார்களாம்
போத மாகிய சரீரத்திலே
உரோமம் ஒன்றுமே கிடையாதென்றார்

155. தலையும் புருவமும் தவிரமற்றச்
சரீரம் அடங்கலும் மயிருமில்லை
முழமும் நீளமும் அறுபதாகும்
அந்தச் சரீரமும் வெள்ளையாகும்
கல்லையும் உடையும் பச்சையாகும்
கமழும் வாசனை கஸ்தூரியாம்
பழகு மணிக்கொங்கை மாதருடன்
பழக்கம் பேசியே இருப்பார்களாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

156. பின்னால் சுவர்க்கத்து வாலிபர்க்குப்
பெரிய நி. .மத்தாய் சுவர்க்கத்துடை
கண்ணால் பார்க்கவே அலங்காரமாய்க்
கருதி அவர்களைச் சோடிப்பித்து
மின்னல் இலங்கிய சுவர்க்கத்துக்கு
விளங்கு மாந்தரைக் கொண்டுபோவார்
எண்ணி இருந்த ஹாசினான்கள்
இவர்கள் சுவர்க்கத்துக் குதிரைஒன்றை

157. பச்சை மரகதக் குதிரைமேலே
பவள மாணிக்க லிக்காவணிந்து
மிச்ச மலங்கிர்த சீனிகட்டி
விளங்கு மாணிக்க வைடூரியத்தால்
எச்சரிக் கையாய் அலங்கரித்து
ஏறு வாகனம் மூமினுக்கு
நிச்சய மாக அமல்கள்செய்த
நீதிப் பெரியவர் ஏறுவாரே

158. அந்தக் குதிரையில் ஏறியபின்
அறுசின் நாளிலே படைக்கப்பட்ட
விந்தை யாகிய தேகங்களும்
விரிவாம் மரகத மாடங்களும்
மந்திரக் கதிர்கள் வீசுமான
வல்ல சுவர்க்கத்து ஹாசினான்கள்
பந்தான செவ்விளங் கொங்கையுள்ள
பாவை ஹூறுலீன் தன்னைக்கூட்டி

159. இவர்க்கு ஸலாமுமே கூறுவார்கள்
அந்த சுவர்க்கத்தில் வந்தபோது
எவர்க்கும் கிறாமுன் காதிபீன்
என்ற மலக்குகள் அங்குஓடி
தவறாமல் பிடித்து அவருடைய
சங்கைத் தலத்திடம் கொண்டுசேர்ப்பார்
எவரும் புகழ்ந்திடு சுவர்க்கவாதி
இறங்கி மாளிகைக் குள்ளேபோவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

160. அங்கே அறைக்குள்ளே போயிருப்பார்
அந்த அறைக்குள்ளே எழுபதறை
எங்கும் பிரகாச வெளிச்சமாக
எழுபது காதத் தூரமாக
சங்கை யாகவே இருப்பதெல்லாம்
தலையை உயர்த்தியே சரியாய்ப் பார்த்துத்
துங்க வடிவான கட்டிலிலே
தூங்கும் போதிலே சொல்லுவார்கள்

161. அல்லாஹ் பெரியவன் உண்மைசொன்னான்
அமலைச் செய்தோர்க்கு ஹூறுலீனும்
நல்ல நி..மத்தும் சுவர்க்கவாழ்வும்
நலமாய்ப் பலப்பல மாளிகையும்
உல்லாச மாகத் தருவேனென்று
உறுதி யாகவே முன்னேசொன்னான்
வல்ல பெரியவன் சொன்னதேபோல்
வாக்கு மாறாமல் எனக்குத்தந்தான்

162. வாசம் பொருந்திய நாச்சிக்குடா
வாழும் மம்முசி லெப்பையீன்ற
நேச மகுமூது ஆரிப்பாலர்
நிறைசேர் அப்துஸ் ஸமதுஆலிம்
ஆசை யாகவே ஆண்டவனின்
அழகாம் றகுமத்தை ஹாஜத்தானோன்
தேசம் புகழ்பெறப் பாடலிதைச்
சொல்லி வந்த மகிமைபோலே

163. எனது தாய்தந்தை ஒஸ்தாதுக்கும்
இல்மைப் படிக்கநல் பொருளீந்தோர்க்கும்
மணக்கும் புகழான மார்க்கவழி
வளமாய்த் தெரிவித்துத் தந்தபேர்க்கும்
இணக்க மாகிய உடன்பிறப்பு
எங்கள் அஹ்லுல் பைத்தினோர்க்கும்
பிணக்கம் அகற்றியே றஹ்மத்தைநீ
பெரிய மழைபோலே சொரிகஆமீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

164. மக்கள் மனைவியர் மற்றுமுள்ள
முஃமின் முஸ்லிம்கள் அடங்கலுக்கும்
சக்கொன் றில்லாத இறையுடைய
சங்கை றஹ்மத்தும் சுவர்க்கம்தந்து
மக்கா முஹம்மது நபிசபாஅத்து
வாழும் திருக்கலி யாணம்கண்டு
ஹக்குப் பெரியவன் சறாபன்தகூறா
என்ற குடிப்பைநீ தருக ஆமீன்

165. ஆதி முஹம்மது நபியும்வாழி
அண்ணல் ஆபூபக்கர் உமறும்வாழி
நீதி உதுமானார் அலியும்வாழி
நெறிசேர் ஹஸன்ஹுஸைன் தாமும்வாழி
வாதில்லா மற்றை நபிமார்வாழி
வரிசை அக்தாபு ஒலிமார் வாழி
சோதியாய் உலுலஸ்மி என்று
சொல்லும் நபிமார்கள் தாமும்வாழி

166. மக்கா மதீனா அஹ.்.பாவாழி
மற்றும் தேசத்து தீனோர்வாழி
ஹக்கன் திருத்தூதர் நபிமகளார்
கண்மணி பாத்தி மாவும்வாழி
திக்க டங்கலும் குத்துபாவாய் வந்த
தீன்தீன் முஹியித் தீனும்வாழி
சக்கொன் றில்லாமல் இறையருளைச்
சங்கையாய்ப் பெற்ற உலமாவாழி

167. காக்கும் புவிகடல் மலையும்வாழி
கரையும் நதியோடு மனுவோர்வாழி
சேர்க்கும் மூமின் முஸ்லிம்வாழி
சிறப்பாய்ப் படிப்பவர் கேட்போர் வாழி
ஊர்க்குள் புகழான ஒலுவில்வாழி
உகந்த திரிகோண மலையும்வாழி
மார்க்கம் தவறாமல் அப்துஸ்ஸமது
ஆலிம் சாஹிபும் வாழ்க ஆமீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறபுப் பதவிளக்கம்

| பாடல் இலக்கம் | அறபுச் சொல் விளக்கம் |
|---|---|
| 13 | குவ்வத் : சக்தி |
| 15 | பனா : அழிவு ஹக்கு : அல்லாஹ் |
| 17 | சுல்தான் : அரசன், ஹாக்கிம் : நீதிபதி |
| 19 | ஹல்கு : படைப்பினம், துன்யா : உலகம் |
| 20 | ஹைர் : நல்லது |
| 25 | மிஸ்கீன், பகீர் : ஏழை |
| 26 | ஹுதா : நேர்வழி காட்டும் அல்லாஹ் |
| 27 | ஸதக்கா : தருமம் |
| 34 | சக்கு : சந்தேகம் |
| 41 | இல்லிய்யூன் : சுவர்க்கம் |
| 42 | ஜவாபு : பதில் |
| 43 | ஜன்னத் : சுவர்க்கம் |
| 49 | லஃனத் : சாபம் |
| 52 | இக்வான் : சகோதரன் |
| 53 | சுவால் : கேள்வி |
| 57 | சர்ரு : தீங்கு |
| 58 | அதாபு : தண்டனை |
| 62 | பனா : அழிவு , பசாது : குழப்பம் |
| 63 | அஸ்ல் : அடிப்படை, பஸ்ல் : கிளை, பிரிவு<br>குஸ்ல் : குளிப்பு |
| 64 | ஒஸ்தாத் (உஸ்தாத்) : ஆசிரியர் |
| 65 | ஹசது : பொறாமை,<br>ஸனா (ஸினா) : விபச்சாரம் |
| 67 | முகர்ரபான மலக்கு : இறைவனுக்கு நெருக்கமுள்ள மலக்கு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாடல் இலக்கம் | அறபுச் சொல் விளக்கம் |
|---|---|
| 70 | கைறுல் அன்பியா : நபிமார்களிற் சிறந்தவர் |
| 72 | மஷ்ரிக் : கிழக்கு, மஃரிப் : மேற்கு |
| 74 | எழுயதல்பு : (எழுபது + அல்பு) எழுபதாயிரம் |
| 78 | முனாபிக் : நயவஞ்சகர் , காபிர் : |
| | நிராகரிப்பாளர், முஷ்ரிக் : இணை வைப்பவர் |
| 79 | மஜூஸி : நெருப்பு வணங்கி, கௌம் : கூட்டம் |
| 80 | யஹூதி : யூதன், நஸாரா : கிறிஸ்தவர் |
| 81 | உம்மத் : சமூகம் |
| 108 | ஹால் : நிலை |
| 118 | சப்று : பொறுமை |
| 119 | றஹ்மத் : அருள், ஹாஜத் : தேவை |
| | ஹௌபுல் கியாமா : மறுமைப்பயம் |
| 125 | ஹைறான்: தடுமாற்றம் |
| 151 | ஹூறுல் ஈன் : சுவர்க்கத்துக் கண்ணிகள் |
| 163 | அஹ்லுல் பைத் : குடும்பத்தினர் |
| 164 | ஷறாபன் தஹூறா : தூய நீர் |
| | (ஹவ்முல் கவ்தர் நீர்) |
| 165 | அக்தாப் : குத்புமார், |
| | உலுல் அஸ்ம் திடசங்கற்பம் பூண்டோர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருமை நபியவதார

# அமிர்த ரஞ்சிதம்

கவிஞர்

அப்துஸ்ஸமது ஆலிம் புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருமை நபியவதார அமிர்த ரஞ்சிதம்

### வெண்பா

ஆல மலைகடலு மானமனு ஜின்னெவையும்
கோல முடனமைத்த கொற்றவனே - நற்றவஞ்சேர்
ஹக்கனருள் மக்கநபி தானவதா ரஞ்சொலவே
இக்கணமே நாவிலருள் நல்கு.

### கலிவிருத்தம்

ஆதிதன் தூதர் அஹ்மது நபியும்
அவரது தோழரபூ பக்கருமறும்
நீதியா யுதுமா னலிஹசன் ஹூஸைனும்
நேர்த்தியாய்ப் பாத்திமா விருபதமும்
வாதிலா பக்தாத் முஹிய்யித்தீ னாண்டவர்
பதமதைச் சிரசினில் பணிந்து
சேதியாய் நபிகள் சிகாமணி பிறந்த
சிறப்பதைத் தமிழினால் உரைப்பாம்

### கல்யாணி ராகம்

ஆலமலை புவிகடலும் படைத்த - ஓர்
ஆதியரு ளாலேயவ தரித்த
ஞாலம்புகழ் செய்திகொஞ்சம் உரைக்க - நாவில்
நல்லவரம் தந்தருள்வாய் ஆதி

ஆதம்நபி நூகுபு றாஹீம் - இன்னும்
அண்ணல்மூஸா ஈஸாநபி வழியாய்
காதங்கமழ் நபியவ தரித்த - அந்தக்
காரணத்தில் சிலதுரைப்ப தாமே.

தானவன ருட்படியே ஆண்ட - சிக்
கந்தரவ ராசனத்தி லாண்ட
ஆணழகர் துல்கறுணை னீன்ற - அந்தக்
காலம.்: தெண்ணூற்றோ டின்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுத்தொராம் ஆண்டதனில் இறையும் - மக்கத்து
அப்துல்லா நெற்றியிலே நபியின்
சர்வஜந்து ஜின்மனுவும் எவையும் - புகழும்
சற்குருவின் ஒளிவதனை அமைத்தான்

மக்கநகர்த் திக்கிலுள்ள பெண்கள் - எல்லாம்
அப்துல்லா நெற்றிதனில் ஒளிவைச்
சிக்கறவே கண்டுழனம் கொண்டு - அவர்
சீர்ப்பாதம் போற்றுதலைச் செய்வார்

இந்தவித வாலிபரை நாங்கள் - இந்த
மக்கத்திக் கெங்கிலுமே காணோம்
சந்திரனோ சூரியனோ இவர்தான் - இறை
தானமைத்த மானிடரோ அறியேன்.

அழகினிய வாலிபரை யாரோ - மாலை
இட்டமங்கை பேர்கதிய டைவார்
புகலுமங்கை ஆடவரின் சாரிதை - அந்த
ஊர்முழுதும் ஓர்கதைய தாமே.

வரிசைதிரி கோணமலை ஊரு - பிறந்து
வளர்நாச்சிக் குடநகராம் பேரு
பிரிசமுள்ள அணிசிலெவ்வை யாரு - பெற்ற
புதல்வர்மஹ் மூதுதவத் தாரு.

மட்டுநகர் ஒலுவிலெனும் பதியில் - அவர்
வந்துமணம் புரிந்தாரிறை விதியில்
திட்டமுடன் அப்துஸ்ஸமத் கவியின் - ஏதும்
சொற்பிழைவா ராமல்கா இறையே.

## விருத்தம்

இப்படி இருக்கப் பின்னால் இறையவ னருளினாலே
செப்பிய வளர்ப்புமகள் சேயிழை ஆமினாவைத்
தப்பாமல் நிக்காகு செய்தார் அப்துல்லாஹ் முதலாம் நாளில்
ஒப்பிய ரஜபுமாதம் ஒளிவதை இறக்கிவைத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி பெரியவனே என்ற மெட்டு

அப்போ திறையவனும் - எங்கள்
ஆல ரபிதரித்த அன்றிரவு
செப்புவான் அமரருடன் - அந்தச்
சேதியதைக் கொஞ்சம்நான் சொல்லுகிறேன்.

வானத் தமரர்களை - என்றன்
வல்ல சுவர்க்கத்து ரம்பையரை
தானோ னழைத்துவைத்து - அப்போது
காற்றும் விசகளம் கேட்டுக்கொண்டார்.

எட்டுச் சுவர்க்கத்திலும் முன்னால்
இலங்கிய வானங்கள் எழினையும்
கட்டுப்பா டாய்த்திறந்து - அதைக்
கடிதாயலங் கரித்திடுங் காளென்றான்

நரகங்கள் ஏழினையும் - வெகு
நன்றி பெருகவே தான்பூட்டிப்
பரவு முஹம்மதர்தாம் - அந்தப்
பாவை வயிற்றில் தரித்தற்காய்

இந்த விசகளத்தைக் - கெட்ட
ஈனன் இபுலீசு கேட்டிருந்து
எந்த விதம்பிழைப்போம் - என்று
ஏங்கி அழுதானாம் துக்கத்துடன்

ஹன்னாசின் மக்களெல்லாம் - தந்தை
கலங்கி அழுவதைத் தாமறிந்து
முன்னால் அடிபணிந்து - எங்கள்
தந்தையரே உங்கள் சலிப்பைவிள்ளும்

இன்றிம் மக்கத்திலே - வஹபு
ஈன்ற மகளாரின் கர்ப்பத்திலே
நன்றி பெருகிநாளும் - நபி
முஹம்மதர் இன்று தரித்ததாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலென் துக்கத்தாலே - யானும்
அழுகிறேன் என்றனின் மக்களெங்குப்
போனாலும் ஜெயங்களொன்றும் - இனிப்
புரிவதும் இல்லையினி மேலென்றான்

மக்கத் ததிபதியாம் - அந்த
முஹம்மதர் இங்கேபிறந் தாரென்றால்
பக்கத்தில் நானிருந்து - செய்யும்
பாசாங்கு பலியாதென் மக்களென்றான்

தேகசந் தனிற்சிறந்த - மிகச்
செல்வம் பெருகும் திருமலையில்
வாசஞ்செய் நாச்சிநகர் - தன்னில்
வாழுமஹ் முதுதவத் தின்பாலகன்

மட்டு நகர்ப்பகுதி தீனோர்
வாழும் ஒலுவில் எனும்பதியில்
கட்டளைப் படிவதுவை - செய்த
காத்திபு அப்துஸ் ஸமதுக்கருள்

### விருத்தம்

அப்துல்லா தவத்தின்பாலர் ஆமினா கர்ப்பந்தன்னில்
ஒப்பிய ரஜபுமாதம் ஓராம்நாள் திங்களன்று
றப்பவ னுதவியாலே தரித்ததன் பின்னால்தானே
கற்புடை ஆமினத்து கண்டகனா விண்டுகரப்பாம்

### செண்டு மலரின் என்ற மெட்டு

மாலை அணிபணியும் மங்கை ஆமினம்மா
கண்டார் கனவு கண்டார் - தங்கள்
சேலை மடவார்க்கும் சீர்மிகும் ஆடவர்க்கும்
விண்டார் அதை விண்டார்
மாதம் முறைமுறையே மாதாவின் வாசல்தோறும்
வாறார் நபிமார் வாறார் - வந்து
நீதம் தரித்தநபி நீயே சுமந்ததென்று
போறார் சொல்லிப் போறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத முதற்பிறையில் மன்னவராம் ஆதம்நபி
வந்தே இங்கே வந்தே - உன்றன்
கெர்ப்பில் சுமந்தசிசு றப்பின் தூதரென்று
விண்டார் பின்னர் சென்றார்
ரெண்டாம் பிறையில்வந்து நாதர் இதிறீசுநபி
சொன்னார் வந்து சொன்னார் - கெட்ட
அண்டா தனவடக்கும் நன்றி முஹம்மதைநீர்
சுமந்தீர் கெர்ப்பிற் சுமந்தீர்

மூன்றாம் பிறையில்நூகு ஆண்டோன் அருட்படியே
கனவில் என்றன் கனவில் - வந்து
ஆண்டோனின் தூதரிந்த அருமை முஹம்மதுன்னில்
தரித்தார் கெர்ப்பில் தரித்தார்
ஆசர் தவத்தின்பாலர் நேசர் நாலாமாதம்
தானே வந்து தானே - கமழ்
வாசர் முஹம்மதுன்றன் வயிற்றில் தரித்தாரடி
மானே மட மானே.

பந்து ஜனங்களிலே சுந்தரப் பெண்களொன்றாய்க்
கூடி ராகம் பாடி - மக்காத்
துரவும் ஸம்ஸம்தண்ணீர் பரவ அள்ளிநீர்
ஆடி விளை யாடித்
தங்க நவரத்தினத்தால் செங்கை வளையதனைப்
பூட்டி வழி காட்டி - நல்ல
சகல பணியாபரணம் பாத ரசமதனைப்
பூட்டி மலர் சூட்டி

பொங்குகலை பஞ்சவர் ணச்சேலை பணிகளையும்
எடுத்து நன்றாய் உடுத்து - நல்ல
புதினமுள்ள அரும்புமுல்லை மல்லி மலரதனைத்
தொடுத்து மலர் அடுத்து
அன்ன நடையுடையார் மின்னற் கொடியிடையார்
நடந்து வழி தொடர்ந்து - அந்த
வண்ணமயில் ஆமினாவும் இன்னுஞ்சில பெண்களுமாய்க்
கூடி நடந் தோடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்கிளி போலேயுள்ள பாங்கிமா ரிற்சிலரைச்
சேர்த்துச் சமயம் பார்த்து - நாமள்
போற வழிதனிலே யாரும் வருவதில்லை
நாங்கள் போவோம் வாங்கள்
என்றே எழுந்தவர்கள் நன்றி யுடனனைவத்
சென்று க.்.பா கண்டு - மொழி
ஒன்றுமே பேசறியார் குபலாம் புத்ததனைக்
கண்டு வாய் கொண்டு

வந்து வலப்பாகமாய்ச் சந்தித்துப் புத்ததனைச்
சுற்றி அதை நத்தி - நீங்கள்
என்றன் கெர்ப்பமதில் வந்த சிசுவைக்காரும்
என்று கொஞ்சம் நின்று
எத்தனையோ புத்துகட்கு முத்தமா சாகனவைத்தார்
அந்நாள் நபிக்கு முன்னால் - எங்கள்
முத்து முஹம்மதரின் கெர்ப்பச் சுடரடிக்கப்
புரண்டு கீழே உருண்டு

யாரும் புகழுமந்தப் பேரும் திரிகோணமலை
நகரை அந்த நகரைச் - சேர்ந்த
ஊரும் நாச்சிக்குடா வாழும் ஆரிபுமஹ்
மூதர் தவப் பாலர்
வாசம் புரியும்மட்டுத் தேசம் ஒலுவிலூரின்
வாசன் விசு வாசன் - பாடும்
தாசன் அப்துஸ்ஸமதின் தோசம் அகலக்கவி
வாசன் மறை நேசன்

மக்கள் மனைவியொடு மற்றும் முடன்பிறப்பு
மாரும் தவப் பேரும் - என்றும்
ஹக்கன் அருள்பெருக்க மக்க நபிப்பொருட்டால்
நாளும் தினம் வாழும்
மாதா பிதாமுதலே ஓதித்தந்த என்றனொஸ்த்
தாதும் தீல் மீதும் - அன்னாள்
ஆதர வாய்ச்சுவனப் பாதை கடக்கவருள்
வாயே இறை நீயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கலி விருத்தம்

புத்தது புரண்டு பூமியில் விழுந்து
புழுதியாய்ச் சரிந்ததைக் கண்டு
நத்தியே வந்த பெண்கள் சிகாமணி
நபித்தாய் ஆமினத் தும்மா
புத்தியாய் மனையில் இருக்கும் தாய்க்கும்
புருஷரப் துல்லாவுக்கும் ஓதி
குத்துமத் திருக்கும் குதறத்து றப்பில்
ஆலமீன் தனைப்புகழ்ந் திருந்தார்

### சீப்பிட்டு என்ற மெட்டு

ஆதியருள் பெற்றநபி பாரில் - ஐந்தாம்
மாதத்தில் இஸ்மாயில் நபிவந்து
நீதியாய் என்றனின் கெர்ப்பிலே - இப்ப
தரித்தார் முஹம்மது நபியென்றார்

ஆறாம் பிறையில்நபி மூஸா - வந்தே
அண்ணல் முஹம்மதுன் மகன்என்று
வீறாகச் சொல்லிஅகன் றனரே - பின்னால்
வருகும் விஷயத்தைச் சொல்கிறேனே

இவ்விதமி ருக்கையிலப் துல்லா - அவர்
காலம் முடிவாகி ஓர்தினம்
செவ்வையாய் நகரபு வாவிலே - மௌத்துச்
சேர்ந்து சுவர்க்கம் அடைந்தனர்

ஆதி அருட்படியப் துல்லா - அவர்
காலம் முடிவாகி ஓர்தினம்
நீதி நபித்தாயார் தாயார் ஆமினா - ஏங்கி
நீண்டு கலித்துமெய் மறந்தாரே

அப்துல் முத்தலி பானவர் - வந்து
அருமை நபித்தாயார் தமைநோக்கி
நட்பான புத்திந சீகத்தும் - சொல்லி
நாயனைப் போற்றியே சபூர்செய்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாம் பிறையிலே வந்தவர் - அங்கே
ஈனமில் லாநபி தாவூது
வாழும் ஆமினா உன்மகன் - நமது
வள்ளல் முகம்மதே என்றனர்

துட்டர் தனையடக்கி ஆண்டவர் - நபி
சுலைமானும் வந்தென்றன் கனவிலே
எட்டாம் பிறையிலே சொல்வரே - நபி
எங்கள் முகம்மதுன் மகனென்றார்

மாதம் ஒன்பது சென்றபின் - வந்து
மரிய மகன்நபி ஈஸாவும்
காதம் கமழும்தன் கர்ப்பிலே - எங்கள்
கத்தன் முகம்மது முத்தென்றார்

இந்த விதமாக ஒவ்வொரு - நபியும்
மாதம் தவறாமல் வந்துமே
சொந்தமாய்க் கனவிலும் நினைவிலும் - அவர்
சொல்வதைக் கேட்டாரே ஆமினா

ஆதி பெரியவா ரஹ்மானே - இந்த
ஆலத்தை எல்லாம் படைத்தோனே
சோதியே என்றனின் கர்ப்பிலே - இறை
தூதர் தரித்தாரென் றுரைத்தாரே.

பச்சை நரம்பேதும் காணகிலேன் - முலைப்
பாலோ சுரந்ததும் தோன்றிலேன்
மிச்சம் புளிமண் கயர்ப்புகள் - தின்று
வேலைப் பணிக்குநான் அஞ்சிலேன்

காலோ கடுத்ததும் இல்லையே - இரு
கண்கள் இருட்டவும் இல்லையே
மேலோ உழைத்துநரம் பிழுத்து - இந்த
மெல்லிய இடைக்குவலி இல்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விதமாக இருந்தவர் - தாயும்
மகளுமாய்ப் பேசிய வேளையில்
முந்தத் தரித்திட்ட கெர்ப்பந்தான் - பெறக்
காலமும் வந்தே அடுத்ததே

மகள்படுந் துயரத்தைக் கண்டவர் - பெற்ற
மாதா சபாவோடி வந்தே
திகழுறு மக்கத்துப் பெண்களை - மிகத்
தீவிர மாகவ ழைத்தாரே

மக்கத்தில் உள்ளவப் பெண்கள்தான் - வந்த
மாதா சபாவுக் கிதுசொல்வார்
மிக்க வருந்தவும் வேண்டாங்காண் - நாங்கள்
வருவது மில்லைநீ போவென்றார்

பெண்கள் வராமல் மறுத்ததால் - அந்தப்
பூவையர் ஆமினா பயமுற்று
கண்பெருகு விழிநீரைச் சிந்தியே - உடுத்த
கலைகள் நனைய அழுதாரே

வருத்தமும் கடுமையாய் இருக்குது - என்றன்
மாதாவே சகிக்க முடியாது
தறத்தில் இருக்குமப்துல் முத்தலி - புக்கு
சடுதியில் ஆள்விடுத் தனுப்புங்கோ

இப்படிப் பிரசவக் காலத்தில் - அங்கே
இருக்கிற அப்துல்முத் தலிபுக்கு
தப்பிடா தாள்விடுத் தனுப்பவும் - அவர்
ஜல்தியாய்ப் பெண்களை அழைத்தாரே

பெண்ணின மாதுகள் சொல்லுவார் - அந்தப்
பூவையர் வீட்டுக்கு நாங்களும்
முன்னுள்ள பகையதும் இருப்பதால் - நாங்கள்
முன்னிடோம் அம்மனை என்றுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளல் நபியவர் பிறப்புக்காய் - மற்ற
மாந்தரும் ஹுறுலீன் மாதரும்
கள்ளமில் லாமனு ஜின்களும் - மற்றும்
காண்பட்சி யும்துஆ கேட்குமே.

அப்துல்முத் தலிபுடை அரசியும் - மற்றும்
ஹாஷிம் குலத்திலுள் ளோர்களும்
ஒப்பற்ற சந்திர சூரியன் - வானில்
உள்ளமலக் குந்துஆக் கேட்குமே.

இப்படி இருக்கையில் ஆமினா - என்னும்
மாது மயங்கியந் நேரத்தில்
செப்பிடு வாராது தன்னிலே - பெற்ற
தாயார் இருந்ததைக் கேட்பாரே

எத்தனை மந்திரம் கற்றவர் - வந்தே
இரவிலும் பகலிலும் முறுசலீன்
பத்துமா தமும்வந்த பெரியோர்கள் - என்னைப்
பயப்பட வேண்டாமென் றுரைத்தாரே

ஹாஷிம் குலத்துதித்த அப்துல்லா - என்னைக்
கலியாணம் செய்ததால் மக்கத்து
வாசிக ளாகிய பெண்களுக் - குற்ற
வருமத்தால் இங்கவர் வரவில்லை

முத்திய குபலது ருண்டதே - அந்த
முக்கிய பாவமோ அறிகிலேன்
நத்திய பெண்களென் அருகிலே - இப்போ
இருந்தாலே நலமாகும் றப்பனா

மாங்குயில் ஆமினார் பிரசவம் - கொண்ட
காலத்தில் இறையவன் சுவர்க்கத்துப்
பூங்கிளி மாதரும் ஹுறுலீன் - இன்னும்
பூவையர் ஆசியா மரியமும்

மனிதர் அறியாமல் இறங்கியே - அந்த
மங்கையர் ஆமினார் இல்லத்தில்
அணியணி யாகவே வந்தவர் - இறை
ஆண்டவன் உரைப்படி நடத்தினார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை தனில்யாரும் விளங்கிய - நல்ல
இனியதிரி கோணமலை மேற்கிலே
விளங்கும் இஸ்லாமியப் பகுதியாம் - நாச்சிக்
குடாநகர் தன்னிலே பிறந்தவர்

மஹ்மூது தவத்துரு வாகினோர் - மட்டு
ஒலுவில் பகுதியை விரும்பினோர்
தகுதியாய் அப்துஸ்ஸ மதினைத் - தினம்
தாபரித் தாளுமென் றப்பனா

தொங்கல்

ஆதி தூதராம் றசூலுல்லா
ஆன ரபீயூலவ் வல்மாதம்
நீதி ஆகிய பனிரண்டிலே
நிகழ்த்தும் திங்கள் சுபுகொகுத்தில்
வாதில் லாமலே க.்.பத்துல்லா
வடகிழக்கி லேஜம்றத் தினுஸ்த்தா
நீதி பதினாலாம் மதியதுபோல்
நிலத்தில் ,உதித்தாரே நபிநாயகம்

வரிசை சிரகினில் எண்ணெய்தேய்த்து
வளரும் இடக்கரம் மறைத்து
பிரிசவலக் கைகலிமா விரலுயர்த்திப்
பேரா நெற்றியும் சுஜூதிருத்தி
அரியகண் கறுமை எழுதி
ஆன தொப்பூழும் தான்கழித்துத்
தெரிய சுன்னத்துச் செய்ததாகத்
தீர்க்க தரிசியும் பிறந்தாரன்றே.

பிறந்தார் நபியுல்லா அந்நாளிலே
பேராஞ் சுவர்க்கங்கள் எட்டினையும்
திறந்தார் வானோர்கள் அலங்காரமாய்
செய்தார் பலபணி வேடிக்கைகள்
சிறந்த நபியுல்லா அபூதாலிபு
செம்மலவர் வீட்டில் பிறந்தாரென்று
திறம தாகவே சோபனங்கள்
சொல்லிப் புகழ்ந்தாரே வானோரெல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈதிப் படிநிற்க நபியுல்லாவை
எடுத்து வரும்படி இறையுரைக்க
தீது விலக்கிய ஜிபுரியீலும்
செம்மல் தனையெடுத் தேகும்போது
நாதன் சுவர்க்கத்து ரம்பையரும்
நளினக் குரவைகள் பாடிப்பாடிக்
காது தலைகண் மூக்குமுத்திக்
கருத்தாய் நாலாற்றில் நீராட்டினார்

எடுத்து மேல்நகர் எங்குஞ்சுற்றி
எல்லாரும் சொல்வார்நபி மார்க்கம்வெற்றி
தொடுத்த படைப்புகள் இவர்கலிமா
சொல்வதே நமது நடப்பென்றும்
அடுத்த வானவர் ஹுறுலீனும்
ஆதித் திருக்கலி மாவதைத்தான்
நடத்திப்பதி ணெண்ணாயிரம் ஆலஞ்சுற்றி
நன்மை முகம்மதை ஜிபுரியீலும்

அன்று ஒருநொடிப் பொழுதுபோலே
அண்ணல் முகம்மதைத் தானெடுத்து
நன்றி பெருகவே எங்குங்காட்டி
நலமாம் வானோரும் ஹுறுலீனும்
கொண்டு கஸ்தூரி பன்னீரம்பர்
குளிர்ந்த மழைபோலே தான்சொரிந்து
நின்ற பறவைகள் பந்தலிட
நிலத்தில் ஆமினார் கரத்திலீந்தார்

கண்டார் ஆமினார் முகம்மதுவைக்
கமழும் கஸ்தூரி வாசனையை
தென்றல் மணம்நன்றாய் வீசுமான
செம்மல் முகம்மதின் முகமல்ர்ச்சை
என்று மறப்பேனோ இறையவனே
என்றன் வயிற்றிலே தரித்தபாவைக்
கண்டேன் என்றவர் தாயார்க்கோதக்
கருத்தாய் சபாமனம் மகிழ்ச்சியானார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்வு பெற்றிடும் நாச்சிநகர்
வளரும் திரிகோணா டிஸ்ட்டிறிக்கில்
புகழ்வு பெற்றிடும் அனிசிலெவ்வை
புதல்வர் மஹ்மூது தவத்தின்பாலர்
அகிலம் தனில்டமட்டு ஒலுவிலூரில்
அன்பாய் மணமது உவந்திருப்போன்
புகலும் அப்துஸ் ஸமதுஆலிம்
சாஹிபு இதனைப் பாடினேனே.

பாடும் பரிசது போலே என்றன்
பாவை மனையிட்டி மக்களுடன்
நாடும் எனது உடன்பிறப்பு
நன்றி அறிவித்த ஒஸ்த்தாதுமார்
கூடும் என்கூட்டங் குடும்பத்தாரும்
குறைவின்றி சுவனப் பதியில் சேரத்
தேடும் எங்களின் நபிபொருட்டால்
சீமான் ரஹ்மத்துச் சொரிக ஆமீன்

## விருத்தம்

ஆல நபிபிறந்த அன்றிரவு வானவர்கள்
கோலத் தமரர்களும் ஹுறுலீன் மாதருடன்
வானல இளமயிலார் வஞ்சியினம் பிறைநுதலார்
சோலைக் கிளிமொழிபோல் சோபனங்கள் சொல்லிநின்றார்

## சோபனம்

சோபனம் சோபனம் சோபனமே - சுப
சோபனம் மங்களம் சோபனமே
தாபரம் செய்தெம்மை இரட்சித்துக் - காத்திடும்
தாஹா நபிக்குமே சோபனமே (சோபனமே.....)

மக்கா நகரிலே வள்ளலிறசூல்
முகம்மது நன்னபி பிறந்ததற்காய்
ஹக்கன் உரைத்தவிச களத்தைக்கேட்டுக்
கருதியே கூறினார் சோபனமே (சோபனமே...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத் தமரரும் ஹுறுலீனும் - இன்னும்
வல்ல சுவர்க்கத்து ரம்பையரும்
நாணம் மிகைத்திடும் மங்கையாசியா
மரியமும் கூறினார் சோபனமே (சோபனமே....)

எட்டு சுவர்க்கமும் தான்திறந்து - அதில்
இருக்கும் கல்க்குகளைக் கூட்டி
மட்டுப் படுத்தியே வைத்திருக்கும் - அந்த
ரிளுவானும் கூறினார் சோபனமே (சோபனமே...)

கானகப் பட்சியும் காடைகவுதாரி
காட்டுடும் பானதும் வேட்டைமுயல்
மானும் மரையும் மறுபடைப்பும் - நன்றாய்
வாழ்த்தியே கூறின சோபனமே (சோபனமே....)

மதீனாப் பதியிலென் ஸாரீகள் - இன்னும்
மக்கத்து முஹாஜிரீன் ஆனவரும்
புதின முடனவர் வந்துவந்து - கண்டு
புகழாகக் கூறினர் சோபனமே (சோபனமே...)

எத்திசை உள்ளவரும் கேள்விப்பட்டு - அங்கே
ஏகி அலங்கரித் தோடிவந்து
சித்தூர்ப் பகுதியில் உள்ளவரும் - கூடி
சேரவே கூறினார் சோபனமே (சோபனமே...)

மயிலும் குயிலின்னும் மாடப்புறா - இன்னும்
வல்லூறும் ஆந்தையும் கோழிசேவல்
பதியில் நபிபிறந் தாரெனவே - நின்று
பாங்காகக் கூறின சோபனமே (சோபனமே....)

திங்கள் இரவிலே ஜம்றத்திலுஸ்த்தாவில்
தேட நடுவபூ தாலிபுவீட்டிலே
சங்கைகை நபியங்குப் பிறந்தாரென்று - மெத்தச
சந்தோஷங் கூறினார் சோபனமே
(சோபனமே....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் சிறந்த திரிகோணமலை - தனைச்
சேர்ந்ததோர் நாச்சிக் குடாநகரில்
தங்கும் மஹ்மூது செய்ததவத்தால் - வந்த
தாஸனும் கூறினார் சோபனமே (சோபனமே....)

அப்துஸ் ஸமதெனும் ஆலிம்சாஹிபு - இன்னும்
அவரின் மனைவி மக்களுடன்
நட்பாக ஈன்றதோர் தாய்தந்தையர் - நபி
நாயகர்க்காய்ச் சொன்னார் சோபனமே (சோபனமே...)

## விருத்தம்

ஆழிசூழ் புவியும் வானும்
அநேகதோர் தானம் மற்றும்
பாழிலா மனுவும் ஜின்னும்
படைத்ததில் நிரப்பி வைத்து
நாளினும் தவறா வண்ணம்
நல்லுண வளிக்கும் - கோமான்
வாழியான் பாடு தற்கு
வல்லவா துணைசெய் வாயே

## முனாஜாத்து வாழி

மக்கா மதீனாவும் பைத்துல் முகத்தசின்னும்
மிக்கஅற பாத்துமலை மேலோனருள் வாழியவே
ஹறமும் கஃபாவும் கனதியுள்ள மாளிகையும்
அறபுநகர் அத்தனையும் ஆண்டோனருள் வாழியவே.

முத்தில் உதித்த முகம்மதர் ரசூல்நபியும்
நித்தம் புகழ்பரவ நீடூழி வாழியவே
லெட்சத் திருபத்தி நாலாயிரம் நபிமார்
பட்சமுள்ள முறுசலீன்கள் பாராள வாழியவே

ஆசை கொண்டிஸ் லாத்திலே அந்நேரம் முந்திவந்த
நேசஅபூ பக்கரலி நீடூழி வாழியவே
வரிசைபெறச் செங்கோலது வகையறிந்து புரிந்தவள்ளல்
அரசினுமர் கத்தாபும் அவர்கிளையும் வாழியவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைமறையை லெவ்குதனில் இறக்கிவைத்த பிறபாடு
குறைகளொன்றும் இல்லாமல் கோர்வைசெய்தோர் வாழியவே
மலியும் புகழுடைய வல்லதுல் லேறிவென்ற
அலியிபுனு அபீத்தாலி பர்கிளையும் வாழியவே.

ஹசனும் ஹுசைனவரும் ஹம்சாவும் அப்பாசும்
பிசகறவே பாத்திமத்து நாச்சியரும் வாழியவே
ச.்.து சயீதவரும் தல்ஹா சுபைரவரும்
மிகுதியப்துர் ரஹ்மானும் மேலோனருள் வாழியவே.

ப.்.தாது நன்னகரில் வாழும்பு சாலிஹ்பாலர்
அகதான் நாயகனின் அருள்பெறவே வாழியவே
அன்பியா அவுலியாக்கள் ஆனஹிளுர் நாயகமும்
நம்பிய மூமின் முஸ்லீம்களும் வாழியவே.

முன்னுள்ள புலவர்களும் முத்தகீன் உலமாக்கள்
நன்னீதி செங்கோல்புரி இராஜாக்கள் வாழியவே
பக்தாத னையுவந்த பாவைமார் அத்தனையும்
மெத்தப் பவுசுபெற்று மேலோனருள் வாழியவே.

வஞ்சிக் கொடியிடையின் வயிற்றிலும் பாலர்களும்
கொஞ்சு மதலைகளும் ஹுதாவினருள் வாழியவே
நாடவரும் மாதவரும் நன்னீதி யுள்ளவரும்
நீடுழிக் காலம்வரை நெடுநாளும் வாழி ஆமீன்

வாழுந்திரி கோணமலை வரிசைபெறு நாச்சிநகர்
ஆளுந்திரு அப்துஸ்ஸமத் அவர்மனைவி மக்களுடன்
மாதா பிதாமுதலே வள்ளலென்றன் ஒஸ்த்தாது
*முதாக்கள் என்பிறவி மார்வாழ வாழி ஆமீன்*

## விருத்தம்

கதிரின் சுடரே முழுமதியே
கானக் குயிலே கருவிழியே
பதியிற் சிறந்த பைங்கிளியே
பாவை மொழியே பர்வதமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துதிசெய் மானே மரகதமே
தூக்கந் தெளிந்து நீயெழுந்து
நதியை அழைத்த நபிபாலில்
நாரியே போய்வா வாமயிலே.

**பதம் – பல்லவி**

அன்னமே நாம் தேடிப் போவமா - நாமன் - ஆதியருள்
சிறந்த நபிமார் வசிக்குந் தேசமா - நம்மீது - நேசமா
(அன்னமே)

**அனுபல்லவி**

வண்ணமலர்ப் பூஞ்சோலை - மாமதீனாவின் பாலை
அன்னமே கதிதருவார் - ஆலநபி பாலெழுந்து
(அன்னமே)

**சரணங்கள்**

கத்தனருள் சிறந்த கோதுமை - நல்ல - கருங்கதலி
ஈச்சையுடன் கனிபொருந்துந் தோடையும் - சித்தம்
மகிழும் வாதுமை மெத்தவளர் மாதுளை - மேன்மையுறு
பலகனியும் சித்திரம்போல் தேனோடும் சிறந்த மக்கா - நகரைநாடி
(அன்னமே)

கோட்டை வாசலே பலகோடி - இறை கோனருள்
அவ்வல்கலி மாத்திறப்புச் சூடியெ - எல்லாரும் கூடியே
வாட்டம் அணுகாத இறைவன் கலிமா திக்ருடன்
பூட்டும் அஸ்கதுவைப் பொருந்திய மக்கநகர்
(அன்னமே)

பாதங்காண ஜனங்கள் கூடுமே - இதைப் பார்வையிடப்
பறவைபல பட்சியினம் கூடமே - பாவம்பிணியோடுமே
காதநறை வீசுமெங்கள் ஹபீபுநபி தன்றவுளா - மேதினியில்
கண்டவர்க்கு மேலான பதவியுண்ணடாம்
(அன்னமே)

ஆடை இடுவார் சிங்காரமே - எங்கள் ஆலநபி பிறந்தமக்காப்
பார்ப்பார் ஒய்யாரமே - காலமுழுதும் ஆதாரமே வாலைகவி
தமிழிசைத்த ம∴மூது அப்துஸ்ஸம தாலிமை - மன்
றாடும் ஆலநபி பிறந்தமக்கா
(அன்னமே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈமான் விளக்கம்

# இஸ்லாம் முழக்கம்

அப்துஸ்ஸமது ஆலிம் புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈமானின் முதலாவது பறுளு

ஈமான் தனக்குத்தான் பறுளாறென்று
இயம்பினார் அதில் ஒன்றாவது
கோமான் அவனொரு பரனா மென்றும்
கூறுமவன் தாத்து சிபாத்துகளில்
சீமான் அஸ்மாக்கள் அப் ஆலிலும்
சேர்ந்த இணைதுணை இல்லைஎன்றும்
ஆமா இறையவ னும் உலகுயிர்விட்டு
அகலா திருக்கின்ற பெரியவனே.

அவனைப் போலொரு வஸ்த்தும் இல்லை
அவன்யா தொருவஸ்தைப் போலுமில்லை
அவனுக் கொருநிறம் தானும்இல்லை
ஆன சுவைவாசம் தாமுமில்லை
அவனுக் கோருசும் புதலும்இல்லை
அவனுக் கொருசேர்தல் பிரிதலில்லை
அவனுக் கொருரீகாலம் தானும்இல்லை
ஆன உறுப்புகள் தாமுமில்லை

அன்னை இல்லாதவன் தந்தைஇல்லான்
அருமை மனைவியும் மக்களில்லான்
இன்னுமவன் அன்னை சுற்றமில்லான்
இச்சை பிணிசுகம் அழுகையில்லான்
தன்னைவிட மற்றை யாரிடத்தும்
தனக்கோர் தேவையும் இல்லாதவன்
பின்னும் அவனுக்கொர் மறதிதூக்கம்
பிசகும் கருமங்கள் இல்லாதவன்

## ஈமானின் இரண்டாவது பறுளு

பட்சமுடன் ஈமான் தனிலிரண்டாம்
பறுளுதனை நன்றாய்ப்ப பகரக்கேளும்
அச்சம் அணுகாத இறையவனின்
அரிய மலக்குகள் உண்டென்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்ச முடன்தரி படுத்துவதாம்
உயர்ந்த .மலக்கிறை படைப்பாமென்றும்
கொச்சையில் லாதநல் லடியாரென்றும்
குறியாய்" அறிந்தீமான் கொள்வதென்றார்

ஆதி ஏவலைச் செய்வோரென்றும்
அற்பம் அவர்மாறு செய்யாரென்றும்
ஓதுமவர் ஆண்பெண் இல்லைஎன்றும்
உரைக்கும் செய்திகள் உண்மை என்றும்
நீதி மலக்குகள் தமைமண்தண்ணீர்
நிறைந்த காற்றுதீ சேராமலே
சோதி ஒளியாலும் நூரகினாலும்
துய்யோன் அமைத்தானென் றீமான்கொள்ளல்

ஆசை யுடன்நபி மாரிடத்தில்
அருமையுடன் வேதசுஹூ" புகள்கொண்டு
ஓசை யுடனதைக் குறையாமலே
ஓதி அறிவிப்போர் அவரில்சிலர்
நேசமுடன் தூது சொல்வோர் சிலர்
நிலத்தில் முறைவண்ணம் வருவோர் சிலர்
வாசமுட னேதான் ரஹ்மத்தேந்தி
வருவார் அவரினில் சிலமலக்கே

## ஈமானின் மூன்றாவது பறுளு

மூன்றாவது கேளுமிறை வேதங்கள்
மொழியும் சுஹூபுகள் கொண்டீமான்
வேண்டும் படிகொள் தாகுமதில்
மேலோன் இறக்கிய வேதம்நாலு
தோன்றும் தவ்றாது மூஸாவுக்கு
துலங்குமெழில் சபூர்தா வூதுக்கு
பூண்ட இன்ஜீலீ சாவுக்கு
புகழும் புறுக்கான் தாகாநபிக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாற்றும் தவ்றாத்து வேதம்தன்னைச்
சங்கை அபராணி பாஷையாலும்
நேர்த்தி யுடன்சபூர் வேதந்தன்னை
நிகழும் யூனானி பாஷையாலும்
ஏற்ற புகழின்ஜீல் வேதந்தன்னை
இனிய சுரியாணி பாஷையாலும்
பார்த்துப் பகர்புறுக் கான்அறபி
பாஷையாலும் தானிறக்கி வைத்தானே.

அடங்காப் புகழ்கொண்ட குர்ஆன் தன்னை
அறியும் ஒவ்வோர் எழுத்தாவது
ஒழுங்காப் பெரும்காபு மலைமட்டிலே
உடையோன் மஹ்பூளாம் பலகைதனில்
திடங்கொண்டே அதைமிகவே தீட்டிவைத்துச்
சிறந்தலைலத் துல்கதிர் என்கின்ற
இடங்காண் இரவிலே லவ்ஹில் நின்றும்
இறக்கினானே அதைமுழு மொத்தமாக.

மொத்த மாகவே சிறப்பாகிய
முன்வான் அளவிலே இறக்கிவைத்து
சித்தி யுறுமந்த வானத்திலே
தெளிவாகிய பைத்துல்இஸ் ஸரவென்னும்
முத்தி தரும்வீட்டில் வைக்கப்பட்டு
முடிந்த பிறகதை ஜிபுரயீல்தான்
தத்தி தத்தியாய் இருபதாண்டு
தானே கொண்டுமே இறக்கினார்கள்

சாற்றும் சுஹுபுகள் நூற்றுப்பத்து
தனிலே ஒருபத்து ஆதமுக்கு
ஏற்றும் நபிசீதுக் கைம்பதாகும்
இன்னுமோர் முப்பதாம் இதிரீசுக்கு
போற்றும் இபுறாஹீம் நபிக்குப்பத்து
புகழும் மூஸாவுக்குத் தல்றாத்துடன்
தோற்றும் சுஹுபுகள் பத்தாமிவை
துய்யோன் வசனமென் றீமான்கொளல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈமானின் நான்காவது பறுளு

நாலாவது கேளும் நபிமார்களை
நாடி விசுவசித் தீமான்கொள்ளல்
ஆலம் புகழ்நபி மார்களெல்லாம்
அரிய பெரும்பாவம் சிறுபாவங்கள்
காலா காலமும் இல்லாதவர்
கருதும் ஆண்பிள்ளை நாட்டாமக்கள்
பாலாய் இருக்கிற மேனியிலே
பழுதொன் றணுகா தெனமொழிந்தார்

லட்சத்துப் பத்து நாலாயிரம்
இலக்கம் உள்ள நபிமாரிலே
பட்சம் பெருத்திடும் முறுசலீன்கள்
பகரும் முன்னூற்றுப் பதின்முன்றென்றும்
இச்சையுடன் நின்றும் அதில்கிலாபு
எடுத்தார் முன்னூற்றுப் பதினைந்தென்றும்
அச்சம் அணுகாத ஊலுல்அஸ்மி
ஆறுநபி என்றார் அறிவாளரே

இந்த நபிமார்கள் பேரைஎல்லாம்
எடுத்து உரைத்திட ஏலாதிடின்
விந்தையுறும் நல்ல குர்ஆனிலே
மேலோன் அருளிய இருபத்தைந்து
சொந்த நபிமார்கள் பேர்களதமைத்
தொகுத்து அறிவது கடனாகுமாம்
அந்த முடன்கேளும் ஊலுல்அஸ்மி
ஆறு நபிமாரின் பேர்சொல்லுவேன்

கேளும் அதில்முதல் ஆதமாகும்
கிருபை யுறுநூஹு இபுறாஹீமும்
வாழும் நபிமூஸா ஈசாவுடன்
வள்ளல் முஹம்மது நபியுமாகும்
ஆளும் நபிமார்கள் அனைவருக்கும்
அவ்வல் ஆதமாம் ஆகிர்நபி
மூளும் குபிர்க்குலம் தனையறுத்த
முஹம்ம தெனச்சொல்லி மொழிந்திட்டாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் நபித்தாயார் ஆமினாவாம்
இலங்கும் தகப்பனார் அப்துல்லாவாம்
அங்கம் ஒளிரப்துல் முத்தலிபு
ஆன பேரனார் ஹாஸிம்பூட்டன்
பங்கமறும் அப்துல் மனாபு பாட்டன்
பலம்சேர் மக்காவில் பிறந்தவராய்த்
துங்க மதீனாவில் அடங்கியவர்
துலங்கும் நபிக்குப்பின் நபியே இல்லை

## ஈமானின் ஐந்தாவது பறுளு

ஒடுக்கத்து நாளைக்கொண் டீமான்கொள்ளல்
உரைக்கும் பறுளினைந் தாவதாகும்
அடுக்கும் மவுத்துவந் ததன்பின்னாலே
அடங்கும் கபுறும்மற் றிடங்களிலும்
சடுத்த முடன்பத்தா னெனும்மலக்கு
சடுதி தனில்வந் தெழுப்பிவைத்து
விடுக்கும் ஜடத்துக்கு றூகைவிட்டு
விரைவில் சிலகேள்வி கேட்டுக்கொள்வார்

பின்னுமே கறுணைக்கீ றென்கின்ற
பெரியமலக் கிருபேரும் வந்து
திண்ண முடன்சில கேள்விகளை
திடுக்கம் வரக்கேட்டு சாலிஹானால்
பொன்மின் சுவர்க்கத்து வாயில்தன்னை
பொருந்தித் திறப்பார்கள் நேரிலே
இன்னுமவன் கெட்ட பாசிக்கானால்
எரியும் நரகத்தைத் திறப்பார்களே

திறக்க சுவர்க்கத்தின் அழகாகிய
தெளிந்த நி. மத்தைத் தாயிமாக
பறக்கத் தாகவே சாலிஹான
மனிதர் அனுபோகம் செய்துநிற்பார்
வெருகும் நரகத்து வாயில்தன்னை
விரைவில் தீயரவும் பூரான்தேளும்
முருகுமதா வைத்தான் பாசிக்கான
மூடர் அனுபோகம் செய்வார்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈமானின் ஆறாவது பறுளு

அந்தமுடன் ஈமான் தனிலுண்டான
ஆறா வதுபறுளு தனைக்கேளும்
இந்தப் புவியினில் வரும்நன்மையும்
இணங்காத் தின்மையும் நய நட்டமும்
விந்தை யுடனின்ப துன்பங்களும்
மேலோ னிடத்தில்நின் றுள்ளதென்றும்
சொந்தப் படைப்பென்றும் அவன்விதிபோல்
தொகுப்பாய் நடக்குமென் றீமான்கொள்ளல்

ஆகும் இவையெல்லாம் மனிதருக்கு
அல்லும் பகலெந்த நேரத்திலும்
தானே நடப்பது அவன்நமக்கு
தக்கபடி இட்ட கட்டளைகொண்டு
ஆனால் நமக்கொரு நன்மைசெய்ய
அதனை விடவுமோர் தீமைசெய்ய
தானே கூடுமோ எனக்கேட்டிடில்
சாற்றும் மறுமொழி தனைக் கூறுவாய்

இரண்டும் அவனிடத் துள்ளதென்றும்
இசையும் படிநன்மை செயப்பொருந்தி
முரண்டுத் தனமான தின்மைகளை
முயற்சி யுடன்செய்யப் பொருந்தமாட்டான்
அரண்டு வரும்பின்னால் நடக்கும்செய்தி
அதனை அறிவித்துத் தரவுமில்லை
திரண்டு வருமேவல் விலக்கலென்று
செப்பும் இரண்டையும் அறிவித்தானே

அறியத் தராதிடுங் கருமங்களை
ஆராய்ந் ததிலென்ன பலன்களுண்டு
பிரிய முடனவன் அறியத்தந்த
பெரிய கருமத்தை மனத்திலாய்ந்து
குறையற்ற ஏவும் ஏவல்தன்னைக்
குணமாக எடுத்தந்த விலக்கல்களைப்
பறையத் தகுமான படியேவிட்டுப்
பாரில் நடப்பது பறுளாகுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குர்ஆனில் சொல்லிய இருபத்தைந்து நபிமார்

ஆதி குர்ஆனில் அருளச்செய்தான்
ஆன நபிமார்கள் இருபத்தைந்து
ஓதும் அவர்கள் பேரைநன்றாய்
உரைக்கக் கேளுவந்தே முதலாதமாம்
நீதி விளங்கிய இதிரீசுடன்
நீங்கா நபிநூஹு கூதுஇன்னும்
போதித் திடும்நபி சாலிஹுடன்
பொருந்தும் இபுறாஹீம் நபியுமாமே

இன்னும்கேள் லூத்துடன் இஸ்மாயீலும்
இனிய இஸ்ஹாக்கு எ்.கூப்புடன்
வண்ணம் துலங்கிய நபியூசுப்பு
வகுத்த ஐயூபு சுஜபுஹாரூன்
திண்ண முறும்மூஸா அல்எசஉ
சிறந்த துல்கிப்லி அவர்களுடனே
சொன்னார் தாவூது சுலைமானுமே
தொகுக்கும் இல்யாசு நபியுமாமே

கேளும் யூனுசு நபியுமாகும்
கிருபை பொருந்திய சக்கரியாவும்
வாழும் நபிஎஹ் யாவுமாகும்
வரிசை யுளநபி ஈசாவுடன்
ஆளும் நபிமாருக் கரசரான
அண்ணல் முஹம்மது நபியுமாகும்
நாளும் இதுநபி மார்கள்பேரை
நன்றாய் அறிவது பறுளாகுமே

இந்த நபிமார்கள் பேர்கள்தம்மை
இணக்க முடன்நன்றாய் அறிவதுடன்
சொந்த அடிமைகள் மனைவிமக்கள்
தோற்றும் இனபந்தாய் இருப்போருக்கும்
எந்த விதத்திலும் படிப்பித்திட
எவர்க்கும் விதியாக இருக்குமென்றும்
இந்தப் படிஅகீதத் துல்அவாமி
என்னும் கிதாபிலே எடுத்தோதினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்லாத்தின் முதலாவது பறுளு

சொல்லும் இஸ்லாத்தை ஐந்துதூணில்
துய்யோன் நிறுத்தினான் அதனைக்கேளும்
நல்ல சஹாதத்துக் கலிமாவிலும்
நாயன் தனைத்தொழும் தொழுகையிலும்
அல்லல் அணுகாத ஸக்காத்திலும்
அருமை யுடன்ரமழான் நோன்பிலேயும்
கல்லை யாரச்செய்யும் ஹஜ்ஜிலேயும்
கருத்தாய் அதைத்தரிப் படுத்தினானே

ஆனததில் முந்தும் பறுளாவது
ஆசைக் கலிமாவைச் சொல்வதாகும்
மானார் புருடனார் மக்கள்யாரும்
வாய்த்த வலியோர்கள் சிறியோர்களும்
தான முடனோதும் கலிமாவிலே
சறுத்து நாலுண்டாம் அதுபோலவே
ஞானம் பொருந்திய பறுளுநாலு
நாடி அறிவது கடனாகுமே

இந்த ஸஹாதத்துக் கலிமாவிலே
இணங்கும் சறுத்து நாலாங்கலிமா
சிந்தைப் பொருத்தமாய் நாவினாலே
செப்பிக் கல்பினால் ஒப்புவது
சொந்தமுறும் மார்க்கம் தனிலேநன்றாய்
தொடர்ந்து நடப்பதும் மார்க்கம்தன்னில்
எந்த விதமான பறுளுகளும்
இறுத்து வருவது கடனாமென்றார்

காக்கும் கலிமாவில் பறுளுநாலு
காணும் அவன்தாத்தைத் தரிப்படுத்தல்
ஏற்கும் இறையவன் சிபாத்துகளை
இணக்க முடன்தரிப் படுத்துவதாம்
பார்க்க அடங்காத நப்ஷினாலே
பக்தி விசுவசித் திடுவதுவும்
மார்க்கம் தனில்சொன்ன அடங்கலையும்
மனதில் நிஜங்கொள்ளல் நாலாகுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்லாத்தின் இரண்டாவது பறுளு

இஸ்லாம் தனின் ரண்டாம் பறுளாவது
ஏகன் தொழுகையைத் தரிபாடாக
பஸ்வாய் உரைத்திட்ட பறுளுகளும்
பாங்கு மிகும்நல்ல சறுத்துகளும்
அஸ்லும் அதபுகள் சகலதையும்
அறிந்து தொழுவதாய் இருக்கும்கண்டாய்
பிசகா தொருநாளைக் கைந்துநேரம்
பேணக் கடன் அல்லால் ஊறில்லையே

தண்ணீர் தனிவாழ்ந்து கிடக்கிலுமாம்
தாங்கா நெருப்பிலே தரிக்கிலுமாம்
திண்ண முடன்படை தனிலேசென்று
ஜீவித் திடுகிலு மதுபோலவே
என்ன கருமத்தில் இருந்திட்டாலும்
இறையைத் தொழும்நேர மானதென்றால்
உன்னிச் சுருக்கிலே தொழுதுகொள்ள
உடையோன் விதித்ததோர் பறுளாகுமே

## இஸ்லாத்தின் மூன்றாவது பறுளு

குணங்கொண் டிடுமிஸ் லாம்தனிலே
குறிக்கும் பறுளினில் மூன்றாவது
இணங்கும் முதலுள்ளோர் இறைக்காகவே
எடுத்தீந் திடும்ஸக்காத் எனமொழிந்தார்
பிணக்க முடன்யா திருப்பவர்கள்
பெரிய நரகத்தில் விழுவாரென்று
கணங்கள் பூதங்கள் எலாம்படைத்த
கத்தன் குர்ஆன்ஆயத் திறக்கினானே

யாரும் ஒருவன்தான் அவன்முதலில்
ஆசை காத்துப்பூண் டிடப்பதுக்கிப்
பாரில் அதையீயா திருப்பாராகில்
படைத்தோன் தனக்......
யாரும் பயந்திடுமாம் நரகத்திலே
அவனும் தரிப்பட்டுக் கிடப்பானென்று
கூறும் வேதவாழ்த் ததைஎடுத்துக்
கூடும் குபிர்க்குலம் அறுத்தோர் சொன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்த்தி தருமந்த ஸக்காத்துடைய
நிசாபு தனைநின்றாய் நிகழ்த்தக்கேளும்
தோற்றும் இருபது களஞ்சிறிதி
சுத்தமுடன் வெள்ளிக்கா சிருநூறு
வேற்று மிரைப்பென்றிக் கூலியன்றி
விளைந்த நெல்முதல் தானியங்கள்
தோற்று மதுகோட்டை ஐந்ததுபோல்
சொல்லும் பலவகை தனிலுமுண் டாம்

வேணு மிறைப் பென்றிக் கடலியன்றி
விளங்கும் மழையினால் விளைத்தெடுத்த
தானியங் களிலே கோதுமைநெல்
சாமை தினைஉளுத் தொடுகடலை
மான முறுமொச்சை வரகுசோளம்
வாய்த்த பெரும்பயிர் சிறுபயறு
ஈன மறும்கேப்பை இறுங்குகம்பு
இவையெல்லாம் பத்துக் கொன்றாகுமே.

இச்சையுறு நல்ல மழையில்லாமல்
இறைப்புக் கூலியால் விளைத்தெடுத்தால்
உச்ச முடனிரு பத்துக்கொன்று
உரிசை யுடனீச்சம் பழம்தனிலும்
பட்ச முடன்கொடி முந்திரீகப்
பழங்கள் தனிலிந்தப் படியேபூணும்
அச்ச முடனிந்த வகைப்படிக்கு
ஆன ஸக்காத்தை அளிக்க வேணும்

## இஸ்லாத்தின் நாலாவது பறுளு

ஏற்ற முடி னிஸ் லாம்தனிலே
இணக்க முடன்நாலாம் பறுளாவது
தோற்றும் வருடங்கள் அடங்கலிலும்
துய்யதாய் வரும்ரமழான் மாதம்
நேர்த்தி யுடன்நோன்பு பிடிப்பதாகும்
நீங்கா ததுஆக்கில் பாலிஹானால்
பார்த்துத் திரிகின்ற முஸ்லிம்களில்
பாரப் பறுளாகும் எனமொழிந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறும்படி ரமழான் நோன்பதனைக்
குறிப்பாய்ப் பிடித்ததன் இரவுகளில்
வாறு பெறநின்று தொழுவாராகில்
வல்ல பெரியவன் தனதுகப்பால்
ஊறும் பாவமெல்ல லாம்பொறுத்து
உகந்த பெரும்பாலன் போலெனவும்
சேரும் பெரும்புலி அலிமாமனார்
செம்மை யுறும்வாயால் செப்பலுற்றார்

மற்றை அமல்களைப் போலில்லாமல்
வரிசையுறும் நோன்பு தனைப்பிடித்தால்
கத்தன் இதற்காகக் கூலியீவான்
கருதிப் பிடித்தவர் சுவர்க்கத்திலே
வெற்றி பெறவீற் றிருப்பாரென்று
மேலோன் பொருந்திய பேர்களென்றும்
சித்தி யுறும்நல் கிதாபுகளில்
சிறந்த அறிவாளர் எடுத்தோதினார்

## இஸ்லாத்தின் ஐந்தாவது பறுளு

நன்றாய் உவந்துகேள் இஸ்லாத்திலே
நவிலும் படிஐந்தாம் பறுளாவது
குன்றா முதலுக்கு ஆண்பெண்ணெல்லாம்
குறையா தருள்சேரும் பைத்துல்லாவில்
வென்றியுடன் வாழ்நாள் தனிலோர்தரம்
விருப்பமுடன் ஹஜ்ஜுச் செய்வதாகும்
ஒன்றாகிய ரப்பில் ஆலமீன்தான்
உவந்த மனிதர்மேல் பறுளாக்கினான்

யாரும் ஒருவன் அல்லாஹ்வுக்காக
அழகுதரும் ஹஜ்ஜை அடைவானாகில்
ஏற முன்பிழை அடங்கலையும்
இறைபொறுப் பானென் றுரைத்துப் பின்னும்
தீரா ததில்துஆச் செய்வாராகில்
சிறந்த சபாஅத் துண்தென்றும்
ஆறாப் புகழ்நபி சொன்னஹதீது
அதனை இறுசா தெடுத்தோதினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக முதலுள்ளோர் எவராகிலும்
புகழ்சேர் பைத்துல்லா தனிலேஹஜ்ஜு
தாக முடன்செய்யா திருப்பாராகில்
தடையின்றிப் பொல்லா எகூதியாயும்
வாகற் றிடும்நஸா றாணியுமாய்
மாய்ப்பான் எனநபி சொன்னதாக
ஆக் முடனலிப் புவியைத்தொட்டும்
அருமை யுடன்திரு மிதியுல்சொன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிபெருமானார் (ஸல்) அவர்களின் இறுதிவேளை

அப்துஸ்ஸமது ஆலிம் புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நபிபெருமானார் (ஸல்)

## அவர்களின் இறுதிவேளை

### விருத்தம்

1. வாசம.்.தெல்லாம் திமிதிமென்ன
வளரும் பூஞ்சோலை காவனமும்
தேசந் தனக்கெல்லாம் பொதுத்தலமாம்
சிறந்த முஹம்மது பிறந்தமக்கா
வாசி யாகிய அறபிக்காபிர்
வளைந்து முஹம்மதை யிழந்தகதை
ஆசை யாகவே சொல்லநாவில்
ஆதி பெரியோனே துனைசெய்வாயே

2. மக்கா மதினாவும் அறபுநாடும்
மற்று மிடமுந்தா னன்னாளிலே
தர்க்க முடனேதான் சண்டைகளும்
தாங்க முடியாத கொலைகளவும்
துக்க ம.்.தெல்லாம் நீங்கிவாழத்
தூண்டு கோலொன்று மில்லாமலே
மிக்க சிறுபெண்டு பிள்ளைகளை
வீணி லுயிருடன் புதைக்கலானார்

3. ஆன சிறுபெண்டு குழந்தையவர்
அல்லாஹ் கொடுத்தது இருக்குமானால்
வீணா யவமானம் துன்பமெல்லாம்
வெட்டும் கபுறுக்குள் ளுயிருடனே
நாநா மல்கேட்டுப் புதைத்துவந்தார்
நன்றி .........குழந்தைகளைத்
தானே யதுபோல இன்னும்பாவம்
தப்பா தப்போது செய்துகொள்வார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மக்கா தனிலுள்ள க.்.பாவிலே
வளர்ந்த புத்துக்கள் முன்னூறோடு
மிக்க அறுபது பூத்துவைத்து
வேலை பணிசெய்து வணங்கிவந்தார்
சக்கொன்று மில்லா தவருடைய
சாமி யதுவென்று நினைவுகொண்டு
ஒக்க் பெரியோரும் சிறியோர்களும்
உண்மை யாயிதை அறிவோமென்பார்

5. காமக் கள்குடி இருளடைந்து
ஊக்கன் தனைநாடாக் காலத்திலே
யாபா ரம்செய்த நபிநெயினார்
தங்கி னாரந்த ஹிறாமலையில்
தாபரம் செய்யும் இறையவனும்
தானே ஜிப்ரயீல் மூலமாகத்
தீவிரம் சென்று முஹம்மதிட்ம்
தீனை விளைவிக்க ஓதுமென்றார்

6. அப்போ துடனேவே ஜிப்ரீல்வந்து
அண்ணல் முஹம்மது நபியிடத்தில்
இப்போ துனதுட ஆண்டவனின்
உண்மைத் திருநாமம் ஓதுமென்றார்
செப்ப முடன்நபி திருவாயினால்
சொன்னார் ஜிப்ரயீல் தங்களுக்கு
எப்போ தாகுதல் ஓதுவதை
யானு மறிகிலேன் என்றுரைத்தார்

7. ஈது மொழிகேட்க ஜிப்ரயீலும்
இறங்கி யவருடன் நெருங்கிவந்து
வாது செய்யாம லோதுமென்று
வழங்கும் இக்றஹ் சூறத்திலே
ஆதி சிலவரி ஓதிக்காட்டி
அண்ணல் முஹம்மதை விட்டகன்று
பாதி யிடத்திலே ஜிப்ரயீல்தான்
பண்பாய் சென்றபின் நபிநெய்னார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கூதல் குளிருகள் அதிகரித்துக்
கொண்ட பயத்தினால் மலையிருந்து
காத லாகிய கதிஜாவிடம்
கடிந்த பயத்தினால் நடந்துசென்று
தேறு தல்பெற்றுத் துணியினாலே
சீரா யென்னையும் போர்த்திடுங்கள்
பூத லந்தனில் நானுமொரு
புதிய அதிசயம் கண்டுவந்தேன்

9. கண்டே னெதுட காதலியே
கருத்தாய் ஜிப்ரயீல் வந்ததுவும்
நன்றாக வோதச் சொன்னதுவும்
நானு மறியேனென் றுரைத்ததுவும்
இன்றே இக்றஉ சூறத்திலே
எனக்குத் தொடக்கத்தை உரைத்ததுவும்
ஒன்றும் விடாமலே ஹதிஜாவுக்கு
உரைத்தார் நபியுள்ளாஹ் கருத்தாகவே

10. ஓது மொழிகேட்டு ஹதிஜாவுமே
உரைத்தார் நபியுள்ளாஹ் தங்களோடு
ஆதி யுங்களை யழிக்க மாட்டான்
ஆகும் பணிவிடை யளித்துவாறீர்
நீதி யாகவே குடும்பத்தோடு
நேராய் நடக்குறீர் தாய்பிள்ளையை
வாதில் லாமலே நடத்திவாறீர்
வந்த விருந்தாளி தங்களோடும்

11. இரக்கம் பாராட்டி விருந்தளிப்பீர்
இன்னும் வியாபாரம் செய்துவாறீர்
பொறுக்க முடியாது கஷ்டவேளை
பொறுதி சொல்லியே ஆற்றிவாறீர்
துறக்கு நுபுவத்துக் கொண்டுவந்த
தூதர் ஜிப்ரீலாய் இருக்கவேணும்
சிறக்கும் கலிமாவை யெங்களுக்குச்
சொல்லித் தரவேண்டும் என்றுசொன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. பாவை ஹதிஜாவும் பார்த்தாவுடன்
படைத்த பெரியவன் நபிநீரென்று
கோவைக் கனியான வாய்திறந்து
குறிப்பாய்ப் பேசிய வேளையிலே
காவுந் தருவுள்ள மக்கநாட்டில்
ஹக்கன் தூதுவர் முஸம்மிலைத்தான்
நாவு தனில்மெத்த நளினமாக
நன்மை நபிபாலில் ஓதினாரே

13. போர்த்தி யேவைக்கச் சொன்னவரே
புதியோன் உமக்காக நபிப்பட்டத்தைக்
காத்தி ரமாகத் தந்நதானிப்போ
கருத்தா யெழும்பியே மனிதருக்கு
ஆத்தி ரமுடன் அல்லாஹ் உண்டும்
அருமை நபியாக நானும்வந்தேன்
போற்றிப் புகழ்ந்துதான் கலிமாச்சொல்லிப்
புகழாம் இஸ்லாத்தில் அழையுமென்றார்

14. அண்ணல் முஹம்மது தங்களுக்கு
அருமை நபிப்பட்டம் கிடைத்தபோது
முன்னு மபூபக்கர் ஹதீஜாவுடன்
முதியார் சைதுடன் அலியும்வந்தார்
இன்னும் பிலால்வந்து கலிமாச்சொன்னார்
இவர்கள் ஐவர்தான் முதன்முதலாய்
பின்னு மபூபக்கர் தூண்டுதலால்
பிந்தி யுதுமானும் சுபைறும் வந்தார்

15. வந்தா ரவரோடு தல்ஹாவுமே
வரிசை யப்துர் றஹ்மானாரும்
இந்த விதமாக யிவர்களெல்லாம்
இணங்கி வந்ததை மற்றோர்கண்டு
சந்தோஷ மாகக் கொஞ்சங்கொஞ்சம்
சார்ந்து யிஸ்லாத் திலாகிவந்து
அந்த நாளிலே இபாதத்துக்கள்
அனைத்தும் மறைவாக நடக்கும்நாளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. அல்லாஹ் வுரைசெய்தான் நபியுள்ளாவே
அதிக விரைவாகப் பகிரங்கமாய்
எல்லா மனிதரு மறியும்படி
இஸ்லாம் மார்க்கத்தை ஓதுவியும்
சொல்லு மொழிகேட்டு நபிநாயகம்
துலங்கும் சபாவென்னும் மலையிலேறி
எல்லாக் குடும்பமும் வாவென்றோத
ஏகப் பெருக்கமாய் ஓடிவந்தார்

17. ஒவ்வ ஒருவாக்கும் நபிநாயகம்
ஒழுக்க மாகவே நடக்கவேணும்
செய்கை தவறியே நடந்தால்நாளை
சீமான் அதாபுக்குள் ளாகுவீர்கள்
வல்ல பெரியவ னுண்டுமென்றும்
வரிசை முஹம்மது நபிதானென்றும்
இவ்வா றாகவே நப்ஸைப் பேணி
இணங்கி யள்ளாவைப் பயந்துகொள்வீர்

18. கலிமா தனைச்சொல்லி யிஸ்லாமாகிக்
கருத்தாய்ப் பர்ளுகள் சர்த்துகளும்
பெலனாம் தொழுகையும் நோன்புஹஜ்ஜு
பெருத்த சக்காத்து மளிக்கவேணும்
சலியா மனத்துடன் செய்வீரானால்
சங்கை சுவர்க்கத்தை இறைதருவான்
ஒளியாக் குபிர்கொண்டு இருப்பீராகில்
ஒயிலாம் நரகத்தில் போகவேணும்

19. என்று நபிசொல்லக் கேட்டிருந்து
ஏது மறியாத அபூலஹபு
நன்றி யறியாத முஹம்மதுக்கு
நாளும் கேடுஉண் டாகவேணும்
இன்று யெங்களை யிதற்காகவா
இங்கே யழைத்துநீ சுணக்கிவைத்தாய்
என்று அவன்கதை சொன்னவுடன்
ஏக பெரியவன் ஜிப்ரீல்மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. உடனே சூறத்து தப்பத்யத்தா
உடையோ னிறக்கினான் மாற்றமாக
கொடியோன் அபூலகப் பென்பவனும்
கோதை ஹம்மாலா யிருவருமாய்
நெடிய நரகத்தி லிருக்கவேணும்
நீண்ட அவன்கையோ சூகையாக
படியி லிறங்கிய ஆயத்துப்போல்
பாரி ரலவன்கையும் சூகையாச்சே

21. இந்த விதமாக நடக்கும்பொது
ஏது மறியாத காபிறுகள்
தொந்த ரவுக ளிஸ்லாத்துக்குத்
துயரங் கொடுத்தார்கள் மிகுதமாக
வந்த யேழைகள் தங்களைத்தான்
வாட்டி வைத்தார்கள் இறணமத்து
சிந்தை பொருத்தமாய் காபிர்கூட்டம்
செய்யு மநியாய மின்னும் கேளும்

22. அண்ணல் முஹம்மது தங்களுக்கு
அபூதா லிபது உதவியுண்டும்
இன்னும் ஹதீஜாவி னுதவியினால்
வேண்டும் மநியாயம் செய்யவொண்ணா
சின்னப் புத்திகொண் டபூலஹபை
சேர்ந்த காபிர்கள் நபிபோகிற
உன்னும் பாதையில் சாணிகளை
உகந்து போடுவார் வழிகள்தோறும்

23. ஒருநாள் நபியுள்ளாஹ் போகும்போது
ஓடி யொருதுஷ்டன் துணியைக்கொண்டு
புறகா லவன்மெள்ளப் பதுங்கிவந்து
பெரியோர் கழுத்திலே போட்டிறுக்க
அருகா லேவந்த அபூபக்கரும்
அதனைத் தட்டியே விலக்கிநிற்க
உருமை நபிதனை விட்டுவிட்டு
உண்மை யபூபக்கர் தனைக்கடித்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. பொல்லா அபூஜகல் ஒருநாளிலே
புகழும் நபியுள்ளா தொழுகும்வேளை
கல்லான மனத்துள்ள அவன்கூட்டத்தைக்
கருத்தாய்க் கூவியே ஒட்டகத்தின்
பிள்ளைக் குடலதை அவர்மீதிலே
போடும் படியேவ அவர்கள்போட்டார்
தொல்லை யணுகாத நபிநெயினார்
தொழுது முடித்தபின் சிரித்தெழுந்தார்

25. அந்த விதமாகக் காபிறுகள்
அடங்காப் பழிசெய்த போதுலையும்
நொந்து வொருநாளும் அவர்கள்மேலே
நோக்கா டாகவே பேசமாட்டார்
எந்த விதத்திலு மிவர் மனத்தை
இணக்கி யிஸ்லாத்தி லாக்கவென்று
சிந்தை பொருத்தமா யிறையிடத்தில்
சீமான் நபிதுஆக் கேட்டிருப்பார்

26. அதிக துன்பங்கள் காபிராலே
ஆல நபியவ ரனுபவிக்க
மதினாப் புறத்திலே யிருந்துவந்து
மார்க்கப் படிசில ரிஸ்லாமானார்
புதியோன் கிருபையால் நாளுக்குநாள்
புகழு மிஸ்லாந்தான் பரந்தேறயில்
சதிமான காற அபூஜஹிலும்
சயர்ந்த ஜனங்களு மொருசங்கத்தில்

27. கூட்ட மாகவே யிருந்தொருநாள்
கூடித் தீர்மானம் செய்யலானார்
தேட்டமாகவே முஹம்மதென்னும்
தீய னொருவன்தான் நம்மார்க்கத்தைப்
போட்டுப் பணித்துத்தா னிஸ்லாமென்ற
புதிய மார்க்கத்தைப் பரவச் செய்தான்
கோட்டி யாகவே யவன்தனையே
கொலைகள் செய்திட வேணுமென்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. ஆண்ட பெரியவன் ஜிப்ரீலிடம்
அண்ணல் நபியுள்ளா தங்கள்பாலில்
நீண்ட மக்காவை விட்டுநீயும்
நேராய் மதினாவுக் கேகுமென்று
தோன்றல் ஜிப்ரயீல் வஹிமூலமாய்
சொல்ல நபியுள்ளாஹ் தயார்கள்செய்து
ஏண்ட அலியிதில் இருந்துகொள்ளும்
யானும் போனபின் நீங்கள்வாரும்

29. அன்று நபியவர் தங்கள்வீட்டை
அடைந்து வளைந்தது காபிர்கூட்டம்
நன்றி தவறாத நபிநாயகம்
நாடி சூறத்து யாஸீனோதிக்
கொண்டு அவர்கள்மேல் மண்ணைத்தூவிக்
கூர்க்க நடந்தார்கள் மதினாவுக்கு
தொண்டு செய்கின்ற சப்தம்போல்
துஷ்ட நிபுலீசு கூவினானே

30. இன்று முஹம்மது பயணமானார்
யாரு மறியாம லிருந்தீர்களோ
என்று உரைத்ததைக் கேட்டுமந்த
ஏது மறியாத காபிர் கூட்டம்
நன்றி பெருகிய வீட்டையெட்டி
நலமாய்ப் பார்க்கையில் அலியானவர்
கொண்ட நித்திரை விழித்துமவர்
குறிப்பாய்ப் போர்த்தியே எழும்பக் கண்டார்

31. நபியா முஹம்மது யெங்கேயென்றார்
நாத ரலியாரும் காணேனென்றார்
புவியில் நமைவிட்டு ஒளித்தாரெண்டு
ஓடித் தேடவே ஆரம்பித்தார்
கவியாப் பாடிட முடியாதிந்த
காபிர்க் குலம்செய்த கொடுமைகளைச்
செவியால் கேட்டுமே விளங்குவீர்கள்
தீனை விதைக்கவே பட்டபாட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. அன்று மக்காவை விட்டுநபி
அபூபக் கருடன் தானுமாக
வென்றி யுடன்தௌர் மலைப்பொதும்பில்
வீறாய் மூன்றுநாள் தங்கியிருந்து
நன்றியுடன் கூபா மஹல்லாசேர்ந்தார்
நன்மை யலியும் பின் வந்துசேர்ந்தார்
கண்டு மதினாவைச் சேர்ந்தபின்பு
கத்தன் நபியுள்ளா தாமிருந்தார்

33. நபியார் குடும்பத்தை யழைத்துவர
நன்மை யிமாம்நல் றாஆபியாவும்
தவியா தைனூறு திபிகமேகரு
தக்க ஒட்டகை ஒண்ணுகொடுத்து
செவியா றப்பே சும்குடும்பம்
சேர்ந்த ஜனங்களைக் கூட்டிவாரும்
தவிசெய் தவர்சென்று ஓடியோடி
தக்க குடும்பத்தைக் கூட்டிவந்தார்

34. வந்து ஐயூபு அன்சாரியின்
வரிசை மனையிலே இருந்துகொண்டு
அந்தப் புறத்திலே பள்ளிவாயல்
அருகி லொருவீடு தயார்செய்துபின்
சந்தோஷ மாகவே யந்தவீட்டில்
சாய்ந்து குடியேறி யிருக்கும்நாளில்
பிந்தி வரும்செய்தி உரைக்கவாதி
பொரிய ற.்.மானே துணைசெய்குவாய்

35. துணையா முஹம்மது நபிநாயகம்
துன்யா தனில்வாழ்நாள் கடைசியாக
இணையாய் வரும்சபர் ஒடுக்கத்துநாள்
ஆகிர் புதனிலே நெயினாருக்கு
கிணையும் சமயத்தில் விட்டபாதியது
கிளம்ப ஆரம்ப மாகியது
பிணையாம் மைமூனா வீட்டிலேயே
பெருமான் நபியுள்ளா யிருந்தார்களே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. வந்தார் நம்பிராட்டி மார்களெல்லாம்
மனது பொருந்தியே ஆயிஷாவின்
சந்தோஷ மான வீட்டிலேதான்
தனியோன் நபியுள்ளாஹ் தம்மைக்கொண்டு
வந்த பேரெல்லாம் சேர்த்துவைத்து
வளமாய்ப் பரிகாரம் செய்வோமென
சிந்தை பொருத்தமாய் நம்பிராட்டி
சேயிழை பாத்தி மாவுங்கூடி

37. ஆகப் பதினாறு நாளாகவே
அதிக வருத்தமாம் நாளுக்குநாள்
யோக மாகிய பாத்திமாவை
உண்மை நபியவர் வரவழைத்துத்
தாக மாகிய மகள்பாத்திமா
தாங்க முடியாத வியாகூலமாய்
தோகை யார்வந்து அருகிருக்க
சொன்னார் நபியுள்ளாஹ் சுபசோபனம்

38. அப்போ துநபி மகள்தனையே
அருகில் அணைத்தவர் ஏதோசொன்னார்
தப்பேது மில்லா மகள்பாத்திமா
தாங்க முடியாது அழுதார்களாம்
ஒப்பா யின்னொரு வார்த்தைசொல்வார்
உண்மை மகளாரும் சிரித்தார்களாம்
நட்பா மாயிஷா கேட்டதற்கு
நபியின் ஸிர்றதை விஷ்ளமாட்டேன்.

39. அப்போ தஸ்ஹாபி மார்களிலே
ஆன அபூபக்க ரும்றதுமான்
செப்ப முளஅலி றசன் ஹுசைனும்
சிறந்த தல்ஹாவும் சபைரவரும்
எப்பவும் பிரியா வண்ணமாக
இருந்தார் நாயகத் திருச்சமூகம்
நபா னமுறை வஸீஹத்துகள்
நல்ல முறைகளைச் சொல்லிவந்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. சீக்கு யதிகமா யிருப்பதாலே
சீமான் நபியபூ பக்கரிடம்
காக்கும் பள்ளியில் நீங்களேபோய்
கருத்தாய்த் தொழுவிக்க வேண்டுமென்று
ஊக்க மாகவே யுத்தரவு
உடனே யபூபக்கர் போனபின்பு
தாக்க முடனொரு அறபியானோர்
தலைவா சல்தட்டிப் பேசலுற்றார்

41. தானும் வீட்டிற்கு வருத்தம்பார்க்க
நலமாயுத் தாரம் கேட்டுநின்றார்
பூணும் பாத்திமா யிச்சமயம்
பொறுதி செய்யென்று விடைகூறினார்
வேணு மறுதார முத்தரவு
விரைவாய்த் தாருங்க ளென்றுகெட்க
நாணும் பாத்திமா யிச்சமயம்
நபியைச் சந்திக்க முடியாதென்றார்

42. மூன்றாம் தவணையி லறபியானோர்
முறுகிப் பெரியதோர் சப்தம்போட்டு
நீண்ட குரலாக உத்தரவு
நேராய்த் தேடினார் வீட்டினுள்ளே
மாண்டு போவது போலயர்ந்து
தத்தளித் தங்கே ளொதுங்கிநிண்டார்
வேண்டும் முஹம்மது நபிவிழித்து
விபர மெதுவென வினவினார்கள்

43. வீட்டி லறபிதான் வந்ததுவும்
விரைவா யுத்தாரம் கேட்டதுவும்
நீண்டில் வரமுடியா தென்றதுவும்
நின்று மறுதாரம் கேட்டதுவும்
கோட்டி யாகவே மூன்றாம்தரம்
கூக்குர லாக சப்தம்போட்டுத்
தாட்டிக மாகக் கேட்டதுவும்
சரிதை முற்றாக முறையாய்ச் சொன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. அண்ணல் முஹம்மது நபியுங்கேட்டு
அவரை யாரென்று அறிவீர்களா
முன்னும் படைப்பெல்லாம் அவர்மெய்யாக
முறுக்கி யெடுக்கின்ற மலக்கல்மௌத்து
உன்னு மென்னுட ஹால்முடிவது
என்று அவருமே கண்டுகொண்டு
எண்ணி வந்ததா லவரைநீங்கள்
யாரும் விரட்டவே முடியாதென்றார்

45. அன்ன நடைமாது மனங்கலங்கி
ஆயாச மாக மயங்கிவீழ்ந்து
உன்னும் படைப்பெல்லாம் படைத்தழிக்கும்
உடையோன் றசூலுக்கு முடிவுநாளாம்
பண்ணு மதீனமே பாழ்வீடாகும்
பாரில் நபியொண்டு மில்லாமலே
இன்னும் படைப்புக்க ளென்ன செய்வார்
ஏகன் விதியினை மறுக்கலாமோ!

46. கோத்தி ரந்தனைப் பேணும்நபி
குரவை தனைக்கேட்டு விழித்துநபி
பாத்தி மாவது கையெடுத்துப்
பயகாம்பர் நெஞ்சிலே வைத்துக்கொண்டு
தேத்த ரவுகள் சொல்லிநபி
தேடாப் பெரியோனே யாறஹீமே
நேத்தி ரத்திற்கு ஒப்பாகிய
நேச மகளுக்கு சபூறையீவாய்

47. எந்தன் மகளாரே பாத்திமாவே
இனியோ யானிங்கே தரிப்பதில்லை
தாரை தாரையாய் அழுகவேண்டாம்
தாலந் தனிலார்க்கும் மௌத்துஉண்மை
சிந்தை பொருத்தமாய் சபுறு செய்தால்
சேர்வீ ரென் னோடாறு மாதத்திலே
கந்தங் கமழ்நபி சொல்லைக்கேட்டு
கருத்தாய்ப் பாத்திமா சபூறுசெய்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. பின்னா லாயிஷா ஹப்ஷாமற்றும்
பிரிய வீவீமா ரனைவருக்கும்
முன்னா லொஸியத்துச் செய்துசில
மொழிக ளுரைத்தார்கள் நபிநாயகம்
இன்களின் வீட்டிலேயே
இருங்கள் பிறவாண்கள் காணாமலே
இன்னாள் ஹசன் ஹுசை னிருவரையும்
எடுத்துத் தாருங்க ளென்று சொன்னார்

49. அப்போ ஹசன் ஹுசைன் இருபேர்களும்
அதிக விரைவாக ஓடிவந்து
ஒப்பாய் நபியவர் சமுகங்கண்டு
ஓங்கி யழுகவே ஆரம்பித்தார்
செப்ப முறஹசன் ஹுசைனழுக
சேயிழை பாத்திமா வழுக
ஒப்பற் றநபி நம்பிராட்டி
மாரெல்லாம் கூடித் தாமழுதார்

50. காடு கரையழ நதிகளழ
கடலு மலையழப் பொழுதுமழ
நாடு நகரமு மதிகமழ
நல்ல மதினத்துப் பதியோரழக்
கூடு மமரர்கள் கூட்டங்கூட்ட
மாக நிண்டங்கே யழுதார்களாம்
.....................................................
.....................................................

51. எல்லோரும் அழுது ஹசன்ஹுசைனின்
இனிய முகமதைப் பார்த்தவர்கள்
சொல்ல முடியாமல் தேம்பித்தேம்பித்
துடித்துப் பதைபதைத் தேயழுவார்
எல்லாப் படைப்பையும் படைத்தாள்கின்ற
ஏக னின்திரு நபியுள்ளாவே
அல்ல லகற்றியே யெங்களைத்தான்
ஆத ரிக்கவே வந்தவரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. மக்கா மதினாவும் அறபுநாடு
மற்றத் தேசத்து தீனோரெல்லாம்
ஹக்கன் தூதராம் நபியிறசூல்
கருணை வபாத்ததைக் கேட்டவர்கள்
மிக்க நுபுவத்தைப் பெற்றநபி
மேலா முலகத்தே சென்றதன்று
துக்கம் பிடித்தவர் போலெல்லோரும்
தேம்பித் தேம்பியே அழுதார்களே

53. ஊணை யிழந்தவர் சிலமனிதர்
உருப்பை யிழந்தவர் சிலமனிதர்.
பானம் இழந்தவர் சிலமனிதர்
பசியை மறந்தவர் சிலமனிதர்
பூணு முடமைகள் தனையிழந்து
பூவை மாரெல்லாம் புலம்பக்கண்டு
மானை யிழந்தொரு கலையைப்போலே
மயங்கி மயங்கியே சுழன்றுவீழ்ந்தார்

54. இந்தச் செய்திகள் தன்னையெல்லாம்
ஏந்த லபூபக்கர் கேள்விப்பட்டு
விந்தை யாகவே ஓடிவந்து
மேலோன் நபியுள்ளாஹ் தம்நெற்றியில்
விந்தை யாகவே முத்திசெய்து
வேந்தர் நபியுள்ளாஹ் தம்மைப்போல
எந்த நாளிலே காணப்போறேன்
ஏகன் தூதரே நவமணியே.

55. ஈது படிநிற்க றசூலுடைய
இலங்கும் திருமேனி தானெடுத்து
நீதி யலியுடன் அப்பாசுவும்
நிற்கும் 'அ .லுல்பைத் எல்லோர்களும்
வாதில் லாமலே அபூபக்கரை
வாழும் ஹலீபா வாகவைத்து
சோதி யொளிவான் நபியுல்லாவை
துலங்கும் நீர்கொண்டு குளிப்பாட்டினார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. காதங் கமழ்வாசங் கஸ்தூரியின்
கமழும் வாசனை தான்மிகுந்து
மாது ஆயிஷா வீட்டிலேதான்
வரிசை றூகது போனஇடம்
நீதர் முஹம்மது நபியுள்ளாவை
நேச மாய்க்கபன் செய்துபின்னர்
போதர் சஹாபாக்க ளெல்லோர்களும்
போனார் பாத்திமா வீடுதேடி

57. மங்கை பாத்திமா நபியுடைய
வரிசை சஹபாக்கள் வரவுகண்டு
சங்கை யாகிய இல்லத்திலே
தனியோன் நபிமகள மரச்செய்து
திங்கள் முஹம்மது நபியுள்ளாவை
சேர்ந்து கபன்செய்து போட்டீர்களா
உங்கள் மனத்திலே பிரியங்கொண்டு
உரிமை நபிமேல்மண் போட்டீர்களே

58. அன்ன காலையில் சஹாபாக்களும்
அதிக தாழ்மையாய் ஓதுவார்கள்
மன்னர் நபிமகள் பாத்திமாவே
வரிசை நபிமேலே மண்ணைப்போட
என்றும் பிரியமாய் இருக்கவில்லை
ஏகன் விதியிதை மறுகவொண்ணா
சொன்ன மொழிகேட்டு எல்லோர்களும்
சேர்ந்து சபூர்செய்து இருக்கும்நாளில்

59. மேகங் குடையிடும் நபிகபுறில்
மேன்மை பாத்திமா போயிருந்து
யோக முடனந்த மண்ணையள்ளி
ஒழுங்கா யவருட கண்ணில்வைத்து
தாக முடன்நல்ல மணம்யாருக்கும்
..........தேள்வை யில்லையிது
போதுமென் றுதான் முதவாயால்
புகழாய்த் திருவுளம் பற்றினாரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60. என்னை விட்டுத்தான் நீர்போனபின்
எனக்கு வந்துள்ள முஸீபத்துக்கள்
நன்னும் வெளிப்புள்ள பகலில்வைத்தால்
நாடு மிருள்ளன இரவாய்ப்போகும்
இன்னு மழுகையா யிருப்பதெல்லாம்
ஓங்கு மென்னுயிர் நீளமாமோ
என்னும் பயத்திலே யழுவதெல்லாம்
வேறு நாட்டமே கிடையாதென்றார்

61. இந்த விதமாக அபூபக்கரும்
இனிய உமறுது மானலியும்
சிந்தை யதுநொந்து ஹஸ்ஸர்னிபுனு
தாபித்து மின்னு மாயிஷாவும்
சந்ததி யான ஹசன்ஹுசைனும்
சார்ந்தநம் பிராட்டி மாரெல்லோரும்
சொந்த முடன்நொந்து அழுதழுது
சோர்ந்து சபூர்செய்து இருந்தார்களே

62. வாச மஃதுள்ள லங்காபுரி
வாழும் திருகோண மலையைச்சேர்ந்த
தேசந் தனில்தீனோர் வாசம் செய்யும்
சிறந்த நாச்சிக் குடாவில்வாழும்
தாசன் மஃமுது புதல்வரான
சங்கை சிலோன்தர்வேஸ் செண்டுநாமம்
வீசும் பெயரப்துஸ் ஸமதுஆலிம்
சாஹிபுதைப் பனுவல்செய்தார்

63. தான முறும்மட்டுக் களப்பைச்சேர்ந்த
சங்கை யொலுவிலூ எனும்பதியில்
மான முடன்வந்து இறையருளால்
வாசம் செய்தங்கே இருக்குநாளில்
தீனோர் சிலர்நம்மைச் சார்ந்திருந்து
செல்வ மணம்செய்ய நாடியபின்
நானும் மனமது உகந்திருந்து
நங்கையை மணம்செய்து இருக்கும்நாளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

64. பெற்ற தாய்தந்தை உடற்பிறப்பு
பேணு மினசன மெனைமறந்தார்
கத்தன் விதியிது என்றுநானும்
கருத்தி லெடுக்காமல் சென்றுபார்த்தேன்
செத்த வீடுபோல் அவர்கள்மனம்
செப்பா நிற்பதைத் தானுணர்ந்து
.....................
.................

65. இருந்து வருகிற மகிமைபோல
ஏக பெரியவன் தான்கொடுக்கும்
விருந்தை யருந்திய யென்குடும்பம்
மேன்மை மக்களும் நானுமாகக்
குறைந்த அமலோடும் இல்மினோடும்
ஹசதா வினேவலை மறவாமலே
சிறந்த முஹம்மது நபி சபாஅத்தில்
சேர வருள்புரி யாஇலாஹி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரமழான் மாசமே!

அப்துஸ்ஸமது ஆலிம் புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரமழான் மாசமே!

1. சகல பிழையும் மாற்றி எங்கள்
சர்ரு குல்லையும் அகற்றி
அகலச் செய்து இரட்சித் தென்னை
ஆளும் ரமழான் மாசமே

2. நரகம் விட்டு உரிமை செய்ய
நன்றி உள்ள மாசமே
சறகு நீதி சலாம லைக்க
சங்கை ரமழான் மாசமே

3. சதக்கத்தும் நல்மஹ்பி றத்தும்
சபாஅத் துள்ள மாசமே
சிதுக்கு விளங்கி சிறக்க சலாம்
அலைக்க ரமழான் மாசமே

4. ஆதி நாயன் அருளைப் பெற்ற
அன்பு மிகுந்த மாசமே
சோதி நாதன் சுடர் சலாம்
அலைக்க ரமழான் மாசமே

5. எங்கள் துக்கம் ஹம்ம பெல்லாம்
ஓட்டு விக்கும் நோன்பிதே
சங்கை மாச மேகலாம்
அலைக்க ரமழான் மாசமே

6. குர்ஆன் தர்சு செய்ய மனதில்
ஹுப்பு வைக்கும் மாசமே
சோதி நாதனின் சலாம்
அலைக்க ரமழான் மாசமே

7. பிர்ரும் இஹ்சானும் தவாபும்
பின்னும் நிஹ்மத்து ஈந்தோரே
கறா மத்துள் ளோரே சலாம்
அலைக்க ரமழான் மாசமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. திக்ரும் ஹம்தும் இரவில் கண்ணைத்
திறந்து வணங்கும் மாசமே
ஷுக்கு ரைத்தந் தோரே சலாம்
அலைக்க ரமழான் மாசமே

9. ஹைறு மட்டில்லாத தறாவீஹ்
கால் திருத்தும் மாசமே
சற்றை விட்டுமே சலாம்
அலைக்க ரமழான் மாசமே

10. பள்ளிகள் இலங்கச் செய்யும்
பறக்கத் தான மாசமே
தள்ளும் செல்வத்தை சலாம்
அலைக்க ரமழான் மாசமே

11. உன் பிரிவால் எங்கள் கண்கள்
உறக்கம் அற்றுச் சுற்றுதே
உன்னை நாடுதே சலாம்
அலைக்க ரமழான் மாசமே

12. நன்மை எல்லாம் கொய்து கொள்ள
நாடு வோர்க்கு விளைநிலம்
எந்த நாட்டந்தால் சலாம்
அலைக்க ரமழான் மாசமே

13. மிகுதிப் பாவத்தை ஒழிக்க
மின்னொளி போ லும் உதித்தவா
தகுதி உள்ளோரே சலாம்
அலைக்க ரமழான் மாசமே

14. கெட்ட செய்கை தன்னை ஓட்டிக்
கெடுதி கல்பை தாஅத்தில்
கெட்டி ஆக்கி னோரே சலாம்
அலைக்க ரமழான் மாசமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. உன்னில் ஆசை கொண்ட தாலே
உன் லிக்காவைக் காணவே
உன்னில் ஆசை வைத்தோம் சலாம்
அலைக்க ரமழான் மாசமே

16. வம்பரைத் திருத்தும் எங்கள்
மன்னரே உன் அருளினால்
என்பிழை பொறுக்க சலாம்
அலைக்க ரமழான் மாசமே

17. காதல் உருகி ஓடு தேயிரு
கண்கள் உன்னைத் தேடுதே
மாதா மாதம் நாடு தேஎன்
வரிசை ரமழான் மாசமே

18. காதம் கமழ் கஸ்தூரி போலே
கத்த நாயன் அருளினான்
ஆலம் முழுதும் புகழே ஓங்கும்
ஆன ரமழான் மாசமே

19. இருவிழியும் நனையுதே யென்
இதயம் எங்கோ சுற்றுதே
இரவும் பகலும் உனது திக்ரில்
இலங்கும் ரமழான் மாசமே

20. எப்போ நாங்கள் உன்னைக் கண்டு
எப்பிழையும் ஆறுவோம்
ஹுப்வை நாட்ட முஸ்த்த ஹக்காய்
குந்த ரமழான் மாசமே

21. தௌபாவை........
தந்தருள.........
சௌபில் லாத றஹ்மத் துள்ள
சங்கை ரமழான் மாசமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. என்பவம் என்அன்னை தந்தை
யின்பவமும் பொறுக்குமென்
தம்பிரா னிடம் மன்றாடித்
தள்ளு ரமழான் மாசமே

23. நாளை மஹ்சரில் உதவும்
நன்றி உள்ள நோன்பிதே
தாளப் பாலம் தான்ட வைக்கும்
தக்க ரமழான் மாசமே

24. கை தாங்குமே கரைசேருமே
கனத்த வாழ்வைத் தாருமே
ஹைது குந்து பாருமே
உகந்து ரமழான் மாசமே

25. கைசேதம் எல்லாம் மிஞ்சுதே
என் கல்பு பதறித் துடிக்குதே
கல்வி உன்னால் நாடுதேஉன்
ஹக்கில் ரமழான் மாசமே

26. கல்பின் ஆசை மீறுதே என்
கண்ணும் முகமும் வாடுதே
ஐசின் வாழ்வு நீங்குதே என்
ஆசை ரமழான் மாசமே

27. நாடு கின்றேன் எந்நாளுமே
நலவை நீதந்து ஆளுமே
வாடு கின்றேன் எந்நாளுமே என்
வரிசை ரமழான் மாசமே

28. சாயி முக்கும் வரிசையாய்
சல்லா பர்நபி சபாஅத்தை
காயி முக்கு மேயிறையோன்
காட்டு ரமழான் மாசமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. வாரு மேகண் பாருமேஅன்
வா ருமேகைதாருமே
காரு மேஉப காரமே
சிங்கார ரமழான் மாசமே

30. பையலுக்கு இரங்குமே
படைத்தோன்பால் மன்றாடுமே
கையைத் தாங்கித் தூக்குமே
கதாக்க ரமழான் மாசமேட

31. நாங்களறிய வேண்டுமேநீ
நாடி எங்கள் மீதிலே
நீங்கிடாமல் மீள நாங்கள்
நிற்க ரமழான் மாசமே

32. ஆண்ட வாஎன் நாய் காஉன்
அடிமை செய்யும் பவங்களை
ஏண்ட வாமன் னித்தருள் வாயிவ்
இனிய ரமழான் மாசமே

33. அல்லும் பகலும் பாவம் தன்னில்
அமர்ந்தி ருக்கும் பாவிக்கு
இல்மும் ஹில்மும் தில்லி லாக்கு
வாய்யி ரமழான் மாசமே

34. ப:.பி ரன்னி யாகபூர்
புர்க மன்னி யாறஹீம்
வ:.பு அன்னி யாஹபீப்
பிபளுலி ரமழான் மாசமே

35. தாஅத் தென்னு முன்வணக்கத்
தாலென் வயதை நீட்டியே
சாஅத் துன்யா வில்சுகத்தைத்
காபி ரமழான் மாசமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. கண்ணின் ஒளிவை சிதுவமுன்
ஹக்கான காட்சி தந்தருள்
மண்ணில் ஒடுங்கி அடங்குமுன்
பிவஸ்லி ரமழான் மாசமே

37. தகுதி உள்ள காதிறே உன்
தன்னை அன்றி வேறில்லை
பக்க பலன்நீ யாஹபீப்
பிபஸ்லி ரமழான் மாசமே

38. தௌபா வைத்தா இப்போதுமே
தவாபையும் எப்போதுமே
ஹௌபும் றஜாவும் போதுமே
வஹைறு ரமழான் மாசமே

39. ஆதியே அநாதியே
அனைத்தையும் படைத்தவா
சோதியே உன்னருளைத் தா
இப்போதேரமழான் மாசமே

40. நாவில் நற்கலிமா முழங்கி
நல்ஹூறுல் ஹாத்திமா
பாவிக் கீந்து கிருபை செய்யும்
பிபளுலி ரமழான் மாசமே

41. நாடினோர் பலர் கூடினோர்
படிப்பதை உகந்தவர்
பாடினோர் எல்லார்க்குமே
பளுலி ரமழான் மாசமே

42. மணங்களைச் சொரிந்தவர்
மகிழ்ச்சியை அடைந்தவர்
பணங்களை அளித்தவர்
பிபளுலி ரமழான் மாசமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. காது தாழ்த்தி இருந்தவர்
ஹைறாம் தஆமை ஈந்தவர்
காதலாய் இருந்த வர்களைக்
காக்கும் ரமழான் மாசமே

44. அன்னை தந்தை மனைவி மக்கள்
அன்புள்ள சகோதரர்
இன்னும் முஸ்லிம் களுக்கு மாதி
யேபி ரமழான் மாசமே

45. பிரயாண ரமழான் பரக்கத்தால்
தௌபீக் கெமக்குத் தந்தருள்
கௌதே பகுன்லீ நாசிறன்
பிஹைறி ரமழான் மாசமே

46. சந்தண மாரி சொரியும்
தக்க சலவாத்தால் சலாம்
எந்த நாள் நாம்மீளும் நாள்
எல்லாம் ரமழான் மாசமே

47. அஹ்மதுற்றசூல்கள் மீதும்
ஆல் சகுபு மீதுமே
வேதனையே தூரமாக்கும்
பிபைலி ரமழான் மாசமே

48. கண்டெடுத்து எழுதி வைத்த
தொண்டன் அப்துஸ் ஸமதையும்
தெண்டிப்பாலே சுவனம் தன்னில்
சேர்க்கும் ரமழான் மாசமே

49. கத்தப் ஹாதா இப்னுமன்
மஹ்முதுல் கிண்ணியா
எப்பிழையும் பொறுத்தெம்மை
ஈடேற்றும் ரமழான் மாசமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞான ஒப்பாரி

அப்துஸ்ஸமது ஆலிம் புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞான ஒப்பாரி

1. சீர்பெருகும் மெய் ஞானச், செல்வியின் மேலிப்புவியில்
சித்திரமாகிய, நற்றமிழாலொரு
முத்திதருங்கவியைத் துதியொடுசொல்ல, வல்ல
சீமானொருவன் துணையே

2. காதவளிதூரம் கஸ்தூரிவீசும் நபி,
கருணைசேர்மாதுல, ரிருவருமவருயி,
ரருமைசேர்மருக ; ருமறுமவர்களொடு, நல்ல
ஹசன் ஹுசைனைப் போற்றிசெய்வேன்

3. போற்று முகையதீனும் புகழ்சாஹுலஹமீ தொலியும்நல்ல
பூரணமாகிய, காரணவொலிகளின்,
வாரணநிகருறு, மாரண வொலிகளின்,
பொன்னடியை நான்மறவேன்

4. மறவாமல் ஞானகலை, வாலையவன் மீதிலிந்த,
வரிசை யொப்பாரியைப், பிரிசமதாய்செல்ல
வுரிமையோடறிவுக, ளூட்டிய குருவிரு,
மாமலர்ற்றாஸ், கண்ணில்வைப்பேன்

5. கண்ணில்வைத்துப் போற்றிசெய்து, காரிகையாள் தாழ் பணிந்து
கக்கிசம்பலதையும், மொக்கவேயவளொடு,
பக்குவமாய்ச் சொல, இக்கவிதனைஇங்கு,
பாடிவந்தேன் தோழியரே

6. தோழியாய வந்த, துரைமகளேநீ மிகவும்
சுற்றசெள, பாக்கிய, முற்றவளும் வடி;
வெற்றிய பத்தினி, யானவளுமென்றும் இந்த,
தொல்லுலகில் கேட்டறிந் தேன்.

7. அறிந்தபெரியவர்க்கு, ஆப்பறைந்தாய் வாய்களிலே
ஆளப்பளவாசிலுமுன் றாப்பரியந்தனைக்,
கேட்பவர் செவியுற, வாய்ப்புடன் சொல வழி,
யாருமறியார் புவியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. யாருமறியாத, வந்தரத்தின்மாளிகையி
லங்கமது ஜெய, தங்கம் போர்பிற சங்கம்,
கனதவ முங்கும்படி யுள,
அன்னமுமாய், நீயிருந்தாய்

9. அன்னமுமா, நீயிருந்தாய், உனையறியவந்த மாப்பிளைமார்
ஆதரவாகிய மாதவமே மறை,
வேதியர் காதலிநாலுன்னை நாடிய
ஆசை கொண்டாராம் புவியில்

10. கோடான கோடியுன்னை, கொள்ளவந்த மாப்பிளைமார்
கூறியபேர்களில், வேறுகண்டோர்களை
மீறியகவலையால் மாறிவிட்டு வெகு
கொக்காட்டை கொண்டவள்நீ.

11. கொக்காட்டை கொண்டவளே, நல்ல கூறியமாதரசேயடி
கொஞ்சும் சுகமெனும், அஞ்சுகமே யுனை,
மிஞ்சிய வாசையால், நெஞ்சில் நினைத்திடும்
கொற்றவர்க ளெத்தனைபோ

12. எத்தனையோ பேர்களுக்கு, நீ யிடளித்தாயுள் புதுமை
யெப்படியோதுவரிப்புவி மீதினி
லற்புதமேவிய கற்பகமே நீ
எங்கும் நிறைந்தா யொளிவாய்

13. ஒளிவாயிருந்தவளே, நல்ல ஓதரிய பொன்விளக்கே
உத்தமியாகிய பத்தினியே வெகு
சித்தர்களுனைத்தின, நத்திவந்தோர்களுக்
குல்லாசப் பெண்ணானாய்

14. உல்லாசப் பெண்ணாகி, நல்ல வுற்றறிந்தஞானிகளை,
உன்மனைதனில் வெகு, நன்னயமொடுபல
சன்னைகள் பேசிய மின்னொளிமார் பினி
லுத்தணைத்து, முத்தமிட்டாய் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. முத்தமிட்டுக்கட்டி வெகு, முக்கியமாய்த்தானனைத்து
முன்னது போலவே கன்னியராகவே
மின்னயுமதுவித மென்னதுமப்படி நீ
மோட்சமுடனே யிருந்தாய்

16. மோட்சமுடனேயிருந்ததாய்யுன் மோடிதனைக்காணவென்று
மோகத்துடன் வெகு ஆகத்து டையவர்
தாகத்துடனேவே யோகக் கருதியே வுன்
முண்டகத் தாழ் காணவந்தேன்

17. துணிந்தவர்கள் போலயிந்தச்சூமனுனைக்காண வென்று
சுத்தசௌ பாக்கிய, முற்றவளே புவி
இத்தனையுயிரையும் பெற்றவளே வெகு
சுந்தரமாய் னந்தேனடி

18. வந்தேனுனது மணி, வாயல் தனைக்காணெவென்று
மங்கையே உன்மயலது பொங்கியகவலையா
லங்கமுமெலியுதென் தங்கமேநீ என்னை
வரவழைத்தாலாகாதோ

19. ஆகாதோ கண்மணியே, யன்புமிகு பொன்மலரே
அடிமைக்குனது, பொன்னடியைத்தருகிலிப்
படியிற்றொடுவினை நொடியிலகன்றிடுநீ
அன்புவைத்துப் பாராயோ

20. பாராயோகண்மணியே, பட்சமுள்ள கண்திறந்து
பதிதனிலுனது சென்நிதிமலர் சரணத்தை
கதியெனவிரும்பியறுதி செய்துவருமிந்தப்
பாவிதுயர் தீர்த்திடுவாய்

21. தீர்த்திடுவாய்கண்மணியே இந்தச்ஜெகமுழுதும் பெற்றவளே
சித்திரமாமணி மெத்தையிலேயுனை, நத்தியசித்தர்கள்
முத்தமிடும்படி நீ
சேலைதிறந்தே கொடுத்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. சேலைதிறந்து வந்த, சித்தர்களைத்தான் கலந்து
செப்பரிதாகவே வொப்புறு நன்மொழி
பற்பலதாலும் நயப்படவே யவர்
சிந்தை யெல்லாம் கொள்ளை கொண்டாய்

23. கொள்ளை கொண்டாய்கண்மணியே யுன்னைக்
கூடிக்கலந்தவர்கள் குவலய மீதினில்
தவமுடையவ நொருந் திவலைகளளவிலும்
கவலையில்லாமல் வெகு கொள்கையுடன் வாழ்ந்திருந்தார்

24. வாழ்ந்திருந்தார்தாயே, நல்ல வாழ்சமுறு மல்லிகையே
வடிவுறு கொடியிடை, மடமயிலே வுன
தடிமையிற் சிறியவோர், பொடியனென்றென்னையுன்
மலரடிக்காளாக்காயோ

25. மலரடிக்காளாக்கியுன், வாயலிலேவேலை செய்ய
வைத்திடில் நற்றவமுற்றிடுவே நருள்
பெற்றவர் சிற்றடியைத் தொளுவேனுன்
மனதிரக்கம் வைத்திடுவாய்

26. மனதிரக்கம் வைத்திடுவாய், நல்ல, மறைவிளக்கே
மாமயிலே வஞ்சகமறவனின் தஞ்சமென்றேநிதம்
நெஞ்சில் நினைந்துயான் கெஞ்சுகிறேனுன்
வாக்கருள் வாய் மாங்குயிலே

27. மாங்குயிலே நல்ல, வாழ் மருக் கொழுந்தே
யுன்னுடைய மண்டபவாயலில் நின்றடியேன் கன
தொண்டுகள் செய்திடக் கொண்டிடு மைடிலெனை
வாட்டு தென்ன செய்திடுவேன்

28. வாடாமல் வாடுகின்றேன், உண்மையிலே மூழ்குகின்றேன்
வந்தெனையுனதிரு சொந்தமுறு நயந்னையே,
திறந்தந்த முடனே யுன்
மனது வைத்துப்பாராயோ.

29. மனதுவைத்துப்பாராயோ நல்ல, வாக்கெனக்குத்தாராயோ
வாசனையுறும் விசுவாச சவுந்தரி
வாசயுறும் வெகு, நேசமாகிய
அற்புதமே, நல்லகற்பகமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. அற்புதஞ்சேர்மூலத், தருங்குகையில் நின்றூ விளை
யாடிப்பாலபாடித்தெளி வொடு
கூடித்திசைதனை நாடியடைந்திடும்
ஆசையுறு முந்தியதோ

31. உந்திக்கமலமென்ற நல்ல வரியக.்பா வதிலோ
உத்தமியாகிய பத்தினியே வெகு
சித்தர்களைத் தெரிசித்திடும் தலமது
வேரதுமறபா வானதிலோ

32. அறபாவென்றோதும், அறியநுரையீரலென்ற
அற்புதமண்டப வாயலதோ வெகு
வொப்பறும் பைத்துல்லா வானதிலோ வுனை
யுற்றறியும் நற்றலமோ.

33. உற்றசுளிமுனையோ, நல்ல ஓதுமறபாமலையோ
வொன் றொடிவுனைமையல் கொண்டவர்
வரமொடு கண்டிடும் தலமது
ஓதும் சபாவானதிலே

34. சபாமறுவா வென்றுவரும், சாற்றுமிரு நாசிடத்தோ
சந்திரனென வொளிர் சுந்தரியே கன,
விந்தைகள் தரு மரவிந்தமுத்தே நீ,
தங்குமிடம் நூறதிலோ

35. நூறோ வரிசையுள்ள நொக்கத்துவெமயிலே
நோர்க்கமாயுனை இங்கு பார்க்கவந்திடுபவர்
தாக்கமுறும்படி யோக்கியமாயுள
நோக்குங்கமலாசனமோ

36. கமலாசனந்தனிலோ கல்ல, தற்பக விருட்சமதோ
கடிகமள் துடியிடைமடமயிலே நல்ல
வடிவுறுபிடி நடையுடையவளே நீ,
வாழ்ந்திருப்ப தெத்தலமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. எத்தலமோகண்மணியே யடியேகனொளிவானநங்கே
யெங்கும் வெகுபிரசங்க மதாகிய
அங்கமுங்கமன் திரு மங்கையே உன் மலரடி
எண்ணி எண்ணிவாடுகின் றேன்

38. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிவந்தேனுன்
னுடைய ஏழைப்பயல் வெகு கோளைத்தனமுறு
வேளைக்குதவியுடன் றானைத்தருவது
என்றுமுந்தன் மேற்கடனே

39. ஆனசகொண்டபையல், அப்துற்றஹ் மானையுந்த
நருமைகொடுவிழிகிருபை தந்தே வேகு
கருணை செய்திடு குவாய் தெரிவுறவுலகினில்
ஆளுந்திருவான் மதியே.

பதம் பல்லவி

1. எங்கும் சமதாக நிறைந்திருப் போனே உன்னில்
தங்குவதறிய வரமருள் கோனே, எங்கும்

2. தாத்தில் உகதாக எங்கும் நிறைந்தாயே, பின்னால்
தாத்தில் அஸ்மா சிபாத்தாயத் தெரிந்தாயே எங்கும்

3. கோலமெனக்கில்லை என்று குறித்தாயே எல்லாக்
கோலமெனக் கென்று மறைவிரித்தாயே எங்கும்

4. அல்லின் சானு சிற்றிகி என்றறைந்தாயே சொல்லில்
அனாசிற்றுகு வென்று நீஉரைத்தாயே எங்கும்

5. அட்டதிசைபோற்றும் நபிபொருட்டாலே இந்தக்
கெட்டபயல் செய்தபிழைபொறுப்பாயே எங்கும்

6. வன்னிதனிலிட்டவளுதினை போலே வாடி
இன்னிலத்தில் யான்தவித் தேன்உனைத்தேடி எங்கும்

7. தாசெனென்னும்மப்துற்றகூ மான்வினைத்த, பொல்லா
மோசமுழுதும் பொறுப்பாய்முதலோனே எங்கும்

-முற்றும் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரமழான் ஸலவாத்து

அப்துஸ்ஸமது ஆலிம் புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரமழான் ஸலவாத்து

## விருத்தம்

சல்லல்லா நன்னபிமேல் சலவாத்தை அனுதினமும்
அல்லும் பகலும் அதபுஹுூறு மத்துடனே
வல்ல ரம ழானதிலே வருந்தறா வீஹதிலும்
சொல்லுஞ்சல வாத்துமக்குச் சொர்க்கங் கிடைக்குமென்றார்!

## சலவாத்து

அல்லாஹுூம்ம சல்லி அலா முஹம்மது
யாறப்பி சல்லி அலைஹி — வஸல்லம்

1. அஊது பிஸ்மிலுடன் சேர்த்து
அல்ஹம்து ஓதிடுவோம் — வஸல்லம்

2. எல்லாப் புகழ்க் குரிய எங்கள்
ஏக னுதவி யாலே — வஸல்லம்

3. சல்லல்லா நன்னபி மேல் சல வாத்தை
சார்ந்து நா மோதிடுவோம் — வஸல்லம்

4. ஆல்அ சு ஹாபு மார்க்கும் அவர்
கூட்டங் குடும்பத் தார்க்கும் — வஸல்லம்

5. சாந்தி சமாதானமு மவர்க்கு
சங்கையாயுண்டாகணுமாம் — வஸல்லம்

6. முத்தி லுரு வாகி வந்த எங்கள்
முஸ்தபா நன்னபி யே — வஸல்லம்

7. மெத்தப் புகழ்ந்து இதைச் சொல்ல
மேலோன் உதவி செய்வாய் — வஸல்லம்

8. ஆசை கொண் டிஸ் லாத்திலே முந்த வந்த
அபூபக்கர் தன்னருளால் — வஸல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. நேச சலவாத்தைச் சொல்ல
நித்த முதவி செய்வாய் வஸல்லம்

10. உறுதி யது போல் நடத்தும் எங்கள்
உமறவர் தன் பொருட்டால் வஸல்லம்

11. இறுதியி லெங்களுக்கு வரும்
இன்னலை நீக்கி வைப்பாய் வஸல்லம்

12. ஆதியின் வேதமதைக் கண்டு
அணுவும் பிசகில்லாமல் வஸல்லம்

13. நீதியாய் கோர்தெழுதும் உதுமானார்
நேர் பாதம் தான் பணிவோம் வஸல்லம்

14. மலியும் புகழுடைய அன்னாள்
வல்ல துல்து லேறி வென்ற வஸல்லம்

15. அலியும் பு லி பொருட்டால் எங்கள்
ஆகுலந் தீர்த்துவைப்பாய் வஸல்லம்

16. ஹத்தைக் கனியால் வென்ற நல்ல
ஹசன் ஹுசைன் நாயரை வஸல்லம்

17. மெத்தப்பு கழ்ச்சி செய்வேன் இந்த
மேதினியி லிருக்கும் வரை வஸல்லம்

18. பாவையர்கள் செய்து வரும் அந்தப்
பாவ தோச மத்தனையும் வஸல்லம்

19. தோகையர் பாத்திமாவால் எங்கள்
தொல்லைகள் தீர்த்து வைப்பாய் வஸல்லம்

20. பின்னால் சலவாத்தை நாமே
பேசவே ஆரம்பிப்போம் வஸல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. முன்னே இஸ்லாத்தி லேதுவங்க
மேலோ னுதவி செய்வாய் வஸல்லம்

22. இஸ்லாத்தி லைந்து பர்ளு இறையவன்
ஏவினா னெங்களுக்கு வஸல்லம்

23. முன்னதாம் பர்ளு கலிமாவை
முன்னதாய் சொல்லு மென்றான் வஸல்லம்

24. வாக்கு மனமுடனே கலிமாவை
வாயாலே சொல்லு மென்றான் வஸல்லம்

25. ரெண்டாவ தாந் தொழுகை தினமைந்து
வேளை தொழுகச் சொன்னான் வஸல்லம்

26. இந்தப் படி நமக்கு ஒவ்வொரு நாளுந்
தொழுகச் சொன்னான் வஸல்லம்

27. ஒவ்வொரு ஆண் பெண்ணுக்கும் தனித்தனி
பூண்ட பர்ளி தென்றான் வஸல்லம்

28. மூன்றாவ தாம் பர்ளு சக்காத்தை
முதலி லுள்ளோர் கொடுங்களென்றான் வஸல்லம்

29. ஏண்முத லுடையோன் சக்காத்தை
ஈயாதிருப்பா னென்றால் வஸல்லம்

30. தாண்ட நரகத்திலே உன்முதலைத்
தள்ளுவா னுன்னுடனே வஸல்லம்

31. ஏண்ட முதலுடையோன் நூற்றுக்கு
இரண்டரை கொடுங்க ளென்றான் வஸல்லம்

32. ஆடுமா டொட்ட கைக்கும் சக்காத்து
அழகாக கொடுங்களென்றான் வஸல்லம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. தானிய வகைகளுக்கும் எங்கள் நபி
சக்காத்துக் கணக்குச் சொன்னார் வஸல்லம்

34. சேனை தனில் விளைந்த தானியங்கள்
செந் நெல்லு கோதுமைக்கும் வஸல்லம்

35. சாமை, தினை, உளுந்து, கடலை
தக்கதோர் சோளமுக்கும் வஸல்லம்

36. வாய்ந்த பெரும்பயறு மொச்சை
வளருஞ் சிறு பயக்கும் வஸல்லம்

37. ஈனமுறுங் குரக்கன் இறுங்கம்பு
இவைகட்கும் சக்காத்து என்றார் வஸல்லம்

38. இத்தனை வகைகட்கும் சக்காத்து
பத்துக்கு ஒன்று என்றார் வஸல்லம்

39. கோடை மழை இல்லாமல் இறைப்புக்
கூலியால் செய்தெடுத்தால் வஸல்லம்

40. இருபதுக் குகொன்றாகுமாம் நெல் முதல்
ஈத்தம் பழத்துக்கு மாம் வஸல்லம்

41. கொடுங்கள் சக்காத்து என்று எங்கள் நபி
கொடி முந்தி ரிக்குஞ் சொன்னர் முஹம்மது

42. இம் மூன்று வகைகளுக்கும் சக்காத்து
இருபதுக் கொன்று என்றார் முஹம்மது

43. இத்தனை பொருள்களையு மெடுத்து
எண்ணிக் கணக்கி லிட்டு முஹம்மது

44. பத்திரமாய்க் கொடுத்து உங்கள்
பாளை இறுங்க ளென்றார் முஹம்மது

45. இந்தப் பொருள்களுக்குக் கடனாளி
இரு நான்கு பேர்களுண்டு முஹம்மது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. எட்டுப் பேரின் கடனைச் சரியாக
இறுக்காத காசுக்காரன் முஹம்மது

47. முட்டுப் பட்டுத் திரிவா றிறை முன்
முகங்கள் கறுக்க என்றார் முஹம்மது

48. ஐந்து மூன்று கூட்டத்தையுந் தவிர
ஆர்க்குங் கொடாத என்றார் வஸல்லம்

49. எட்டுக் கூட்டத்தா ரையும் நாம்
இதிலே எழுது கிறேன் வஸல்லம்

50. பக்கீர், மிஸ்கீன் ரெண்டு
பகரும் சக்காத் தறவிடுவோர் வஸல்லம்

51. மவுலா இஸ்லா முக்கும் வருமடிமை
கடன்கார ருக்கும் வஸல்லம்

52. மார்க்க யுத்தம் புரிபவர்க்கும்
வழிப்போக்கர் முஸாபருக்கும் வஸல்லம்

53. இத்தனை பேர்களுக்கும் சக்காத்தை
ஈந்து கொடுக்க வேணும் வஸல்லம்

54. மற்றவர்க்குக் கொடுத்தால் சக்காத்து
பர்ளு நிறை வேறா தென்றார் வஸல்லம்

55. பத்தியமாம் சக்காத்தின் பர்ளை
பண்பாய் இறுத்தவர்கள் வஸல்லம்

56. முத்து மணிச் சொர்க்கத்திலே அவர்
முதலாளி யாயிருப்பார் வஸல்லம்

57. ஒற்றுமையாய் நோன்பின் பித்துவை
உண்மையாய் கொடுங்கள் என்றார் வஸல்லம்

58. நோன்பு முதல் தொடுத்து பெருநாள்
முடியுமுன் கொடுங்கள் என்றார் வஸல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. ஆண்டுக் கொரு மாதம் நோன்பை
அன்புடன் வைப்பாரானால் வஸல்லம்

60. வேண்டும் ஷவ்வாலி லாறு நோன்பை
விரும்பிப் பிடித்தார் என்றால் வஸல்லம்

61. ஒன்றுக்குப் பத்துநாள் நன்மை
உடையோன் எழுதி வைப்பான் வஸல்லம்

62. முப்பது நோன்பினுக்கும் வரும்
முந்நூறு நாள் தவாபாம் வஸல்லம்

63. அடுத்ததோர் ஆறு நாளும் நோன்பு
அறுபது நாள் தவாபாம் வஸல்லம்

64. ஆக வருஷத்திலே முந்நூற்றி
அறுபது நாளும் நோன்பாம் வஸல்லம்

65. என்று மிற்றையவனு மிவ் வடியானுக்
கெழுதுவான் நன்மை என்றார் வஸல்லம்

66. நோன்பு விதியாகும் ஷர்த்துகள்
நுவலுவேன் கேளும் என்றார் வஸல்லம்

67. மங்கா திஸ்லாமும் புத்தி
மாறா திருப்ப தென்றார் வஸல்லம்

68. நோன்பு நிறைவேற ஷர்த்துகள்
நிலையும் கேளும் என்றார் வஸல்லம்

69. நோன்பு பகல் முழுவதும் இஸ்லாம்
பரிசுத்தம் இருப்ப தென்றார் வஸல்லம்

70. ஹைளு நிபாசில்லாமல் போதக்
கேடில்லா திருப்ப தென்றார் வஸல்லம்

71. வரிசை பெருகும் நோன்பின் ரெண்டு
பர்ளுண்டு கேளும் என்றார் வஸல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

72. ஒவ்வொரு இரவினிலுங் கல்பினால்
ஒரு தரம் நிய்யத் என்றார் வஸல்லம்

73. அன்று பகல் முழுதும் நோன்பை
முறியாமல் காப்ப தென்றார் வஸல்லம்

74. சொல்லும் வரிசை நோன்பின் சுன்னத்
எட்டுண்டு கேளும் என்றார் வஸல்லம்

75. பாதி இரவுக்குப் பின் ஸஹர்
செய்வதும் என்று சொன்னார் வஸல்லம்

76. பொழுது அடைந்தவுடன் நோன்பு
திறப்பது ரெண்டாவதாம் வஸல்லம்

77. நோன்பு திறந்தவுடன் துஆ
ஓதுற மூன்றாவ தாம் வஸல்லம்

78. நான்காவது நோன்பைத் திறக்க
விருந்தினைத் தேடுவ தாம் வஸல்லம்

79. பொல்லா புறம், கோள் ஹசது
பேசாதது ஐந்தாவ தாம் வஸல்லம்

80. சதக்கா, இபாதத்துடன் குர்ஆன்
ஓதுதல் ஆறாவ தாம் வஸல்லம்

81. பஜருக்கு முன் ஜனாபத்து முழுக்கை
முழுகுவ தேழாவ தாம் வஸல்லம்

82. நப்சைக் கெடுதிகளை விட்டு
விலக்குவ தெட்டாவ தாம் வஸல்லம்

83. நோன்பை விடுவதனை வாஜிவாக்கும்
கருமங்கள் மூன்று என்றார் வஸல்லம்

84. ஹலாக்கு நெருங்கியதோர் ஹைவாளை
காப்பாற்ற விடுவ தென்றார் வஸல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

85. நிரம்பிய சூலினாலே நோவு என்றால்
நேரிலே விட முடியும் வஸல்லம்

86. பாலன் சிறு குழந்தை பால் வற்றிப்
பதறினால் விட முடியும் வஸல்லம்

87. வரிசை பெறும் நோன்பை முறிக்கும்
வகையது நான்குண்டென்றார் வஸல்லம்

88. தன்தன் துவாரங்களில் துரும்பினை
புகுத்துவதால் முறியும் வஸல்லம்

89. சத்தி வருத்துவதும் மணியைத்
தான் வெளி யாக்குவதால் முறியும் வஸல்லம்

90. சுத்தி அறிவிருந்தும் 'ஜிமா' யினை
செய்வதனால் முறியும் வஸல்லம்

91. இத்தனை பத்தியமாய் நோன்பினை
ஏந்திப் பிடித்தாயா னால் வஸல்லம்

92. கத்தன் மளுஹரிலே அவன் திருக்
காட்சியைக் காட்டி வைப்பான் வஸல்லம்

93. குற்ற மற்ற சொர்க்கத்திலே உன்னை
ஹுறுளீன் மாருடனே வஸல்லம்

94. மெத்தச் சிறப்புட னே உன்னை
மேன்மை ய தாக்கி வைப்பான் வஸல்லம்

95. வலியோ னுரைத்த தையும் நோன்புக்கு
வெகுமதி கொடுப்பதையும் வஸல்லம்

96. அறிவோ னறிவதல்லால் அதை
ஆரும் அறிய வொண்ணா வஸல்லம்

97. லைலத்துல் கத்ர் என்கின்ற அந்த
சங்கை இரவிலேதான் வஸல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98. மேலாக வந்திறங்கும் அம்லாக்கும்
மேன்மையாம் றூஹுகளும் வஸல்லம்

99. லைலத்துல் கத்ரிரவில் வந்து
நின்று வணங்கினோர்க்கு வஸல்லம்

100. ஹைறான மாதத்திலே கிடைக்கும்
ஆயிர மாதக் கூலி வஸல்லம்

101. சாயிம் எண்ணும் நோன்பாளியை அங்கே
நாயனுங் காப்பாற்று வான் வஸல்லம்

102. எல்லா அமலுக்கும் மேலான
கூலி இதற்கு உண்டு வஸல்லம்

103. நோன்பைத் தவிர உன்னை உறவாட
வேறந்த அமலைக் காண்போம் வஸல்லம்

104. ஒவ்வொரு மாதத்துக்கும் செய்யதாம்
உகந்த ரமழான் மாதமென்றார் வஸல்லம்

105. பிழைகள் பொறுக்கும் மாத மதில்
பெருங் கடல்போல நன்மை வஸல்லம்

106. பாவத்தைக் கரித்துத் தள்ளும் அந்தப்
பாக்கிய ரமழான் மாதம் வஸல்லம்

107. பாவம், கருமங்களை அழிக்கும்
பய கம்பருக் கந்த மாதம் வஸல்லம்

108. முப்பத்தில் ரஹ்மத்தையே நமக்கு
முகிலாய்ச் சொரியும் மாதம் வஸல்லம்

109. பொற்பதி சேர்த்து வைக்கும் அந்தப்
பேறான ரமழான் மாதம் வஸல்லம்

110. கற்பனையுங் கொடையு முள்ள அந்த
கற்பகத் தருவான ரமழான் வஸல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

110. இருளதைப் போக்கி வைக்கும் கல்பு
இலங்கும் ரமழா னதிலே வஸல்லம்

111. இஹ்சான் உப காரஞ் செய்யம் ரமழான்
இம்மை மறுமையிலும் வஸல்லம்

113. நஹ்சுகளை அகற்றி வைக்கும் அந்த
நன்மை ரமழானிலே வஸல்லம்

114. பிழையதனைப் பொறுப்பதற்கு நமக்குப்
பேறான மாதமதாம் வஸல்லம்

115. களையதனைத் தீர்த்து வைக்கும் நமக்கு
கத்தோன் மஹ்ஸரிலே வஸல்லம்

116. மாரிபோல் சொரியும் நன்மை நமக்கு
மகிழ்ச்சியாய் ரமழானிலே வஸல்லம்

117. உல்பத் தென்னும் மருகுதலைத் தந்து
உவப்புடன் ஆக்கி வைக்கும் வஸல்லம்

118. அல்லாஹ்வின் அருள் பெறுவீர் எல்லோரும்
அருமையாய் நோன்பு வைத்தால் வஸல்லம்

119. சைத்தானை விலங்கு பூட்டு மந்தச்
சீதேவி யான மாதம் வஸல்லம்

120. சக்கும் சர்ரு மோடும் நல்ல
சங்கை ரமழானிலே வஸல்லம்

121. செம் பொன்னூரில் பாதை திறக்க
சீராகக் காட்டி வைக்கும் வஸல்லம்

122. நம்பி னோரைக் காத்தக் கொள் எப்பொழுதும்
நன்மை சொரியும் மாதம் வஸல்லம்

123. நரகத்து வாசல் பூட்டும் நம்மை
நாடிய ரமழான் மாதம் வஸல்லம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

124. இரு கண்ணைத் தெளிய வைக்கும் நமக்கு
இன்ப ரமழான் மாதம் வஸல்லம்

125. ஒளிவினால் பிரகாச மாம் நாமே
இன்ப நோன்பு பிடித்தால் வஸல்லம்

126. அழிவில்லா மணிவிளக்காம் நித்தம்
அன்பு வை நோன்பிலே தான் வஸல்லம்

127. ஹுறுலீன் மாதரெல்லாம் நமக்கு
கூடியே நேசங்கொள்வார் வஸல்லம்

128. நரகத்தி லுள்ளவரில் பத்து
லட்சத்தை ஈடேற்றுவான் வஸல்லம்

129. இரக்கம் வைத்து நோன்பை யார்க்கும்
இன்பமாய் திப்பித்தியால் வஸல்லம்

130. கணக்கில்லாப் பலன் பெறுவீர் உமக்கு
கத்தன் கிருபை செய்வான் வஸல்லம்

131. ஜும்ஆ நாளிலேயும் பத்து
லட்சம் பேரிரக்கம் வைத்து வஸல்லம்

132. துய்யோன் நன்னாளையிலே நரகை விட்டு
உருமை விடுவானாம் வஸல்லம்

133. லைலத்தல் கத்ரிரவில் அப்படி
உருமை விடுவானாம் வஸல்லம்

134. வைலதை விட்டிறையோன் மனிதரை
வெளியாக்கி சுகந்தருவான் வஸல்லம்

135. பெருநாளிரவிலேயும் அப்படிப்
பேசி வெளியாக்கு வானாம் வஸல்லம்

136. மாத மடங்கலுக்கும் ரமழான்
மக்பூலான மாதமிதாம் வஸல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

137. தோசம், பிழை நீங்கச் செய்யும் மெத்தத்
துரப்பர வான மாதம் வஸல்லம்

138. கீசு பணமதனைக் கணக்கிட்டுக்
கார்மானஞ் செய்யச் சொன்னார் வஸல்லம்

139. நடுப்பத்தில் பிழை பொறுக்க உனக்கு
நாடு வானா மிறையோன் வஸல்லம்

140. கடுகுபோல் நன்மை செய்தால் உனக்கு
கதிக்குமா மலையளவு வஸல்லம்

141. பேருலகில் பாதுகாத்து உன்னைப்
பரகதி சேர்த்து வைக்கும் வஸல்லம்

142. ஆரும் புகழ்ந்தே துதிப்பார்கள்
அருமையாய் நோன்பாளியை வஸல்லம்

143. அறிவொழுக்க மூட்டி வைக்கும்
அருமையுள்ள மாதமிதாம் வஸல்லம்

144. நெறி நீதியாய் நடக்க உனக்கு
நேரான மாதமிதாம் வஸல்லம்

145. சாயி முக்கும் றாஹத்தான நோன்பு
சௌக்கான மாதமிதாம் வஸல்லம்

146. தாயி மாய் மகிழ்ச்சி கொள்ள நமக்கு
சங்கை ரமழானிது வாம் வஸல்லம்

147. வாகான நோன்பாளியின் வாயில்
வாடைகள் வீசு மணம் வஸல்லம்

148. நீகுல் மிஸ்க் கதுபோல வர் வாயில்
மஹ்ஷரில் வீசுமென்றார் வஸல்லம்

149. வரிசை தறவீ ஹு‘டன் வகை தொகை
வரலாறு சொல்லி நின்றார் வஸல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

150. பிரிசமுடன் குர்ஆனை உகந்து
பேணியே ஓது மென்றார் வஸல்லம்

151. அருளினார் எங்கள் நபி நமக்கு
அன்பான இத் தொழுகை வஸல்லம்

152. அருமை பளுலு முண்டாம் நமக்கு
ஆகிறத்தில் பேரு முண்டாம் வஸல்லம்

153 ஒன்றா மிரவில் தொழுவதால் தராவீஹ்
அன்று பிறந்தவன் போல் வஸல்லம்

154. ரெண்டா மிரவில் தொழுவதால் தராவீஹ்
தாய் தந்தை பாவம் பொறுப்பாம் வஸல்லம்

155. மூன்றா மிரவிலே தான் தரா வீஹால்
முன் செய்த பாவம் பொறுப்பாம் வஸல்லம்

156. நாலா மிரவில் தொழுவதால் நாலு
வேதமு மோதிய நன்மையுண்டாம் வஸல்லம்

157. ஐந்தா மிரவிலேதான் தராவீஹை
நின்று தொழுவதாயானால் வஸல்லம்

158. நெஞ்சாற றப்பை நோக்கி நின்று
நேராகப் பேசிய தாம் வஸல்லம்

159. பைத்துல் மஹ்மூரிலே தவாபு
செய்த பலன் கிடைக்கும் வஸல்லம்

160. கல்லும் புல்லும் குல்லு முனக்கு
எல்லாம் பிழை பொறுக்கும் வஸல்லம்

161. ஆறா மிரவிலே தான் தராவீஹை
அன்பாக நீ தொழுவதால் வஸல்லம்

162. நாளை மஹ்ஷரிலே உனக்கு
நன்மை மிகுதியுண்டாம் வஸல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

163. ஏழா மிரவி லேதான் தராவீஹுக்
கேகியே நீ தொழுவதால் வஸல்லம்

164. பொல்லாத் துஷ்டன் பிர்அவ் னுடன் நின்று
போர் செய்த பலன் கிடைக்கும் வஸல்லம்

165. எட்டாம் இரவி லேதான் தராவீஹுக்
கிணங்கிப் போய் நீ தொழுவதால் வஸல்லம்

166. திட்டமாய் இபுறாஹீம் நபிக்குக்
கிட்டிய கூலி போலாம் வஸல்லம்

167. ஒன்பதா மிரவில் தராவீ ஹைநீ
உண்மையாய்ப் போய்த் தொழுவதால் வஸல்லம்

168. எங்கள் நபிக் களித்த
இன்புறும் நன்மை போலாம் வஸல்லம்

169. பத்தாம் இரவி லேதான் தராவீஹை
பவுசாக நீ தொழுதால் வஸல்லம்

170. பெற்றதாய் வயிற்றில் நின்றும் அன்றே
பிறந்தவன் போலாகு வாய் வஸல்லம்

171. பத்துட னொன்றி லேதான் தராவீஹை
பாங்காக நீ தொழுவதால் வஸல்லம்

172. சுத்தம் பெற்று மௌத்தாகு வாய் என்று
துய்யோன் நபி மொழிந்தார் வஸல்லம்

173. பன்னிரெண்டா மிரவிலே தராவீஹை
பக்தியாய் நீ தொழுதால் வஸல்லம்

174. பதுறுபோல் முகமிலங்க மஹ்ஷர்
வேளையில் வருவார் என்றார் வஸல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

175. பித்துனா கபுறில் நின்று முன்னைப்
பெரியவன் காப்பாற்று வான் வஸல்லம்

176. அம்லாக்கு பதினாறிலே வந்து
அல்லாஹ் விடமே சொல்வார் வஸல்லம்

177. உம்மத் தாயுனைத் தொழுதா னிவன்
ஈடேற்றம் செய்வாய் என்பார் வஸல்லம்

178. மீளவும் சுவன பதி தனி லிவனை
மேலவன் சேர்த்து வைப்பான் வஸல்லம்

179. பத்துட னஞ்சிலே தான் மலக்குகள்
மொத்த சலவாத் துரைப்பார் வஸல்லம்

180. சொல்லும் பதினாறிலே தராவீஹை
வெல்லவே நீ தொழுதால் வஸல்லம்

181. எல்லா நரகத்தை விட்டுன்னை
வல்லோன் உருமை செய்வான வஸல்லம்

182. பத்துடன னேழிரவில் நீயும் நின்று
தொழுதால் தராவீஹதை வஸல்லம்

183. மொத்த நபி மார் 'சூறுலீன்' சூலி
சுத்த னுனக் கமைப்பான் வஸல்லம்

184. உன்னையு மீன்றெடுத்த தந்தை
தாயின் உள்ள பிழை பொறுப்பான் வஸல்லம்

185. பிள்ளையயும் மனைவி மக்கள் செய்த
பெரிய பிழை பொறுப்பான் வஸல்லம்

186. பரகதி பதவி தன்னை உனக்குப்
பத்தொன்பதா மிரவில் தருவான் வஸல்லம்

187. உன்னிலிரக்கம் வைத்து இறையவன்
உயர்த்துவான் நற்பதவி வஸல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

188. சுஹதா க்கள் கூலியுடன் உனக்கு
சாலிஹீன் கூலியுமாம் வஸல்லம்

189. ஆண்டவன் சுவர்க்கத்திலே உனக்கு
அழகான சுகந்தருவான் வஸல்லம்

190. பூண்ட பாவம் பொறுத்து உனக்கு
புதிதான நன்மை ஈவான் வஸல்லம்

191. நம்புமிருப தோடு சேர்த்த
நாடு மிரண்டி லேதான் வஸல்லம்

192. துன்ப மெல்லாம் நீங்கிடுமாம் உந்தன்
துக்கம் விலிகிடுமாம் வஸல்லம்

193. மூன்றொடு இருபதிலே தராவீஹை
முன்னின்று நீ தெழுதால் வஸல்லம்

194. வேண்டும் சுவர்க்கத்திலே இறையவன்
வைப்பானாம் ஓர் மாடம் வஸல்லம்

195. ஐநான்கும் நான்கி லேயுந் தராவீஹ்
அன்பாக நீ தொழுதால் வஸல்லம்

196. செய் பிழை முற்றுமே உனக்கு
சேரப் பொறுத்திடுவான் வஸல்லம்

197. கபுறி லுள்ள கருமங்களை உனக்குக்
கத்தவன் நீக்கி வைப்பான் வஸல்லம்

198. தீவிரமாய் இருபத் தைந்தில் சென்று
தராவீஹை தொழுதவர்க்கு வஸல்லம்

199. ஆமாம் தவாபுகளில் கணக்கு
அறுபது ஏற்றி வைப்பான் வஸல்லம்

200. இருபத்தி ஆறினிலே தராவீஹை
இணங்கிப் போய் நீ தொழுதால் வஸல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

201. சறுக்காமல் சிறாத் தின் மேலே மின்வெட்டி
மறைந்தது போல் நடப்பாய் வஸல்லம்

202. சொந்த இருபத் தெட்டின் பதவி
சொர்க்கத்தி லீவான் என்றார் வஸல்லம்

203. எல்லா ஹைறும் பெற்றான் இவன்
இருபத் தொன்பதிலே வஸல்லம்

204. ஆயிரம் ஹஜ்ஜின் கூலி இவனுக்கு
அல்லாஹ் கொடுப்பான் என்றார் வஸல்லம்

205. முப்பதா மிரவில் தராவீஹ்
முழுதுந் தொழுத வர்க்கு வஸல்லம்

206. தப்பாமல் நாயன் சொல்வான் இவனுக்குத்
தவணை முடிவில்லாமல் வஸல்லம்

207. ஹுப்பாகக் குடிக்கத் தின்னச் சொர்க்கக் கனி
கூறுலீன் கொணர்வர் வஸல்லம்

208. எப்பவும் சிறப்பே யுள்ள சொர்க்க
வீட்டிலே வந்திருங்கோ வஸல்லம்

209. தப்பாமல் வாழ்ந்திருங்கோ நீங்களும்
தரணி முடிவில்லாமல் வஸல்லம்

210. என்றென்றும் சந்தோஷமாய் ஒரு
துக்கந் துயரில்லாமல் வஸல்லம்

211. தின்ன விரும்பியது உங்களின்
திரு முன்னே வந்து நிற்கும் வஸல்லம்

212. மலஞ்சல நஜீஸு மில்லா சொர்க்கம்
வாழ்ந்து சுகித் திருங்கோ வஸல்லம்

213. பிற் பத்தில் நரகை விட்டு மிறை
பேணியே காப்பாற்று வான் வஸல்லம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

214. கற்பித்தே எங்களுக்கு முன்னே
கருத்தா யறிவித்தானே வஸல்லம்

215 நற்புத்தி யுள்ளவர்கள் நோன்பை விட
நாடு வாரோ அறியேன் வஸல்லம்

216. பித்துறாக் கொடுங்க ளென்று உங்களுக்குப்
பேணி யறிவித்தானே வஸல்லம்

217. பித்துறா க் கொடுக்காதவர் நோன்பை
வானத்தில் கொளுகி வைப்பான் வஸல்லம்

218. ஈந்தாலோ அவன் கிருபை செய்து
ஈவான் றஹ்த்தையே வஸல்லம்

219. முத்தாக சிறங்கை நாலு ஊரில்
புளங்கிய தானியத்தால் வஸல்லம்

220. ஹத்துப்போல் கொடுக்க வேணு மென்று
கத்தோன் அருளிச் செய்தான் வஸல்லம்

221. நபுசுக்கு மும்மடுமை பிள்ளை குட்டி
பெற்றிடும் மங்கை யர்க்கும் வஸல்லம்

222. எங்கள் நபியுரைத்தார் பெருநாள்
இரவுகளில் முடிக்க வஸல்லம்

223. சங்கை யுடன் கொடுத்து அதை
சரியாக்க வேண்டும் என்றார் வஸல்லம்

224. சொந்தப் பெருநாளையே ஹயாத் தாக்கினோர்
சோபனம் பெற்றார் என்றார் வஸல்லம்

225. பந்தம் போல் பிரகாஷிக்கும் பெரு
நாளா மிரவதிலே வஸல்லம்

226. பெருநாள் தொழுகையதை உகந்து
பேணித் தொழுதவர்கள் வஸல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

227. பெரியோன் றஹ்மத்திலே நின்று
பேர் பெற முங்கிடு வார் வஸல்லம்

228. ஆறு நோன்பை முப்பதின் பின் உகந்து
ஆவலாய்ப் பிடித்தவாக்கு வஸல்லம்

229. பேரு பெத்தக் கீன் என்றவர்க்கு
பெரிய பலன் கிடைக்கும் வஸல்லம்

230. கஷ்ட மமல்லாம் நீங்கி யவர்
கண்ணியமாய் வாழ்ந்திருப்பார் வஸல்லம்

231. நஷ்ட மதைக் காணாமல் வாழ
நாயனிடம் கேட்பீர் வஸல்லம்

232. ஆவியை வீணாக்கிய அப்துஸ்
ஸமதெனு மடியானின் வஸல்லம்

233. பாவத்தைப் பொறுத் தருள என்னைப்
படைத்தோ னிடங் கேட்பீர் வஸல்லம்

234. அன்னை, பிதா, மனைவி, மக்கள் என
தன்புள்ள சகோதரரும் வஸல்லம்

235. எந்தனை சேர்ந்துகந் தோர்க்கும்
எப் பிழையும் பொறுப்பாய் வஸல்லம்

236. காதலாய்க் கூடி னோர்க்கு மதைக்
கண்டே மகிழ்ந்த வர்க்கும் வஸல்லம்

237. காதாறக் கேட்ட வர்க்கும் எந்தன்
கத்தன் பிழை பொறுப்பாய் வஸல்லம்

238. பாடி முடித்தவர்க்கும் சலவாத்தைப்
படி என்று சொன்னவர்க்கும் வஸல்லம்

239. நாடிய முஸ்லிம் கட்கும் அல்லா
நன்மை மிகச் சொரிவாய் வஸல்லம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

240. ஆதியுன் ஹப்பு மீதும் இன்னும்,
ஆள் அ சுஹாபு மீதும் வஸல்லம்

241. நீதி நோன்பைப் பிடித்தோர்க்கு முந்தன்
நித்தம் றஹ்மத்தருள் வஸல்லம்

242. தேசந் 'திரிகோண மலை' தனைச்
சேர்ந்த தோர் 'நாச்சி நகர்' வஸல்லம்

243. வாசஞ் செய் மஹ்முதரின் முதல்
வளர்தவப் புத்திரனாம் வஸல்லம்

244. தாசன் அப்துஸ்ஸமதால் வரும்
தப்புப் பிழையகற்றி வஸல்லம்

245. தோசம், பிழைகளையு முள்ள
துன்பங்கள் நீக்கி வைப்பாய் வஸல்லம்

246. எனக்கும் தாய் தந்தையர்க்கும் இன்னும்
இல்மைப் படிப்பித்தோர்க்கும் வஸல்லம்

247. என்னில் படித்தவர்க்கும் நீயும்
இருலோகமும் அருள் புரிவாய் வஸல்லம்

248. கடைசி தினத்திலேயும் என் நாவில்
கத்தோன் திருக் கலிமா வஸல்லம்

249. நடனம் புரிய நாவில் ஆங்கே
நல்லோர் மலக்கு வர வஸல்லம்

250. உடனே என் ஆவியது நல்ல
உண்மை முஸ்லி மாக வஸல்லம்

251. ஏக அருள் புரிவாய் எனக்கு
இருலோக பாக்கியமும் வஸல்லம்

252. பாலம் சிறாத்திலேயும் பின்னால்
பவுசான மீஸா னிலும் வஸல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

253. நீளம் ஹொழதிலும் எனக்கு
நின்று தவனந் தீர்ப்பாய் வஸல்லம்

254. மஹ்ஷர் வெளிதனிலும் வரும்
ஹிஸாபுக் கேள்வியிலும் வஸல்லம்

255. பிசகு ஒன்றுமில்லாமல் நன்மைச் சிட்டை
வலக்கரத்தி லீந்தருள்வாய் வஸல்லம்

256. நோன்பை பிடித்தவர்க்கும் குர்ஆனை
ஓதி முடித்தவர்க்கும் வஸல்லம்

257. பாங்கு உரைக்கு முன்னெ பள்ளிக்குள்
விரைந்தங்கு சென்றவர்க்கும் வஸல்லம்

258. சதக்கா வழங்கி னோர்க்கும் சக்காத்துத்
தான் பார்த்துக் கொடுத்தவர்க்கும் வஸல்லம்

259. பித்துறாக் கொடுத்த வர்க்கும் இருலோகப்
பித்துனா நீக்கி வைப்பாய் வஸல்லம்

260. வீண் பேச்சுப் பேசாம லிருந்து
விரைந்தமல் செய்தவர்க்கும் வஸல்லம்

261. தீன் துலங் காஹிறத்தில் நடக்கும்
சிறப்பதை என்ன சொல்வேன் வஸல்லம்

262. இத்தனை நன்மைகட்கும் பல
சத்துரு உண்டு என்றார் வஸல்லம்

263. சுத்த நினைவு கொண்டு அது
சேராமல் காரு மென்றார் வஸல்லம்

264. பொய், புறம், கோள் ஹஸதும் இன்னும்
பெருமை முகத்துதியும் வஸல்லம்

265. செய்யுமோர் நன்மைகளை யார்க்கும்
சொல்லியே காட்டுறதும் வஸல்லம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

266. வட்டி எடுக்கிறதும் அதை
மக்கள் தின்று வளர்கிறதும் வஸல்லம்

267. முட்டிக் குனிந்தவர்போல் இறை முன்
முகங் கருக நிற்கிறதும வஸல்லம்

268. பணத்தினைச் சம்பாதித்து அவர்
பதக்கியே வைக்கிறதும் வஸல்லம்

269. குணத்தி லுயர்ந்தவரை மெத்தக்
கொடூரமாய்ப் பேசுவதும் வஸல்லம்

270. பிறர்மனைக் காசை கொண்டு அவர்
பொது வு களைக் கூட்டுறதும் வஸல்லம்

271. மறை மொழிக்கு மாற்ற மென்று
மன்றாற் றுரை செய்தான் என்றார் வஸல்லம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜர்மன்

# வெள்ளிப்பாட்டு

அப்துஸ்ஸமது ஆலிம் புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜர்மன் வெள்ளிப்பாட்டு

## காப்பு

சீரணியும் பூவுலகில் சேர்ஜர்மன் வெள்ளிஎனும்
பேரணிவோன் செய்தருமப் பிரபல்யங் - கூறுதற்கு
நேரணியும் பல்படைப்பும் நீ படைத்துப் பன்னாளும்
காரணமதாய்க காக்கும் கத்தனே காப்பாமே.

## விருத்தம்

வங்கமிரசித மெண்ணுமோர் வெள்ளி சீமாட்டிகளின்
அங்கமணி பணிக்கல்லால் வறிஞ்ஞுவர்க்கல்ல வென்றே
எங்கும் பகர் மொழி கேட்க ஜர்மன் வெள்ளி இவ்வுலகில்
தங்க வெளுந்த தெல்லாம் வறிஞ்ஞர் செய்தருமமிதே

## – பதம் – பல்லவி –

ஜர்மன் வெள்ளி விடுவதெல்லாம் ஐயமெடிமானே - இன்னாள்
ஜர்மன் வெள்ளி தொடுவதெல்லாம் நாயமெடிதேனே

## – அநுபல்லவி –

ஜர்மனையுந் தருமமென்றே சாற்றுவோமடி - தோழி
ஜர்மன் செய்யும் தருமத்துக்காய் போற்றுவோமடி - துடி
தாரணிதனிலிதுவே நல்ல நேரம் தாங்களும் ஜர்மன் வெள்ளியுமொரு
வாரம் சீரணிபல பணி அணி பூணாரம் செய்வதெல்லாம் நமக்கே
உபகாரம் (ஜர்)

## – சரணங்கள் –

1. எனது கொண்றைக் கொருசெம்புக் கூரில்லை என்றேதேடி - முன்னாள்
ஈக்கிக் குச்சை மாட்டிக் கொண்டு இருந்தேநடி வாடி
மனம் நிறைந்த ஜர்மன் வெள்ளி மன்னன் வந்து கூடி - கொன்றை
மாலை முப்பூ கொன்றைக்குத்தி தலைநிரம்பச் சூடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய குளைக் காதினுக்கும் பிலுக்கலுக்குத் திணக்கி - அர
சிலைச் சங்கிலி தூக்கி நல்லாய்த் துலக்கமுற மினுக்கி
பனிமதி போலிலங்க இருகாதினிலுந் தூக்கி - என்றன்
பல்விளக்கிக் கண்ணாடி தன்னில் முகநோக்கி - (துடி)
பார்த்த பின்னழகு கண்டே களிகூர்ந்தேன் - பாங்கியுருடன் மன
மகிழ்வுறச் சேர்ந்தேன் - ஏற்றிமணமணப் பந்தலில் போந்தேன்
இருத்தி வெள்ளிலை பிளவீந்திடத் தேர்ந்தேன் - (ஜர்மன்)

2. இன்னமும் நான் பிறந்து வயதிவ்வளவானேனே - ஒரு
இரும்புவளைத் துரும்பெனுமென் கையிலணிந்திலனே
அன்னையரே ஜர்மன் வெள்ளி அரசன் வந்துதானே - கையில்
அடுக்கடுக்குக் காப்பு முன்பின் காப்பு மணிந்தேனே
சின்னச் சின்ன விரல்களெல்லா மின்னி மின்னித் துலங்க -
நல்லா
செய்தெடுத்த மோதிரங்கள் வெய்யவன் போலிலங்க
கன்னி மின்னக் காலாளிபீலி தண்டைகொலுசும் - இரு
கால் நிரம்ப அணிந்து வெள்ளி காய்த்த மரமானேன் (துடி)
கணடரியா லிதற்கொரு துணையாருமிலையே-
கணவினருளை பொரு சதக்காசுமஜியையே-
சதக்காசுமிலையே - உடையதெல்லாங் கூலி
உலக்கையிநிலையே
திண்டளித்தினா லொன்றுமிலையே (ஜர்மன்)

3. அருமை மச்சி எனக்குள்ளதோர் ஆண் மகன்தானே - இனி
ஆறல்ல நூறல்ல வென்றதை யான் வளர்த்தேனே
இரவ பகலிருந்து பண்பாய் இளைத்து விற்றேனே - பிள்ளைக்
கிசைந்தபணி ஆவரணமிடத் துணிந்தேனே
சிறு விரற்குக் கணையாளி கரவளையல்க்காறை - வண்ணச்
சிறு சலங்கை கோர்த்தரஞ்ஞாள் சிற்றிடையிலணிந்து
இருபதத்தில் கலகலென தரிசுதண்டை புனைந்து - மன
எண்ணமெல்லாம் குளிர்ந்த மகன்தன்னை அள்ளியணைந்து
(துடி)
என்றென்றுமெனக்கிது பெரிய சந்தோசம் என்னைச் சந்திப்போர்க்
கெல்லாம் நான் பெரும் நேசம் வென்றிகொன்றோயுயர்
ஜர்மனிதேசம்
வெள்ளி செய்த நயமிதுவே விசுவாசம் (ஜர்மன் வெள்ளி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னினிய தோழியரே இன்று நாளொன்றன் மனை
தன்னில்வர எண்ணி எண்ணித் தார் பெயர்க்க - நேரமில்லை
மன்னவனாரென் கணவன் வயல் பார்க்கப் போனதனால்
உன்னை நான் பார்ப்பதர்க்காய் ஓடிவந்தேன் மச்சினியே

வாவெனது கண்குளிந்த மச்சினியே மாங்குயிலே
பாயிலிரு வெள்ளிலையும் பாக்கு மிதனையருந்து - ஓவியமே
இன்னேரம் ஒன்மனை விட்டென்மனைக்கு
பூவயரே வந்த செய்தி புகழுவாய் தோழியரே

(தர்க்கத்தரு)

1. வண்ணக்கிளியே உன் கொன்றையிலே - கொடி
மல்லிகை பூத்து மலர்ந்தாப்போல் - ஒளி
மின்னித்துலங்கி இலங்கும் பணி - நல்ல
வேலை இதேதடி என்மானே
வஞ்சிக்கொடி இடை அஞ்சுகமே - கொன்றை
மாலையும் பூக்கொன்றைக் குத்திகளும்
மிஞ்சிக் கொடுத்தெந்தன் கொன்றைப்பணி - இதை
வேண்டி அணைந்தேனடி தேனே - இதை

2. காதுப்பணி இது போலொரு நாளும் - யான்
கண்டறியேன் புதுமோடி இது - உனக்
கேது முகத்திற்கு லட்சணமாக
இலங்கித் துலங்குதடி மானே அது
அன்னப் பெண்ணே இரு காதினுக்கும் - பூ
அலுக்குத்தரிசிலை சங்கிலியும் - புது
வண்ணமாய்ச் செய்தெந்தன் காதுக்கிணங்கிட
வாங்கியணிந்தேனடி தேனே - யான்

3. முக்காட்டுக்காறி முகத்தழகி உந்தன்
மூக்குக்கு மூக்குத்திதானணிந்தால் - முகம்
ஒக்கத் துலங்கி இலங்குமதை நீ
ஒருமித்து வாங்கி அணிமானே - அதை
மூக்குத்தி செய்வது பொன்னல்லவோ - அது
முத்து நவமணி கல்லல்லவா - பின்னால்
ஆகட்டும் பார்ப்பமடி தேனே - பின்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. முத்துப்பதித்த முகத்தழகி உந்தன்
முன்கை இரண்டு மிலங்குதடி - அதில்
சித்திரவேலை பணிகளெல்லாம் - நல்ல
செப்பமிதேதடி என்மானே - நல்ல
ஏழடுக்குக் காப்பு கூட்டமொன்றும் - அதர்க்
கேத்த முன்பின் காப்புச் சொடுரண்டும - எந்தன்
யாழை நிகர்ந்த மன் கை தனக்கு - இதை
யான் வாங்கி இட்டதடி தேனே - இதை

5. காட்டுக் கிளாக்கொடி பூத்ததுபோல் உந்தன்
கைவிரலெல்லாம் ஒரே வெளிச்சம் - இதை
ஆட்டி அலங்கரித்துப் பார்த்தால் நல்ல
அதிசயம்தானடி என்மானே - நல்ல
முன்கை வளையல்கள் தானணிந்தால் - நல்ல
மோதிரம் வேணுமென்றே நினைந்து - இன்னும்
என்கை விரல்களுக்கிணங்கிடவே சமைத்
திட்டபணி மதடி தேனே - சமைத்

6. பாதவிரல்கள் பளபளன்றே அதைப்
பார்த்த விளிகள் வளுக்குதடி - இந்தப்
பூதலமீதினில் பூண்டிருக்கும் பணி
பூணாரம் ஏது சொல்வாய் மானே - பணி
காலாளிபீலி மயிலடியும் - கணைக்
காலுக்குத் தண்டை கொலுசுகளும் - இந்த
வேலைப்பணி பூணாரங்ளெல்லாம் - ஜர்மன்
வெள்ளியால்செய்ததடி தேனே - ஜர்மன்

7. ஆண்பிள்ளை வீண்பிள்ளை அல்லவடி - பிள்ளைக்
கானபணி எல்லாம் நல்லதடி - பூவில்
காண்பது தன்பிள்ளை செல்வமெல்லாம் - தாயின்
கண்ணுள்ள போதல்லவோ மானே - தாயின்
கண்ணுள்ள போதெந்தன் பிள்ளை செல்வம் - தனைக்
காணவென்றே மனதாசைகொண்டு - நல்ல
பண்ணும்பணி ஆபரணமெல்லாம் - இட்டுப்
பார்த்து மகிழ்ந்தேனடி தேனே - இட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இன்னிசை)

என்றோழி உன்னையும் உன்னிள மகனையும் பார்த்து
சந்தோசமானேன் என்தன் மனைக்குப் போவதற்கு
பிந்தாது நுத்தரவு பிரியமுடனே எனக்குத்
தந்தனுப்புந் தோழியரே சலாமுனக்குச் சொன்னேனே

(இதுவுமது)

பாலை நிகர்த்த மொழிப் பாவையரே நான் சாயச்
சேலையொன்று வாங்கி என் சிற்றிடையிற் கொய்துடுத்து
காலையுன்றன் வாயல் வந்து கண்டு கொள்வேன் போய்வாரும்
ஏலங் குழளியரே இனியசலா முன்றனக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN 955-8806-11-0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org